மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமசந்திரன்

மூன்றுவது வால்யூம் விக்கிரம வருஷம் சித்திரைப் பகுதி

15—4—1940.

விஷய ஸூசிகை.

விஷயம்:			பக்கம்
1. சில்பஸ்ரீ வாசகர்களுக்கு	...	பத்திராதிபர்	... 193
கவிதா விமர்சம்			
1. வாழ்த்து	...		... 194
2. கவிதையின் பெருமை	...	'மாயக்கூத்தன்'	... 195
3. குறிப்பாலுணர்த்தல்	...	ஸ்ரீ. வே. திருப்பதி நாயுடு	... 196
ரேடியோப் பகுதி			
1. ரேடியோக் கலை	...	'விசாரதன்'	... 197
பெண்டிர் பகுதி			
1. ஜனக நந்தினி (நாடகம்)	...	'ஸோப்பனை'	... 199
சிறுவர் பகுதி			
1. குழந்தைகள்	...	'பாப்பா'	... 203
புதுக் கற்பனைகள்			
1. ஐயோ பாவம்! விசாலாட்சி!	...	'வில்லன்'	... 205
2. அடிசிற்கினியர்	...	ஸ்ரீ மா. கிருஷ்ணன்	... 213
3. சம்பு நாராயணபுரம்	...	'ஸ்ரீ'	... 216
4. மானஸீ (நாடகம்)	...	ஸ்ரீ K. வரதாச்சாரி, B.A., B.L.,	... 220
5. வாழ்க்கை தாங்கி	...	ஸ்ரீ. மஞ்சேரி ஸோ. ஈஸ்வரன் : ஸ்ரீ. வே. ராகவன்	... 229
6. சக்திக் குழவி	...	காருடு காத்தான் ஸ்ரீ. ராமநாகப்பன்	... 232
கீதப் பகுதி			
1. தமிழ்க் கீர்த்தனம்	...	ஸ்ரீ. ச்யாமா சாஸ்திரிகள்	... 233
2. ,,	...	ஸ்ரீ. சுப்பராய சாஸ்திரிகள்	 234
மொழிபெயர்ப்புப் பகுதி			
1. மறுமலர்ச்சியின் மூன்று படிகள்....		ஸ்ரீ அரவிந்தர் : ஸ்ரீ. P. கோதண்டராமன்	... 235
2. கதைக் கடல்	...	ஸ்ரீ. வே. ராகவன்	... 240
3. புராணச் சிறு கதைகள்	...	'மா பா'	... 243

அனுஷ்டானப் பகுதி.

1. விக்கிரம வருஷம் ... 'கௌசிகன்' 247

புஸ்தக விமர்சனம்

1. இராமாயண வெண்பா ... அகஸ்தியதாஸன் ... 251

2. இராமாயணப் புகழ் (2) தோத்திரத் திரட்டு (3) அச்சுதானந்த சுவாமிகள் பதிகம் ... துளகன் ... 253

3. பொருளாதார நூல்—முதற் புஸ்தகம் (2) இந்திய கிராமப் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள் (3) நாணயமாற்று .... வே. நா. ... 254

மாதக் குறிப்புக்கள் " ... 255

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரூ. 3.

சில்பஸ்ரீ வாசகர்களுக்கு.

'சில்பஸ்ரீ' வாசகர்கள் அனைவருக்கும் 'புது வருஷம் பெரிதும் இன்பம் பயக்க' என்று நன்மொழி கூறுகிறோம். 'சில்பஸ்ரீ'க்குப் பதினைந்து திங்கள் நிறைந்ததால், இவளும் அஞ்சனவண்ணனைப் போல இவளை வளர்க்கும் 'தாயர் மகிழ ஒன்னார் தளர'த் தளர் நடை நடக்கும் பருவம் எய்தி, பல புதிய அணிகள் 'திகழ்ந்தெங்கும் புடை பெயர' நடை கற்கின்றாள்.

'சில்பஸ்ரீ'யைப் போற்றி வரவேற்கும் ஒரு அன்பர், "மக்களுள் பெரும் பகுதியினர் பெண்டிரும் குழந்தைகளுமே; அவர்களுக்கென விசேஷப் பகுதிகள் இப்பத்திரிகையிலும் அமைதல் உசிதமாகும்" என்று தம் கருத்தை வெளியிட்டனர். பொது மக்களுக்குக் கலா விலாசங்களால் இன்ப மூட்டப் பிறந்த 'சில்பஸ்ரீ'க்கு பெண்டிரென்றும் சிறுவரென்றும் வித்தியாசமில்லை; ஆயினும், பெண்டிருக்கும் சிறுவருக்கும் விசேஷ இன்பங்களைத் தரும் பகுதிகளை அமைப்பது அணிகலன் வேண்டாத 'சில்பஸ்ரீ'க்கும் அணிகளிட்டு மகிழ்வதை யொக்குமன்றோ?

ஆதலின், இச் சித்திரைப் பகுதியிலே பல நூதன அம்சங்கள் அமைந்துள்ளன. ரேடியோப் பகுதி, பெண்டிர் பகுதி, சிறுவர் பகுதி தொடங்கப் பெற்றுள்ளன. பழைய பகுதிகளிலும் சிற்சில புதுமைகளைக் காணலாம். மொழிபெயர்ப்புப் பகுதியிலே "மா. பா" என்பவர் எழுதியனுப்பிய "புராணச் சிறு கதைகள்" உண்மையிலே வடமொழி நூலின் பழைய மொழிபெயர்ப்போ, அல்லது முழுவதும் புதுக் கற்பனையோ, நாம் நிருணயிக்கக் கூடவில்லை. வாசகர்களே வாசித்து அறிந்து கொள்ளலாம் என்று இவ் வாராய்ச்சியிற் புகாது, அனுப்பியவரின் குறிப்பையே கொண்டு இவற்றை மொழி பெயர்ப்புப் பகுதியிலே சேர்த்துள்ளோம். விஷயத்தின் ரஸ்யதை நமது நோக்கமே யொழிய, அது புதிதோ புராதன விஷயமோ மூலமோ மொழி பெயர்ப்போ என்னும் ஆராய்ச்சி நமது நோக்கம் அன்று. கலா விநோதங்களிலே ஆடவரினும் பெண்டிரும் பாலருமே பெரிதும் ஈடுபடுபவர். ஆதலின் அவர்களுடைய ரஸ மிக்க ரசனைகளையும் 'சில்பஸ்ரீ' எதிர்பார்க்கிறாள். 'அவர்களுக்கு என்றே அமைந்த விசேஷப் பகுதிகளிலே யன்றி பிற பகுதிகள் அனைத்திலுமே அவர்கள் ஈடுபட முன் வருவார்கள்' என்று 'சில்பஸ்ரீ' எதிர்பார்க்கிறாள்.

மேலும், சில்பஸ்ரீயிலே யுள்ள பெண்டிர் பகுதிக்கும் சிறுவர் பகுதிக்கும் ஒரு விசேஷ குணம் அமையவேண்டும் என்று கருதுகிறோம். தற்காலத்திலே பெண்டிரோ குழந்தைகளோ ஆடுவதற்கும் பாடுவதற்கும் ஏற்ற நாடகங்களும் பாட்டுக்களும் அதிகம் இல்லை. பெண் பாடசாலைகளிலும் பெண்டிர் கூட்டங்களிலும் உல்லாசமாகப் பாடவும் ஆடவும் யோக்கியமான பாடல்களையும் நாடகங்களையும் இப் பகுதிகளிலே பதிப்பிக்க விரும்புகிறோம். இவற்றை இயற்றுவோர் பெண்டிராகவோ சிறுவராகவோ இருக்கவேண்டு மென்ற நியமம் இல்லை. எத்தனையோ ஆடவர்களுக்கு பெண்டிர் மனப்பாங்கும் எத்தனையே முதியவர்களுக்கு பிள்ளை மனப்பாங்கும் அமைந்திருப்பதை யாரும் அறிவர். பிள்ளை மனப் பாங்கைப் பெற்றுக் கவிபாடுவதில் ரவீந்திரநாத தாகுர் வெகு சமர்த்தர். பெண்மை நிலை பெற்றுப் பாடுவதிலே பெரியாழ்வாரையும் நம்மாழ்வாரையும் விடச் சிறந்தவர் யார்? உண்மைக் கலைவாணர் தங்கள் தியான சக்தியாலும் ஸமாதிஸித்தியாலும் எவ்வித மனப்பாங்கையும் பெற்று, உயிர் ததும்பும் விசித்திர சிருஷ்டிகளை என்றும் அழியாத விதமாக சிருஷ்டிக்க முடியும். இவ்வகையிலே பழகித் தேர்ச்சிபெற விரும்புவோர்களை யெல்லாம் இப்பகுதிகள் வரவேற்கின்றன.

கவிதா விமர்சப்பகுதி ஒரு வாழ்த்துப் பாடலோடு தொடங்குகின்றது. அதனைப் பாடியுதவிய நண்பருக்கு, நாம் அவருடைய பெயரை வெளியிடுவதை அவர் விரும்ப வில்லையெனினும், நம் நன்றியைச் செலுத்துகிறோம்.

பத்திராதிபர்.



கவிதா விமர்சம்.

வாழ்த்து.

விக்ரமம் வந்தது. வாழ்த்துகம் அதனை.
அதுதான் வேண்டும். அஃதில் லாமல்
நம்மவர் நனியும் நலிகின் றனரால்.
விக்ரமம் கூடின் விழைவன வெல்லாம்
முற்றுப் பெறுமெனக் கற்றோர் சொற்றனர்.
“நெற்பல பொலிக, பொன்பெரிது சிறக்க.
விளைக வயலே, வருக இரவலர்.
பால்பல ஊறுக, பகடுபல சிறக்க.
பகைவர் புல் ஆர்க, பார்ப்பா ரோதுக.
பசியல் லாகுக, பிணிசேண் நீங்குக.
வேந்துபகை தணிக, யாண்டு பல நந்துக.
அறநனி சிறக்க, அல்லது கெடுக.
அரசு முறை செய்க, களவில் லாகுக.
நன்று பெரிது சிறக்க, தீதில் லாகுக.
மாரி வாய்க்க, வளநனி சிறக்க.”
சில்ப ஸ்ரீயின் சிறுவிரற் சிலம்பின்
மணிபர லெல்லாம் மாண்பிற் கூடிக்
கலீர் கலீனரே ஒலிக்கும் இன்னொலி
யலைகள் அருந்தமிழ் அருந்தும் அன்பரின்
செவிவா யாக நெஞ்சுகள னாகப்
புகுந்து நின்று புரிக இன்பம்.
பொலிக சிற்பம். பொலிக
இன்பம். இதனை விழையார் எவரே?

கவிதையின் பெருமை.

(மாயக்கூத்தன்.)

காவியங்களுக்கு இலக்கணம் வகுக்கத் தொடங்குமுன் வடமொழி ஆசிரியர் தண்டி என்பார் காவியத்தின் பெருமையை இவ்வாறு விளக்குகிறார்: காவியம் என்பது அற்புதமான தோர் கண்ணாடி. சாதாரணக் கண்ணாடியின் முன் ஒரு வடிவம் தோன்றினால், கண்ணாடியிலே அதன் பிரதிபிம்பம் தோன்றுகிறதல்லவா? இவ்வாறு தோன்றும் பிரதிபிம்பம் ஆடியின்முன் மூலப்பொருள் உள்ளவரையிலே தான் தோன்றும். அது மறைந்ததும் பிரதிபிம்பமும் மறையும். காவியக் கண்ணாடியிலே தோன்றுவது புகழ் கொண்டு செய்த பிம்பம். "ஆதிக் காலத்திலே இருந்த பேரரசர்களின் புகழ்ப் பிம்பங்கள் எல்லாம், அவ்வாதி அரசர்கள் மறைந்து வெகு காலமானபோதிலும் இப்பொழுதும் காவியங்களாகிய அற்புதக் கண்ணாடிகளிலே பதிந்து மறைவுறாமல் பிரகாசிக்கின்றன; இவ்வதிசயத்தைப் பார்" என்கிறார் தண்டியாசிரியர்.

இவ்வாறு கவிகளால் சிருஷ்டிக்கப் பெறும் புகழ் வடிவங்களான உலகத்தை காவிய வுலகம் என்றும் அங்கு இவ்வடிவங்கள் பலவும் உயிர் பெற்று அமரத்தன்மை பெற்று அழியாது விளங்குகின்றன என்றும் சொல்வதுண்டு. இதுகொண்டே கவிகளைப் பிரமனுக்கு ஒப்பிடுவது மரபு. பிரமனுடைய நாவிலே கலைமகள் நித்திய வாசம் செய்வதுபோலவே கவிகளின் நாவிலேயும் அவள் வசிப்பவள் என்று உவமிப்பதுண்டு. "இவ்வுவமை பொருந்தாது; பிரமன் பஞ்ச பூதங்களைக் கொண்டு செய்யும் சிருஷ்டிகளெல்லாம் காலக்கிரமத்திலே அழிந்து போகும் இயல்பின; கவியொருவன் புகழ் மொழிகளாலே ஆக்கும் சிருஷ்டிகள் அனைத்தும் என்றும் அழியாத நிலைமை பெற்றுப் பிரகாசிக்கின்றன" என்று கருதுவர் குமர குருபர சுவாமிகள். இக்கருத்தை அவர் விளக்கிக் காட்டும் வெண்பா வருமாறு:

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன் செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

'கலை மகள் வாழ்க்கை முகத்தது' என்பது பிரமனுக்கும் தமிழோர்க்கும் ஒப்பு. ஆயினும், பிரமன் இவர்களை ஒவ்வாதது ஏன்? அவன் பஞ்ச பூதங்களைக் கொண்டு வெற்றுடல்களைச் செய்கிறான். பிரம சிருஷ்டிக்கு உபதான காரணமாயிருப்பது பஞ்ச பூதங்கள்; கவிகளின் கதாபாத்திரங்கள் எல்லாம் புகழ் மொழிகளை உபதான காரணமாகக் கொண்டு எழுவன. இவ்வாறு புகழையே முதற் காரணமாகக் கொண்டு இவர்கள் தோற்றுவிக்கும் சிருஷ்டிகள் என்றும் அழியாது இலங்குகின்றன. பிரமன் ஒரு ஜீவனுக்கு அளிக்கக் கூடியது வெற்றுடம்பே. உத்தமகவி ஒரு ஜீவனுக்கு அளிக்கக் கூடியது நல்லணிகள் பலவும் பூண்டு என்றும் விகசித்த வண்ணமாய் விளங்கும் சொற்களால் ஆன புகழ் உடம்பு. எத்துணை வளமை பொருந்தியன பரமகவிகளின் இன்சொற்கள்!

'ஏனைய சொற்களினும் தமிழ் மொழிக்கு ஓர் ஏற்றம் உண்டு' என்பதையும் குமர குருபர சுவாமிகள் குறிப்பால் உணர்த்துகின்றார். வடமொழி வேதங்கள் பகவானைத் தொடர்ந்து சென்று அவனை அடைய இயலாது மீண்டனவன்றோ? 'சென்றடைய முடியாத தெய்வத்தையும் தன் சொற்களின் ஆற்றலால் எவருக்கும் புலனாம்படி வழங்கும் வண்மை தமிழ்க்கே உரியது' என்பது அவர் கருத்துப் போலும். ஆக்குவோன் திருமாலின் உந்தியிலெழுந்த மலரில் வந்த பிரமன்; 'தேவும் எப்பொருளும் படைக்க' என்றே படைக்கப் பெற்றவன்; கலைமகளும் அவனுக்குத் துணையாய் நிற்கிறாள்; உபதான காரணங்களோ ஐம்பெரும் பூதங்கள்; ஆயினும் அவன் படைப்பு அழிந்து அவலமாகின்றது. கவிகளோ வெறுஞ் சொற்களைக் கொண்டு படைப்பவர்கள். 'இவர்களும் கலை மகளைத் தங்கள் நாவிலே கொண்டு சதா மகிழ்வர் எனினும், பிரமனை விடக் கைதேர்ந்தோராய் இவர்கள் அழியா மூர்த்திகளைப் படைப்பது எதுகொண்டு?' என்ற வினாவிற்கு குமர குருபர சுவாமிகள் "வளம் மிக்க தமிழின் சக்தியைத் துணை கொண்டே" என்று விடையளிப்பர் இவ்வெண்பாவிலே.

குறிப்பாலுணர்த்தல்

(வ. திருப்பதி நாயுடு, இடிகரை.)

அடர்ந்த பசுமை தங்கிய குளிர்ந்த விருக்ஷங்கள் நெருங்கிய தோப்புகள் சூழ்ந்த கோதாவிரி நதிக் கரையில் கதிரவன் மேற்கு திக்கில் சாயும் நடுப்பகலில் சீதாப் பிராட்டியும் ஸ்ரீ ராகவனும் அந் நதியின் அழகை கவனித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தெய்வத் தன்மை பொருந்திய அம்மஹா நதியானது அலைகளாகிய தனது நீண்ட கரங்களால், நீலோற்பலம் அல்லி, செந்தாமரை வெண்டாமரை செங்கழுநீர் முதலிய அழகிய நறுமணமிகுந்த புஷ்பங்களை வாரிக்கொண்டு வந்து சக்கரவர்த்தித் திருமகனுடையவும் திருமகளுடையவும் திருப்பாத கமலங்களில் அருச்சிப்பது போல் இருந்தது. பலர் அந்நதியில் வந்து மூழ்கி தர்ப்பணம் சங்கல்பம் சிரார்த்தம் முதலியன செய்து கழித்ததீ வினைகள், எல்லாம் ஜகத்மாதா பிதாக்கள் தனக்குச் சேவை தந்து தன்னைப் பரிசித்தலால் நசித்துப்போயின என்று ஆர்வங்கொண்டு அங்ஙனம் அருச்சித்து போலும். மேலும் லோகமாதா பிதாக்கள் மனுஷ்யாவதாரம் செய்து கற்கள் முட்கள் நிறைந்த நிலத்தின் பாதங்கள் நோவ நடத்தலை நோக்கி அழுவதுபோலு மிருந்தது அவ்வாற்றின் அலைகளினுடைய சப்தம். நீண்ட தண்டுகளையுடைய அழகிய தாமரை மலர்களின் மேல் ஆணும் பெண்ணுமாகிய சக்கரவாளப் பறவைகள் சயனித்துக்கொண்டிருப்பதை ஸ்ரீ ராகவன் பார்த்து சீதாப்பிராட்டியை நோக்குகிறார். பிராட்டியும் அந் நதியில் பிரகாசம் பொருந்திய ரத்னங்களைக் கொழிக்கும் விசாலமான மணல் மேட்டுகளைப் பார்த்து, நீண்ட கோதண்டத்தைத் தாங்கிய ராகவனது அகன்ற திருத்தோள்களை நோக்கினாள். சர்வோத்தமனாகிய ஸ்ரீ ராகவன் அவ்வாற்றின் கரையில் உலாவும் அன்னங்களின் நடையழகைப் பார்த்து மான் போன்ற மருண்ட பார்வை யுடையவளும் அவ்வன்ன பக்ஷிகளை யொத்த நடையையுடையவளுமான சீதையைப் பார்த்து இளநகை செய்தார். மாதர் திலகமாகிய சீதையும் அந் நதியிலே புனல் அருந்தி மீளும் ஆண்யானைகளின் நடையினைக் கண்டு புதிதாக ஒரு புன்முறுவல் செய்தாள். இவ் விஷயத்தை அடியிற் கண்ட கவிதனில் கம்பநாடர் விவரிக்கிறார்.

நாளங் கொள் நளினப் பள்ளி நய
ங்களினைய நேமி
வாளங்களுறைவ கண்டு மங்கைதன் கொங்கை
நோக்கும்;
நீளங்கொள் சிலையோன் மற்றை நேரிழை நெடிய
நம்பி
தோளின்கண் மனம் வைத்தன்ன சுடர்மணித்
தடங்கள் கண்டாள்.
ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தமன் வுழை
யளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர்
முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்து நீருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல்
பூத்தாள்.

இதன் பொருள்:—

“தாங்கள் எதற்காக மனுஷ்யாவதாரம் செய்தார்களோ? அதை முற்றுவிப்பான் வேண்டி அதிசீக்கிரத்தில் ராவணன் தங்கையாகிய சூர்ப்பநகை இங்கு வரப் போகிறாள்” என்றும் இது முதற் கொண்டே “அவதாரத்துக்குத் தக்கபடி, நடத்தையில் காட்டி கொள்ள வேண்டி இருவரும் பிரியவும் நேரிடலாம்” என்றும் ஊகித்து குறிப்பால் ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொள்ளுகிறார்கள். அதாவது: “உனது மான் போன்ற உன்னதமான பார்வையின் அழகையும் ஸ்தன பாரங்களின் அழகையும் நடையழகையும் பார்த்துக் கொண்டு போய், ராவணனுக்கு சொல்ல சூர்ப்பநகை வருவாள்” என்பதை ஸ்ரீராமர் இக் குறிப்புகளால் சூசிப்பிக்கிறார். அதே போல் சீதாப் பிராட்டியும், “அப்படி வரக்கூடிய சம்பவங்களை நிவர்த்திக்க உங்கள் இடமகன்று புலம் பொருந்திய திருத்தோள்களும் உமது நீண்ட திருக்கரத்தில் பலமிகுந்த கோதண்டமும் ஆண் யானை போன்ற நடை பலமும் இருக்கிறதல்லவா?” என்பதை சூசிப்பிக்கிறார். அடுத்த இரண்டாவது கவியில் சூர்ப்பநகையின் பிரவேசம் ஆரம்பமாகிறது.

நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்
மேலை நாளுயிரோடும் பிறந்து தான் விளை
காலமோர்ந் துடனுறை கடிய நோயனாள்.

இவ்வாறு கம்ப சூத்திரங்களில் அநேக மறை பொருள்கள் இருப்பதை உற்று நோக்கிக் காணலாம்.

ரேடியோப் பகுதி.

ரேடியோக் கலை.

(விசாரதன்.)

நவீன சாஸ்திர ஆராய்ச்சியாற் கண்ட அதிசயங்களுள் ரேடியோ என்பது முக்கியமானது. இதை உலகிற்கு விசேஷ நன்மையையும் சௌக்கியத்தையும் பயக்குமாறு உபயோகிக்கலாம். இதன் உதவியால் வெகுதூரத்திலே பேசப்படும் பேச்சுக்களையும் பாடப்படும் பாட்டுக்களையும் வீட்டிலேயே சுகமாக இருந்து கேட்டு ஆனந்திக்கலாம். ஆயினும், ஸ்நானபானாதிகளுக்கென்று ஆக்கிய ஏரியிலே துராத்மாக்கள் நொழுந்திச் சாவதே போல், இத்தகைய நன்மை பயப்பதற்கெனக் கண்ட கருவியை கோர யுத்தத்திலேயும் துஷ்பிரசாரத்திலேயும் பிரயோகிக்கிறார்கள் என்றால், அது அக்கருவிக்கு யாதொரு இழுக்கையும் தராதன்றோ?

ரேடியே, என்பதை 'வானொலி' என்று தமிழிலே சொல்வது சாலப் பொருத்தமுடைத்து. சாதாரணமாய் நாம் கேட்குஞ் சப்தங்கள் எல்லாம் வாயுவார்க்கமாக நம்முடைய செவிகளிலே தாக்கும் அலைகளால் பரவுகின்றன என்பது இயற்கைத் தத்துவ சாஸ்திரிமார் துணிபு. 'ரேடியோ' அப்படியன்று; பஞ்சபூதங்களுள் ஒன்றான வானத்தில் எழும் அலைகளின் தாக்குதல்களாலே உண்டாம் நாதங்களின் சப்தவடிவுகளே 'ரேடியோ' மூலம் நம் காதிற் படுவன. இவ்வுண்மையை உணர்ந்தே போலும், 'சப்தத்திற்கு ஆசிரயம் ஆகாசம்' என்று வேதரிஷிகள் உபதேசித்தனர். 'ரேடியோ' என்னும் வானொலியால் இருக்கும் சௌரியம், 'பேசவும் பாடவும் விரும்புவோர் தமக்குச் சௌகரியமான ஊரிலே இருந்துகொண்டு 'ஒலிபரப்பி'யின் முன் பேசலாம், பாடலாம். கேட்க விரும்புவோர் தமக்குச் சௌகரியமான இடங்களில் இருந்து கேட்கலாம். பேச்சோ பாட்டோ பிடிக்காவிட்டால் விசையைத் திருகி 'ரேடியோ'வை நிறுத்தி விடலாம்.' பேசுவோரும் கேட்போரும் தவிர மூன்றும் இனத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலோர். அவர்களுக்கு இப் பேச்சுகளும் பாட்டுகளும் காதில் விழாது. ஆகையால், இடைப்பட்ட இவர்களுக்கு யாதொரு உபத்திரவமும் இல்லையாகின்றது.

இப்பொழுது இந்தியாவிலே 'அகில இந்திய 'ரேடியோ' வின் ஸ்தாபனங்கள் பல உள்ளன. அவை ரேடியோவால் விளையக்கூடிய நன்மைகளை ஆராய்ந்து உதவுதற்கு பெரு முயற்சி செய்கின்றன. அவை உதவக்கூடிய துறைக்களை நாமும் இங்கு ஆராய்தல் தகும்.

முதலாவது, ரேடியோ மூலம் தினசரிச் செய்தியைப் பரப்பலாம். இரவிலே உண்டு சிரமபரிகாரஞ் செய்யும்போதும், பகலில் தந்த தாவனம் முதலிய காலைக்கடன்களைக் கழிக்கும் போதும் 'ரேடியோ'வைத் திருப்பிவிட்டு அன்றாட நிகழ்ச்சிகளை அறிந்துகொள்ளுதல் எவ்வளவு சௌகரியம்!

இரண்டாவது, பொது ஜனங்கள் அறிய வேண்டிய முக்கிய விஷயங்களை இனிமையாக எடுத்துக் கூறும் விஞ்ஞானிகளைக் கொண்டு பேசச்சொல்லி உபகரிக்கலாம். இதற்கு அந்த அந்த விஷயங்களிலே பிரமுகர்களாயிருப்பவர்களையே உபந்நியாசம் செய்யச் சொல்லவேண்டும் என்னும்நியதி இல்லை. பல விஞ்ஞானிகளுக்கு விஷயங்களைத் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் இல்லாதிருக்கலாம். பள்ளிக்கூட உபாத்தியாயர்களைக் கொண்டே பேசச் சொல்ல வேண்டுமென்ற அவசியமும் இல்லை. அவர்கள் ஒருவேளை பேசிப் பேசி அலுத்துப் போயிருக்கலாமன்றோ? வக்கீல்களும் ஓயாமல் பேசுவோர்களே. பேசும் திறமையில்லாதவர்கள், ஆர அமர இருந்து எழுதி வாசித்தாலும், விஷயத்தை உற்சாகத்துடன் உயிர்பெற்ற பேச்சிலே அமைத்திருந்தால், பேச்சுகள் சிறந்து விளங்குவன ஆகும். எனவே, பேசத்தெரியாதவர்களையும் உயர்தரப் பேச்சாளராக்கும் பெற்றியது இந்த 'ரேடியோ'க் கருவி.

இயல் இசை நாடகங்களை நாம் செவியாலும் கண்ணாலும் பருகி இன்புறுகிறோம் அல்லவா? 'ரேடியோ'க் கருவியிலே அமைந்த இயல் இசை நாடகங்கள் செவியமுதங்கள் ஆகுமே யன்றி கண்காட்சிகள் ஆகா. ஆனால், இதிலும் ஒரு சௌகரியம் உண்டு. சில உபந்நியாசகர்கள், பல பாடகர்கள், அநேக நாடகமேடைப் பிரமுகர்கள்—இவர்களின் அங்கசேஷ்டைகளும் அபிநயங்களுக்கும் கண்டோர் கண்களை மூடிக் கொண்டால்மட்டுமே ரஸிக்கலாம் என்று எண்ணுமாறு உள்ளன அல்லவா? அவ்வாறு கண்களை மூடிக்கொண்டு அவர்களுக்கு அவமரியாதை செய்யும் ஆவசியகம் 'ரேடியோ' விலே இல்லை. உபந்நியசிப்போரையும் சபாகம்பம், குரூபம் முதலியன தடைசெய்யா. தற்காலத்திலே பாட்டுக் கச்சேரிகளிலும் நாடகங்களிலும் கேட்கப் போவோரை விட காணப் போவோரே அதிகம் என்று சொல்லலாம். அதனால், நன்றாகப் பாடுவோர்களும் பேசுவோர்களும் அவர்கள் பாட்டுக்கும் பேச்சுக்கும் உரிய கௌரவம் அளிக்கபெறாமல் அங்கலக்ஷணங்களையும் வேஷாலங்காரங்களையும் கொண்டு விளங்குவோரால் அநியாயமாய் ஒதுக்கப் படுகின்றார்கள். இவர்கள் 'ரேடியோ' வாலே தங்களுக்கு உரிய பதவிகளைத் தடையின்றிப் பெறலாம்.

இன்னொரு விஷயம். கலாவிசேஷங்களுள் ஆதியானது கவிதை என்னுங் கலை. இசையும் நாடகமும் இக்கவிதையை ரசிப்பிப்பன என்று ஆதி கவிகள் கருதினார்கள். ஆனால் சங்கீதமும் நாட்டியமும் வேறாகலைகளாகி அபிவிருத்தியாகி கவிதைக்கு துணைவிகளாயின. அதுபோலவே, பேசா ஒளிப் படங்களும் பேசும் ஒளிப்படங்களும் வந்து நாடகக்கலையைச் சாகடிக்கும் என்று நாடகாபிமானிகள் பயந்தார்கள். அவர்கள் பயமும் 'அஸ்தானே பயம்' என்று விளங்கிற்று. ஒளிப்படங்களிலே நடிப்பது நாடக நடிப்பை ஒத்த தன்று. அதற்கு வேறு லக்ஷணங்கள் விதிக்கப்பட்டன. அதுபோலவே 'ரேடியோ' ப்பேச்சுகளுக்கும் பாடல்களுக்கும் நாடகங்களுக்கும் அவ்வவற்றிற்கு ஏற்றவாறு அனுபவஸ்தர்களால் இலக்கண விதிகள் அமைக்கப்படவேண்டும். இப்பொழுது ரேடியோவில் பேசியும் பாடியும் நடித்தும் வருகின்ற இலக்கியங்களைப் போலாது, ரேடியோவிற்கென்றே எழுந்த இலக்கியங்களையும் அவற்றின் சிறப்புக்களை ஆராய்ந்து அறிந்த இலக்கணக் கிரந்தங்களையும் கூடிய சீக்கிரத்தில் எதிர்பார்க்கலாம். இத்துறையிலே முயலும் கலைஞருக்கு ஆதரவு காட்டும் இப்பகுதியிலே, கலைவாணர்கள் பலரும் இயல் இசை நாடகமென்ற மூவகைப் பாகுபாடும் பெற்ற இப்புதிய ரேடியோக்கலையைக் கையாள முன் வருவார்களாக.

பெண்டிர் பகுதி.

ஜனக நந்தினி அல்லது ஸ்திரீ ராமாயணம்.

(ஸுப்ரபை எழுதியது)

அங்கம் 1. **காட்சி 1.**

மிதிலாபுரியிலே கன்னியாமாடம். சீதையும் ஊர்மிளையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊர்மிளை:—ஜனக நந்தினி! என் வாட்டமுற்று இருக்கிறாய்? நேற்று ஒரு ரிஷியின் பின் இரண்டு அரச குமாரர்கள் போனதைப் பார்த்தது முதல், இப்படி இருக்கிறாயே; இது கன்னிகைகளுக்குத் தகுமா?

சீதை:—அடி, ஊர்மிளா! பரிகாசம் செய்யாதே! யாரோ ஒருவர் தனித்தன்றோ சென்றார்! (தனக்குள்) ஐயோ! உண்மை வெளிப்பட்டு விட்டதே!

ஊர்மிளை:—ஆனாலும், இப்படி 'வில்லை வளைத்தவனுக்குத் தான் உன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பது' என்று அப்பா ஏற்படுத்தியிருக்க வேண்டாம். எத்தனை ராஜ குமாரர்கள் வந்து வில்லுக்குத் தோற்றுப் போய்விட்டார்கள். இவர்கள்கதி என்ன ஆகுமோ? (வில் ஒடியும் சப்தம் கேட்கின்றது.) ஜானகி! 'இது என்ன சப்தம்' என்று அறிந்து வருகிறேன். (போகிறாள்.)

சீதை (உவகை கொண்டு):—என் மனம் ஊசலாடுகின்றதே! ஒரு வேளை அவருடைய ஆற்றலுக்கு ஆற்றாது, இத் தனி வில்லும் இரண்டாகியதோ? அல்லது—

ஊர்மிளை:—(ஓடி வந்து) கல்யாணம், கல்யாணம், சீதை! வில்லை ஒடித்து விட்டார் அந்த அரச குமாரர். தசரத சக்கரவர்த்தியின் ஜ்யேஷ்ட புத்திரராம் அவர்; நீ சக்கரவர்த்தினி ஆய்விட்டாய்! இனி உன் தங்கை ஊர்மிளையைக் கவனிப்பாயா?

சீதை:—ஊர்மிளா! என்ன இப்படிச் சொல்லுகிறாய்? விவாக மானாலும், உன்னைப் பிரிந்திருப்பேனா? உனக்கும் அந்த அயோத்தியிலே ஒரு வரன் கிடையாதா? ஊர்மிளா! இதோ அம்மா வருகிறார்கள், எழுந்திரு. (ஜனகப்ரியை வருகிறாள்: அவளை சீதையும் ஊர்மிளையும் வணங்கிய பின், மூவரும் ஆசனத்தில் அமர்கிறார்கள்).

ஜனகப்ரியை:—அடி சீதை! அடி ஊர்மிளா! உங்கள் இரண்டு பேருக்கும் கல்யாணம், அடி! நேற்று வந்தார்களே இரண்டு ராஜ குமாரர்கள், அவர்கள் தான் மாப்பிள்ளைகள். உங்கள் அப்பா அவர்களுடைய தகப்பனுருக்கு மண வோலை அனுப்பி யிருக்கிறார். அவர்கள் சம்மதிப்பார்கள் என்று தான் நினைக்கிறேன். இந்த அரண்மனையிலே பெண்ணெடுக்கக் கசக்குமா, யாருக்கேனும்? மாப்பிள்ளைகளை பார்க்க வில்லையே, நீங்கள்? இரண்டு பேரும் காமனும் சாமனும் போலவே இருக்கிறார்கள். நீங்கள் இருவரும் ஒரே அரண்மனையிலே வாழ்க்கைப்பட்டு இணை பிரியாமல் இருக்கலாம்.

சீதை:—அம்மா, தங்களைப் பிரிந்து எப்படி இருப்போம் நாங்கள்?

ஜனகப்ரியை:—அடி பெண்களா, இதற்கு வருத்தப்படலாமா? பெண்ணாய்ப் பிறந்தால் தாய் தகப்பனுரை விட்டுப் பிரியாமலிருக்க முடியுமா? புக்ககத்திலே வாழ்வதுதானே பெண்பிறப்புக்குப் பெருமை. புருஷனைத் தவிர வேறு தெய்வ முண்டோடி? ஏதோ பால்யத்திலே கொஞ்ச சுகம் தாயார் தகப்பனாலே உண்டாகலாம். வயோதிகத்திலே புத்திரனால் சிறிது சுகம் பெறலாம். ஆனாலும், ஆதிமுதல் அந்தம் வரையிலும் அளவிலாத ஆனந்தம் அளிப்பவர் நாயகனேயன்றோ?

(திரை விழுகிறது.)

காட்சி 2.

அயோத்தியிலே ராணி கைகேசியின் அந்தப்புரம். ராணி மஞ்சத்தில் படுத்திருக்கிறாள். மந்தரை என்கிற கூனி பரபரப்புடன் பிரவேசித்து, ராணியைத் தட்டியெழுப்புகிறாள்.

கூனி:—அடி கைகேசி! இப்படியும் விசாரமின்றித் தூங்குவார்களா? 'தூங்கினவன் கன்று கடாக்கன்று' என்று கேட்டதில்லையா? உன் சக்களத்தி பிள்ளை ராமனுக்கு யுவராஜாப் பட்டங் கட்டுகிறார்களாம். அவள் அல்லவா சமர்த்தி? அவள் மகன் ராஜாவான பின்பு, நீ அவளைப் படுத்தி வைத்ததை யெல்லாம் மறவாமல், அவள் உன்னையும் உன் மகனையும் படுத்துவாள் அல்லவா? செல்ல ராணியாக அதிகாரஞ் செலுத்தியதுபோக, சக்களத்திக்கு அடிமையாக்கி அவதிப்பட வேண்டுமென்று உன் தலையிலே எழுதியிருக்கிறது?

கை:—(தூக்கத்தினின்று எழுந்து) மந்தரை! என்னடி இது?

கூனி:—என்ன தூக்கம் அடி, உனக்கு? ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்கிறார்கள், நீ தூங்கிக் கொண்டிருக்கிறாயே!

கை:—(சந்தோஷத்தால் தன் முத்தாரத்தை எடுத்து, கூனிக்குப் போட்டு) ராமனுக்குப் பட்டாபிஷேகமா? இந்தா, முத்தாரம்.

கூனி:—யாருக்கு வேண்டும் இந்த முத்தாரம்? சக்களத்திக்குச் செல்வம் வருகிறது உனக்குச் சந்தோஷமாக்கும். அடி அசடே! ராமன் ராஜாவானால் உன் கதி யென்ன, என் கதி யென்ன? அந்த பரதன் கதிதான் என்ன? மாமா வகத்திலிருந்து அவனைத் திரும்பி வர கூட வொட்டார்களே, ராமனைச் சேர்ந்தவர்கள். பாவம்! உன் வயிற்றிலே பிறந்த தோஷத்திற்காக, பரதன் இந்த கஷ்டமெல்லாம் படவேண்டியதுதான். ராஜாவும், 'ராம பட்டாபிஷேகத்திற்குத் தடை யுண்டாகக் கூடாது' என்று தானே பரதனை கேகய தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார். நல்ல பர்த்தாவைத் தேடி வாழ்க்கைப் பட்டாய்! எவ்வளவு கபடம்! எத்தனை சூது! உன்மேலே தான் உயிர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ. அவரோ—

கை:—என்னடி உளறுகிறாய்? ராமனானால் என்ன, பரதனானால் என்ன? பரதனைவிட ராமன் அல்லவா, எனக்கு அதிகம் சிசுருஷை செய்கிறான். அவனை யல்லவா நான் தொட்டிலில் விட்டது முதல் என் பிள்ளையாய் வளர்த்து வருகிறேன். எனக்கு ராச்சியம் கிடைத்தால், நான் அவனுக்கல்லவா கொடுப்பேன்? அவனுக்குப்பிறகு பரதனும் ராஜா ஆகமாட்டானா?

கூனி:—அப்படியா எண்ணிக் கொண்டிருக்கிறாய்? பரதனுக்கு ஏது ராச்சியம்? ராமனுக்குப் பிள்ளைகள் பிறக்காதா? அவர்களுக்கு இல்லாமல், பரதனுக்கு எப்படி ராச்சியம்? அது இருக்கட்டும். இப்போது நீ கோசலை முன்பு கைகட்டி நிற்கவேண்டும்; உனக்கு ஒருவேளை

அது பிரியமாயிருக்கலாம். உன் மாட்டுப் பெண் அந்த சீதை யிட்டவேலை யெல்லாம் செய்ய வேண்டும். அக்காதானே என்று ஒரு வேளை அவளும் வேலை செய்வாள் ஆக்கும். எப்படியும் நான் இந்த அரைப்பணத்தின் கீழே வேலைசெய்யமாட்டேன். உன் அம்மா, மகராஜி, உனக்குத் துணையாக அனுப்பினுள் என்னை; இவர்களுக்கு வேலையாளாகவா என்னை அனுப்பினுள்?

கை :—உனக்கு என்னடி, மந்தரை, இவ்வளவு கோபம், இந்த ராமன்மேலே.

கூனி :—எனக்கு என்னடி, கோபம்? இந்த ராமன் எப்போதோ என் கூனைப் பார்த்துச் சிரித்தான், உண்டை வில்லாலே அடித்தான் என்ருல், அதை யெல்லாமா நினைத்துக் கொண்டு கறுவுகிறது? ராமன் மிகவும் நல்லவன். அவனுடைய அப்பா அதுக்குமேலே. பெரிய ராணியோ பூமாதேவியின் அவதாரம். இவர்களுக்கெல்லாம் உழைப்பதைவிட மேலான ஆனந்தம் உண்டா? இந்த ஆனந்தமெல்லாம் பூர்ணமாய் நீயே அனுபவித்தால் போதும்; இதில் எனக்கு பங்கு வேண்டாம். நான் உன் பிறந்த வீட்டிற்குப் போகிறேன்.

கை :—(சற்றுத் தயங்கி) ஏனடி, மந்தரை! நிஜமாய், ராமனுக்கு பட்டாபிஷேகம் ஆனுல், நாமெல்லாம் கஷ்டப்பட வேண்டியது தானு?

கூனி :—கஷ்டமேது, கஷ்டம்? கைகட்டி வாய்பொத்தி, சக்களத்திக்குச் சிசுருஷை செய்வதிலே, என்னகஷ்டம் இருக்கிறது? பரதன் இங்கே வந்தால் ஒருவேளை ராச்சியத்திலேபாதி கேட்பானே என்னவோ என்று அவனையும் காட்டுக்குத் துரத்தி விடுவார்கள். உனக்குக் கையைக் காலை வலித்தால், உன் பிள்ளைகூட பக்கத்தில் இருக்கமாட்டான்.

கை :—அப்படியா ஆகும்? என் பிள்ளை கூட எனக்கு உதவமாட்டானு? (பெருமூச் செறிந்து) இந்த பட்டாபிஷேகத்தை எப்படியும் நடக்கவிடக் கூடாது. இதை எப்படித் தடுக்கலாம்?

கூனி :—நீ தான் சமர்த்தியாயிற்றே! உனக்குத் தெரியாத யோசனையா நான் சொல்லப் போகிறேன்?

கை :—என்னடி, குத்திக் காட்டுகிருய்? ஏதோ இதுவரை ஏமாந்து போய்விட்டேன் என்ருல், இனிமேலும் அப்படி இருப்பேனே? மந்தரை! நீதான் எனக்கு மந்திரி.

கூனி :—நான் வெறும் வேலைக்காரி; எனக்கென்ன தெரியும்? ஏதோ, பல வருஷங்களுக்கு முன்னுலே நீதான் சொன்னுய்: "யுத்தத்திலே நான் ராஜாவின் பிராணனைக் காப்பாற்றினேன்; அப்போது அவர் இரண்டுவரம் தந்தார். அப்புறம் வேண்டியபோது வரம்கேட்டு கொள்கிறேன் என்று சொல்லி விட்டேன்" என்று சொன்னுய் அந்த வரங்களைக் கேள், இப்போது.

கை:—கேட்டால், கொடுக்காமலிருப்பாரா? என்னவென்று கேட்பது?

கூனி :—இதுகூடவா சொல்லித்தர வேண்டும்? 'பரதனுக்குப் பட்டம் கட்டவேண்டும். ராமன் காட்டுப்போய் பதினுலு வருஷம் இருக்க வேண்டும்' என்று கேள்.

கை :—பரதனுக்குத் தான் பட்டங்கட்ட வேண்டும்; ராமன் ஏன் காட்டுக்குப் போக வேண்டும்?

கூனி :—அடி அசடே! ராமன் இங்கே இருந்தால், பரதனுக்குப் பெரிய தொல்லையாய் விடாதா? இந்தச் சனியன் ஒழிந்தால் தானே, பரதனுக்கு க்ஷேமம்?

கை:-ஆமாம்; அதுவும் ஒரு யோசனைதான். ராஜாவைப் பிராணனை வாங்கியாவது, இந்த வரங்களை நான் வாங்காவிட்டால், என் பெயர் கைகேசி இல்லை; நீயும் என் தோழி மந்திரை இல்லை. என் பிள்ளை பரதன் பட்டத்துக்கு வரட்டும். அப்புறம் பாரேன், 'உனக்கு என்ன வெல்லாம் செய்கிறேன்' என்று.

கூனி :—என்னமோ, அசுவத்த பிரதக்ஷிணம் செய்கிதற்கு முன்னுலேயே அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாளாம். காரியம் ஆகட்டும்; ஜாக்கிரதை! ஏமாந்து போகாதே.

(திரை விழுகிறது.)

காட்சி 3.

அத்திரி ரிஷியின் ஆசிரமம். அனசூயையும் சீதையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அனசூயை :—அம்மா சீதை, உன்னைக் கண்டால் என் மனசு எவ்வளவு சந்தோஷப் படுகிறது, தெரியுமா? பெண்பெண்டாட்டி என்றால், இப்படி யல்லவா இருக்கவேண்டும்? அரண்மனையில் இருக்கும் வரையிலேதான் ‘அகத்துக்காரர் அகத்துக்காரர்’ என்று கொண்டாடுவார்கள்; காட்டுக்குப் போகிறேன் என்றால் உன்னைப் போல, நான் முன்னாலே வழி நடந்து முள்ளையும் கல்லையும் மெதுவாக்குகிறேன்’ என்று யாரேனும் புறப்படுவார்களா? நீதான் அடி, சீதை, உத்தம பத்தினி.

சீதை :—அம்மா, எனக்கு வெட்கமாயிருக்கிறது, நீங்கள் இப்படிப் புகழ்வது. யார் செய்யாததை நான் என்ன செய்துவிட்டேன்? இவ்வளவு பிரியமான புருஷனோடே எவள்தான் வரமாட்டாள்? இவர் குரூபியாக இருந்து கொடுமையாயிருந்தாலும் என்னைக் கொண்டாடலாம். ‘அப்படி இருக்க மாட்டாரா?’ என்று இருக்கிறது, எனக்கு. மாமியார் வேறே, ‘நிழலைப்போல நீ இவரைப் பிரியாது இருக்க வேண்டும்’ என்று சொல்லி யனுப்பித்திருக்கிறார். எங்கள் அம்மாவும் கல்யாணத்தின்போது, இதையேதான் சொன்னார்.

அன :—ஆமாமடி; உன் கலியாணத்தைப் பற்றி அதிசயமாகச் சொன்னார்களே. அதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது; சொல்லமாட்டாயா?

சீதை :—அது ஒரு பெரிய கதை. எங்கள் அப்பாவிடத்திலே பரமசிவனுடைய வில் ஒன்று இருந்தது. அதை நாணேற்றுகிறவனுக்கு என்னைக் கன்னியாதானம் செய்கிறேன் என்று அப்பா சொன்னார். அநேக ராஜ குமாரர்கள் வந்து பார்த்தார்கள். ஒருவராலும் வில்லை அசைக்கக்கூட முடிய வில்லை. வெகு காலத்திற்குப் பிறகு இவரும் மைத்துனரும் விசுவாமித்திர ரிஷியோடே வந்தார்கள். இவர் வில்லை எடுத்து வளைக்கிறபோது, அது ஒடிந்து இரண்டாய்ப் போகவே, அப்பா “இந்தா, சீதையை உனக்குப் பத்தினியாகக் கொடுத்தேன்” என்று சொன்னாராம். அதற்கு இவர், “எங்கள் அப்பா சம்மதிக்க வேண்டும்; அவர் பார்த்து இவளைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்றால் தான் கல்யாணம்” என்று சொன்னாராம். அப்புறம் மாமனாருக்குச் சொல்லி அனுப்பி, அவர் சம்மதித்த பிறகு தான் கல்யாணம் நிச்சயமாயிற்று.

அனசூயை:—அப்படிச் சொல்லு. மாமனார் ஒப்புக் கொண்ட மருமகளுக்குத் தான் பெருமை. இந்தக் காலத்துப் பிள்ளைகள் அசட்டுப் பிசட்டென்று தாங்களே போய் கல்யாணம் நிச்சயித்து கொள்கிறார்கள். ‘பிள்ளைக்கேற்ற மருமகள் வரவேண்டுமே’ என்ற கவலை தகப்பனாருக்கு வைப்பதில்லை.

சீதை (வெட்கத்தோடு):—நாழிகையாய் விட்டதுபோல் இருக்கிறதே.

அனசூயை:—ஆமாமடி, சீதை! பேச்சுவாக்கிலே நாழிகை யானதுகூடத் தெரிய வில்லை. இந்தா, இந்தச் செப்பையும் பட்டையும் வாங்கிக் கொள். இச் செப்பிலுள்ள அங்கராகம் உன்னை இன்னும் அழகாகக் காட்டும். இந்தப் பட்டுப் புடவையும் உனக்கு அந்தமாயிருக்கும்.

(திரை விழுகிறது.)

அங்கம் 1 முற்றிற்று.



சிறுவர் பகுதி.

குழந்தைகள்.

(பாப்பா எழுதியது.)

'சில்பஸ்ரீ' மாமி வந்து, "பாப்பா! உங்களுக்கு என்று சில பக்கம் போடுகிறேன்; நீ கூட ஏதாவது எழுது, போடுகிறேன்" என்று சொன்னாள். "எனக்கு என்ன தெரியும், மாமி" என்று சொன்னால், கேட்டால்தானே? இந்தக் காலத்திலே யார் சின்னவர்கள் சொன்னபடி கேட்கிறார்கள்? நான் சின்னக் குழந்தை; சரி என்று சொல்லிவிட்டேன்.

அப்புறம், 'எதைப் பற்றி எழுதுகிறது' என்று யோசித்தேன். நம்மைப் பற்றியே எழுதினால் என்ன என்று தோன்றிற்று. 'குழந்தைகள்' என்று எழுத ஆரம்பித்தேன்.

என் பாட புஸ்தகத்திலே "குழந்தை யில்லாக் குடிசை பாழ்" என்று இருந்தது ஞாபகம் வந்தது. ஆமாம். நாம் இல்லாவிட்டால், அப்பா என்ன செய்வார், அம்மா தான் என்ன செய்வாள்? திட்டுவதற்கும் அடிப்பதற்கும் குழந்தை யில்லா விட்டால் என்ன பண்ணுவார்கள், பாவம். எதுக்காவது அம்மா மேலே கோபம் வரும், அப்பாவுக்கு. அப்போது என்னைக் கண்டால், "அவலக் குணத்துக்கு அம்மாவைக் கொண்டது, பார்!" என்று இரண்டு அறை கொடுப்பார். அழுதுகொண்டு அம்மாவிடம் போனால், "சனியன்!" என்று திட்டத் தொடங்குவாள். இல்லாவிட்டால், "என் கண்ணே! வா;

குழந்தையை இப்படியா அறைவார்கள் ?" என்று கொஞ்சுவாள். கொஞ்சக் கொஞ்ச அப்பாவுக்குக் கோபம் அதிகமாய் விடும். "இந்த வசவும் வேண்டாம், இந்தக் கொஞ்சலும் வேண்டாம்" என்ருல், கேட்கிருர்களா ?

அப்புறம், பட்டுச் சொக்காய் வெளுத்த வேஷ்டி எல்லாம் கட்டிக் கொள்ளச் சொல்லுகிருர்கள். வாசலிலே விளையாடக் கூடாதாம்; வேஷ்டி அழுக்காய் விடுமாம். "சொக்காய் எல்லாம் புழுதியாக்கிக் கொண்டு வந்து நிற்கிறது பார்" என்று அம்மா திட்டுகிருள். யாருக்கு வேண்டும், இந்தச் சொக்காயும் வேஷ்டியும்? ஆசையாய் இருந்தால், அவர்களே கட்டிக் கொள்கிறது தானே ? ஆனுல் அப்படிக் கட்டிக் கொண்டால், நம்மை எப்படித் திட்ட முடியும் ?

ஆனுலும், சின்னக் குழந்தையாக இருப்பதைப்போல எதுவும் கஷ்டமாய் இராது. பெரியவர்கள் எல்லாரும் சுத்த சோம்பேறிகள். "அடே, மாடிக்குப் போய் என் மேல் வேஷ்டியை எடுத்துக் கொண்டு வா" என்று அண்ணு உத்திரவு செய்வான். அப்பாவும் அம்மாவும் ஏவுகிறது போதாதா ?

இருந்தாலும் எல்லாக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஏன் தெரியுமா, மாமி ? பெரியவன் ஆனதற்கு அப்புறம். எங்காவது சின்னக் குழந்தையைக் கண்டால், "ஏனடா இப்படி இருக்கிருய்? நான் குழந்தையாய் இருந்த போது, பெரியவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டு, எவ்வளவு சமர்த்தாய் இருந்தேன், தெரியுமா ?" என்று பெருமை யடித்துக்கொள்ள வேண்டாமா? அண்ணு அப்பொழுது எப்படி இருந்தானே, எனக்குத் தெரியாது; இப்பொழுது பார்க்க வேண்டும், "நான் குழந்தையாக இருந்தபோது எப்படி இருந்தேன்" என்று அவன் பெருமை யடித்துக் கொள்வதை !

புதுக் கற்பனைகள்.

ஐயோ பாவம்! விசாலாட்சி!

'வில்லன்'

"உன் வயது என்ன?"

"முப்பது."

"நீ பிரம்மச்சாரியா, கிருகஸ்தனா?"

"கிருகஸ்தன்."

'சிறுவயதிலிருந்தே யோகாப்பியாசம் செய்யவேண்டுமென்னும் அவா இருந்துவந்த தாகச் சொல்லுகிறாயே, பின் நீ ஏன் மணம் செய்துகொண்டாய்? மணவாழ்க்கையிலுள்ள வர்கள் மனதை நிலைநிறுத்தித் தீவிரமாக யோகம் புரியமுடியாதே!"

"என்னமோ என் தலைவிதி அப்படியாய் விட்டது. மணம் செய்துகொள்ளுவதில்லை யென ஒரே பிடிவாதமாய்த்தான் இருந்தேன். ஆயினும் எனது பெற்றோர்கள் கேட்கவில்லை; பலவந்தமாக எனக்குக் கலியாணம் செய்து விட்டனர்."

"நீ மணந்துகொண்டு எத்தனை வருஷங்க ளாகின்றன?"

"ஐந்து வருஷங்கள்."

"இன்னும் கொஞ்சகாலம் இல்லறம் நடத்தி பரிபக்குவமடைந்தபின் யோகம் செய்ய ஆரம் பிக்கலாம்மே."

"எனக்கு இவ்வுலக வாழ்க்கையில் சலிப்பு தட்டிவிட்டது. எங்கு பார்த்தாலும், பெருந் தியாகம் செய்து தேசசேவையில் ஈடுபட்டவர் களிடையேகூட, பொறாமையும் அகந்தையும் வஞ்சனையுமே காணப்படுகின்றன. என்னால் இனியும் சகிக்கமுடியாது. இன்னும் கொஞ்ச காலம் இப்படியே இருப்பேனானால், நானும் முற்றிலும் மாறி படுகுழியில் விழுவது நிச்சயம். மேலும் எனது குடும்பவாழ்க்கையிலும் நான் சுகத்தைக் காணமுடியவில்லை. என் வாழ் நாட்களை இனியும் வீணாக்காமல் இந்த ஜன் மத்திலேயே விடுதலையடையும் மார்க்கத்தில் செல்ல முடிவு செய்துவிட்டேன். சுவாமிகள் என்னை அங்கீகரித்துவிட்டால், எல்லாவற் றையும் துறந்துவிட்டு தங்களது பாதகமலங் களில் சரணடைவேன்."

"வாலிபனே! யோகவழி எளிதென்று எண்ணாதே. ஆயினும் உனது இருப்பிடம் சென்று சிறிதுகாலம் 'உன்னைப் பரிபக்குவம்

செய்துகொள்; பின்னர் பார்ப்போம்; இதுவே எனது இறுதியான சொல்; நீ போய்வரலாம்''.

"சுவாமிகளின் திருவுள்ளத்தின்படியே செய்கிறேன்; நான் போய் வருகிறேன்; என்னை ஆசீர்வதியுங்கள்."

டாக்டர் விசுவநாதன் சுவாமி தியாகானந்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு ரிஷீகேசத்தைவிட்டு நேராக சென்னை வந்து சேர்ந்தான்.

* * * *

"லக்ஷ்மணபுரி காங்கிரஸ் கலைந்து பத்து பதினைந்து நாட்களுக்குமேல் ஆய்விட்டன. இன்னும் இவாள் வீடுவந்து சேர்ந்தபாடில்லை. என்னடா, தன்னந்தனியாய் இருக்கிறதே, சிறிசாச்சே என்கிற எண்ணம் கிஞ்சித்தேனும் இருந்தால்தானே. இவாள் எப்பொழுதும் இப்படித்தான்; தான் உண்டு, தன் காரியமுண்டு; வீட்டு வாசற்படியைத் தாண்ட வேண்டியதுதான், நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதையும் மறந்து விடுகிறார். ஒரு தபாலும் போடவில்லை; ஒருவேளை நான்கு பேர்களாகச் சேர்ந்துகொண்டு குசாலாய் காசி, ஹரித்துவாரம், ரிஷீகேசம் முதலிய இடங்களைப் பார்க்கச் சென்றுவிட்டனரோ? அப்படியுமிருக்கலாம். இமாலயத்தைப் பற்றியும், அதன் வனப்பைப்பற்றியும், அடிவாரத்தில் தவம் கிடக்கும் முனிவர்களைப்பற்றியும் அடுத்தாத்து அண்ணுசாமி முதலியாருடன் எப்பொழுது பார்த்தாலும் அரட்டை அடித்துக்கொண்டிருப்பாரே, ஒருவேளை அங்கெல்லாம் தான் சென்றுவிட்டாரோ, என்னமோ. இவாள் வழியே ஒரு தினுசு; ஆச்சுது, இப்பொழுது கிட்டத்தட்ட ஐந்து வருஷங்கள். இவாளோடு என்ன சுகத்தைக் கண்டேன்? ஒரு நாளாவது ஆசையாக என்னோடு பேசியதுண்டா? சதாகாலமும், இரவும் பகலும் காங்கிரஸ் வேலைதான். வெள்ளிக்கிழமைதோறும் திருவொற்றியூருக்குத் திரிபுரசுந்தரி அம்மனைத் தரிசிக்கக் கிளம்பிவிடுகிறார். ராத்திரி அங்கேயே ராமச்சந்திர சாஸ்திரியார் வீட்டில் படுத்திருந்துவிட்டு அடுத்தநாள் காலையில்தான் திரும்பிவருகிறார். வீட்டுக்குத் திரும்பிவந்தாலோ, சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு என்னமோ யோகனையில் ஆழ்ந்துவிடுகிறார். ஒரு வேடிக்கையா, தமாஷா ஒன்றுண்டா? ஊஹூம் பேசக்கூடாது. ஒருநாளைக்காவது காற்று வாட்டமாகக் கடலோரம் அழைத்துக்கொண்டு போகிறாரா? அதுவுமில்லை. வீட்டிலேயே எப்போதும் புழுங்கிக்கொண்டிருக்கிறேன். இவாளோடு இப்படி அவஸ்தைப் பட்டுக்கொண்டு என் ஆயுள் முழுமையும் தள்ளவேண்டுமென்று ஈசுவரன் என் தலையில் எழுதி வைத்திருக்கிறானே, என்ன பண்ணுகிறது? என் பூர்வஜன்மம் எந்த நாட்டுப்பெண்ணைப் படுத்தி புருஷனுடன் வாழவொட்டாமல் செய்தேனோ, அந்த பாவத்தையெல்லாம் இப்போது அனுபவிக்கிறேன். விதி யாரை விடுகிறது?"

"விசாலாட்சி! விசாலாட்சி! விசாலாட்சி!"

"யார் என் பெயரைச் சொல்லி கூப்பிடுகிறது? யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. இவாள்தான் வந்துவிட்டாளா என்ன?"

கூடத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு இவ்விதம் தனக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்த விசாலாட்சி எழுந்து சென்று கதவைத் திறக்கிறாள். விசுவநாதன் உள்ளே நுழைகிறான்; ரிக்ஷா வண்டிக்காரன் கைப்பெட்டியையும் படுக்கையையும் கூடத்தில் வைக்கிறான். விசுவநாதன் பணப்பையைத் திறந்து எட்டு அணா கொடுக்க, அவன் வாய் திறவாமல் வாங்கிக்கொண்டு போய்விடுகிறான்.

விசுவநாதன் சட்டையைக் கழற்றி வைத்துக்கொண்டே, "எனக்கு ஏதாவது தபால் வந்திருக்கிறதா?" என்று கேட்கிறான்.

"தபாலும் இல்லை, கிபாலும் இல்லை. ஆமாம், காங்கிரஸுக்குப் போய் பத்துநாளில் திரும்பிவந்து விடுவதாகச் சொன்னீர்களே. போனவாள் அப்படியேதான் போய்விடவேண்டுமா? வீட்டை விட்டுபோய் இப்போது கிட்டத்தட்ட 25 நாளாகப்போகிறது. என்னடா, வீட்டில் தனியாயிருக்கிறாளே, சிறிசாச்சே என்கிற கவலை உங்களுக்குக் கொஞ்சமேனும் இருந்ததா? உங்களுடைய மனசே எப்போதும் கல்லுத் தான். உங்களைச் சொல்லுவானேன்? எல்லாம் என் மண்டையில் எழுதி வைத்திருக்கிறானே அவனைத் தான் சொல்ல வேண்டும்."

"ஏன், உன் அத்தையைக் கொஞ்சநாள் துணையாக வந்திருக்கச் சொல்லுகிறது தானே?''

"ஆமாம், ஆமாம்; அத்தைக்கு வேறு வேலையில்லை போலிருக்கிறது. அவளுக்கு நாலு பசங்களாச்சு; வீடு வாசலைவிட்டு இங்கே வந்திருக்கமாட்டாளா? ஏன், உங்களுக்குத்தான் ஆச்சு, இத்தனை நாள் கழிச்சு வருகிற எண்ணம் இருந்திருந்தால் உங்கள் அக்காவை வந்திருக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டுப் போகிறதுதானே? காங்கிரஸ்தான் முடிந்து பத்து பதினைந்துநாள் ஆய்விட்டதே. இத்தனைநாள் என்ன பண்ணினீர்கள்?

"அவ்வளவு தூரம்தான் போனோமே, அப்படியே ரிஷீகேசம் சென்று சுவாமி தியாகானந்தரின் ஆசிரமத்தைப் பார்த்துவிட்டு வரலாமென்று இருந்தேன்; அங்கே இரண்டே நாள் இருந்தேன்; நேராக இதோ வருகிறேன்.''

"நீங்கள் கிருகஸ்தாசிரமம் செய்து வாழ்ந்தாய்விட்டது. ரிஷீகேச ஆசிரமம் ஒன்றுதான் பாக்கிபோலிருக்கிறது; கட்டிக்கொள்ளுவதற்கு ஒரு நல்ல புடவை கிடையாது; ஒரு நகைநட்டு புதிதாக ஒன்றுமில்லை; ஒரு வேடிக்கையா, தமாஷா ஒன்றுமில்லை; நல்ல சாப்பாடு உண்டா? அதுவுமில்லை; எப்பப் பார்த்தாலும் மிளகு ரசமும் பருப்புத் துவையலும்தான். காய் கறி வாங்கிப்போட்டால் தானே? இதெல்லாம்தான் போகட்டுமென்றால், வீட்டில் அரைமணி நேரமாவது தங்கியிருந்து ஆசையாக இரண்டு வார்த்தைகள் பேசுகிறீர்களா? அதுவுமில்லை. சதாகாலமும் குசினிக்காரி மாதிரியாக வீட்டிலேயே தனியாக அடைபட்டிருக்கிறேன். உங்களைக் கலியாணம் பண்ணிக்கொண்டதிலிருந்து நான் என்ன சுகத்தைக் கண்டேன்?''

இவ்வண்ணம் சரமாரியாகச் சொல்லிக்கொண்டே விசாலாட்சி கண்களைப் பிசைந்தாள். உடனே பலபலவென்று நீர் உதிர்ந்து இருதாடைகளிலும் வழிய ஆரம்பித்தது. முன்தானையினால் கண்களைத் துடைத்துக்கொண்டே தேம்பித்தேம்பி அழவாரம்பித்தாள்.

'வீட்டுக்கு வந்தால் இந்தப் பழைய பல்லவியும் அழுகையுந்தானா? இந்த வீடு எனக்கு நரகமாயிருககிறது. நான் பேசாமல் சந்நியாசம் வாங்கிக்கொண்டு எங்கேயாகிலும் போய் விடுகிறேன்; என்னால் பொறுக்கமுடியவில்லை.''

விசாலாட்சி மேன்மேலும் விம்மி விம்மி அழவாரம்பித்தாள். அழுதுகொண்டே "சந்நியாசம் வாங்கிக்கொள்ளுவதற்கு என்னைக் கலியாணம் செய்து கொள்ளுவானேன்? அப்பாவும் அம்மாவும் என்னைப் பாழும் கிணற்றில் தள்ளிவிடுகிறாப்போல என்னை இங்கே கொண்டுவந்து தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள். நீங்கள் டாக்டராகி ஆயிரம் ஆயிரமாச் சம்பாதிக்கப் போகிறீர்கள் என்று நம்பி படிப்புக்காகப் பணத்தை வாரி இறைத்தனர். நானும்தான், நீங்கள் எம். பி. ஸி. எம் பாஸ் செய்து குப்பை கொட்டப்போகிறீர்கள் என்று நினைத்தேன். போர்டுமட்டும் மாட்டிவிட்டீர்கள். வீட்டில்தங்கினால்தானே, இரண்டு கேஸ்கள் வரும். சதாகாலம் காங்கிரஸ், காங்கிரஸ் என்று அலைந்தால், உங்களை யார் நம்பிவருவார்கள். ஆச்சுது, இப்பொழுது ஆசிரமம், சந்நியாசம் என்று வேறே ஆரம்பித்து விட்டீர்கள். இது எல்லாம்தான் போகட்டும்; ஒருநாளாவது என்மீது பட்சமாயிருந்திருக்கிறீர்களா? எப்பொழுதும் உம்மணம் மூஞ்சியாயிருக்கிறீர்கள். எனக்குந்தான் பார்த்துப் பார்த்து சலித்துவிட்டது. எங்காத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடுங்கள். கொஞ்சம் நாளாவது நிம்மதியாயிருக்கிறேன். உங்களுக்குச் சமைத்துப்போட ஒரு சமையற்காரியை வைத்துக் கொள்ளுங்கள். பின் உங்களுக்கு நான் எதற்குவேண்டும்?

"சரி, அப்படித்தான் செய். இன்றைக்கு சாயந்திரமே உன்னை அழைத்துக்கொண்டு போய் உன் தாயார் வீட்டில் விட்டுவிடுகிறேன். எனக்கும் நிம்மதியாயிருக்கும்.''

"என்னமோ, ஓட ஓட மிரட்டுகிறீர்களே! அப்படித் தான் கொண்டுபோய் விட்டுவிடுங்களேன். ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது, அங்கேயாவது 'வாடியம்மா' என்று அன்போடு கூப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். என் மீது உங்களுக்கு அவ்வளவு கசந்துபோய்விட்டதா?''

மீண்டும் விசாலாட்சி தேம்பித்தேம்பி அழ வாரம்பித்தாள்.

"வீட்டுக்கு வந்தால் எப்போதும் சண்டையும் அழுகையுந்தானு? அப்பப்பா, என்னுல் முடியவில்லை" என்று உரக்கக் கத்திவிட்டு கூடத்திலிருந்த சாய்வுநாற்காலியில் சற்று சாய்ந்தான் விசுவநாதன்.

விசாலாட்சி சிறிது நேரத்திற்கெல்லாம் முன்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டே சமையலறைக்குச் சென்றுள். பத்து நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு கோப்பைக் காப்பியுடன் வந்து விசுவநாதனிடம் கொடுத்தாள். விசுவநாதனும், வாயைத் திறவாமல், வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மௌனத்தில் ஆழ்ந்தான். விசாலாட்சி அவனருகில் ஐந்து நிமிஷங்கள் நின்று பார்த்தாள். விசுவநாதன் வாயைத் திறக்கவில்லை; பிறகு தானும் தன் காரியங்களைப் பார்க்க உள்ளே சென்றுள்.

அன்றையதினம் முழுமையும் தம்பதிகள் ஒரு வார்த்தையேனும் பேசிக்கொள்ளவில்லை. அடுத்த தினமும் அதேமாதிரியாகத்தான் இருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் அன்னியபார்ப்விட்டனர். விசுவநாதன் தான் ரிஷீகேசத்திலிருந்து கொண்டுவந்த சுவாமி தியாகானந்தரின் போட்டோ படத்தை பத்தினைந்து ரூபாய் கொடுத்து பெரிதாக்கி சட்டம் போட்டு படுக்கையறையில் ஒரு ஓரத்தில் சுவரில் சாய்த்து வைத்தான். பிரதிதினமும் அதற்குக் கதம்பமாலை வாங்கிக்கொண்டு வைத்தான்: படுக்கும்போது தவருமல் ஒருமணி நேரம் அப்படத்திற்குமுன் உட்கார்ந்து தியானம் செய்துவந்தான்.

விசாலாட்சிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவளுக்கு ஒருநாள் போவது ஒரு யுகமாயிருந்தது. விசுவநாதன் சதா மௌனத்தில் ஆழ்ந்திருந்ததைக் கண்டு திகிலடைந்தாள். ஒருநாள் கணவன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கையில் அவனருகே சென்று நின்றுள்.

"நீங்கள் இப்படி மௌனமாயிருப்பது எனக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. எனது வாய்த் துடுக்குக்காக வருந்துகிறேன்; இனி அவ்விதம் செய்யமாட்டேன்; இந்தத் தடவைமட்டும் என்னை மன்னித்துவிடுங்கள். என்னுடன் சகஜமாயிருந்தால்தான் நான் உயிர்வாழமுடியும். என்மீதுள்ள கோபத்தை விட்டுவிடுங்கள்" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் விட்டாள் விசாலாட்சி.

"அப்பா, எப்பொழுதும் இந்த அழுகை தானு?"

'இல்லை, நான் அழவில்லை; என்னை மன்னித்துவிட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள்; என்னுடன் சகஜமாயிருங்கள். நீங்கள் இப்படி மௌனமாயிருப்பது எனக்கு மகாவேதனையாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"விசாலாட்சி! உன்மீது எனக்குக் கோபமேயில்லை. உனக்கு அந்தக் கவலையே வேண்டாம்."

"என்மீது கோபமில்லாவிட்டால் ஏன் இவ்விதம் மௌனமாயிருக்கிறீர்கள்? என்னை வைதுவிடுங்கள், அடியுங்கள், கோபமாய்ப் பேசுங்கள்! இவைகளையெல்லாம் நான் பொறுத்துக்கொள்ளுவேன். இந்த மௌனம் மட்டும் வேண்டாம்; இதை நான் சகிக்கமுடியவில்லை."

"என்ன பேசவேண்டுமென்கிறுய்? நான் வாயைத் திறந்து ஒன்று சொன்னுல், நீ பத்து சொல்லி என் முகத்தில் அடிக்கிறுய். உனக்குப் பொருத்தமாக என்ன சொல்லுகிறதோ எனக்குத் தெரியவில்லை."

"இனிமேல் நீங்கள் என்ன சொன்னுலும் வாயைத் திறக்கிறதில்லை; நீங்கள் சகஜமாய்ப் பேசுங்கள்; மூன்று நாட்களாக வீடு வீடாகவே இல்லை."

"உன்மேல் எனக்கு வெறுப்பா என்ன? அது ஒன்றுமில்லை. நீ சுடச்சுட ஏதாவது சொல்லப்போகிறுயே என்று பயந்துகொண்டிருந்தேன்."

"சரி, போனது போகட்டும். இன்றைய தினம் சாயங்காலம் நீங்கள் என்னை காற்று வாட்டமாக பீச்சுக்கு அழைத்துக்கொண்டு போகிறீர்களா?"

"ஆகா, அழைத்துக் கொண்டு போகிறேன்.

* * * *

தம்பதிகள் முன் போலவே சகஜமாயிருந்தனர். ஆனால் உள்ள ஒற்றுமைதான் இல்லை. அன்றையதினம் இரவு சுமார் பத்து மணி இருக்கும். விசாலாட்சி வீட்டு வேலையையெல்லாம் முடித்துக் கொண்டு படுக்கையறைக்குச் சென்றாள். படுக்கையை நன்றாக உதறிப் போட்டு அதன்மீது சலவை செய்து வந்த விரிபோர்வையைப் போட்டாள். கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறு மேசையின் மேல் சுண்டச் சுண்டக் காய்ச்சின ஒரு கோப்பை பாலும் இரண்டு மலை வாழைப் பழங்களும் வைத்தாள். தரையில் ஒரு மூலையில் சாம்பிராணிவர்த்தியை ஏற்றி வைத்தாள். பீச்சிலிருந்து திரும்பி வருகையில் தெரு முனையிலிருந்த ஒரு பூக்காரனிடமிருந்து இரண்டு மல்லிகைச் செண்டுகளும் இரண்டு விடுதி ரோஜாவும் வாங்கினாளல்லவா? அவைகளில் ஒரு செண்டையும் ஒரு ரோஜாவை மட்டும் கொண்டையில் சூட்டிக் கொண்டிருந்தவள், இப்பொழுது மற்றொரு செண்டையும் மிகுதியாய் நின்ற ரோஜாவையும் சூட்டிக் கொண்டாள். பிறகு, கூடத்தில் மாட்டியிருந்த ஆள் உயரமான பெரிய நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டாள். உண்மையாகவே விசாலாட்சி அன்று ரமணீயமாயிருந்தாள். அறையில் கமகமவென்று வாசனை வீசியது. இக்கோலத்துடன் படுக்கையின்மீது ஒய்யாரமாகப் படுத்துக் கொண்டு கணவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். விசுவநாதனும் தனது வேலையை முடித்துக்கொண்டு படுக்கையறையை அடைந்தான். ஆனால் அவன் நேராகப் படுக்கச் செல்லாமல், மூலையில் சுவரில் சாத்தப் பட்டிருந்த பெரிய போட்டோ படத்தின் எதிரே உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தான்.

மணி பதினொன்று அடித்தது. விசுவநாதன் தியானத்திலாழ்ந்திருந்தான். அவன் படுக்க வருவானென்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விசாலாட்சி, "இது என்ன, ஒரே தியானத்திலாழ்ந்து விட்டீர்களே? நாளைக்கும் கொஞ்சம் பாக்கி வையுங்கள். மணி பதினொன்று அடிச்சாய் விட்டதே; படுத்துக்கொள்ள வரவில்லையா?" என்றாள், மெல்லிய மதுரமான மொழியில். விசுவநாதன் ஒரே மௌனமாயிருந்தான். விசாலாட்சி அலுப்புற்று சிறிது நேரத்திற்கெல்லாம் அப்படியே உறங்கி விட்டாள்.

விசுவநாதன் எப்பொழுது தான் படுக்கச் சென்றானோ அவனுக்குத்தான் தெரியும். தூக்கத்தில் விசாலாட்சி புரளுகையில் அவளது மெல்லிய கரம் விசுவநாதனின் மார்பில் பட்டது. விசாலாட்சி விழிப்புற்று உடனே அவனை நெருங்கி அணைத்தாள். விசுவநாதன் அவளது கரங்களை விலக்கிவிட்டு ஒதுங்கிப் படுத்துக் கொண்டான். விசாலாட்சி மீண்டும் அவன்மீது கையைப் போட்டாள். மீண்டும் 'சூ' என்று சொல்லி அவன் விலகிக் கொண்டான். இரவெல்லாம் விசாலாட்சி பெருமூச்செறிந்து விம்மி விம்மி அழுதாள்; விசுவநாதனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ஆயினும் அவன் வாயைத் திறவாமல் இருந்தான்.

பொழுது விடிந்தது. வழக்கம்போல விசாலாட்சி விசுவநாதனுக்கு ஒரு கோப்பை காப்பி கொண்டுவந்து கொடுத்து அவனருகில் சற்றுநின்றாள். கண்களிலிருந்து பலபலவென்று நீர் உதிர்ந்தது. "நான் உங்களுக்கு வேப்பங்காயாய் விட்டேன். என் கை பட்டாலும் உங்களுக்கு அவ்வளவு வெறுப்பாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே ஓவென்று அலறி அழுதாள்.

"சனியனே, பொழுதுவிடிந்ததும் அழுகைதானா? ஒரு நிமிஷம்கூட என்னை நிம்மதியாய் விடமாட்டாயா?"

"ஆமாம், நான் சனியன்தான். நான் உங்கள் கண்முன் இருப்பது பிடிக்காவிட்டால் எங்காத்துக்குக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள். உங்களுக்கு இஷ்டமானவளுடன் நீங்கள் சுகமாக வாழலாம். இனிமேல் இந்த சனியனைக் கட்டிக்கொண்டு அழவேண்டியதில்லை."

"ஆகா, இப்பவே வேண்டுமானாலும் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். என்னைப் பிடித்த சனி விட்டதென்று கொஞ்சகாலமாவது நிம்மதியாயிருப்பேன்."

"அவ்வளவு வெறுப்பா என்பேரில்" என்று சொல்லிக்கொண்டே, விசாலாட்சி மீண்டும் ஓவென்று கதறியழுதாள்.

விசுவநாதன் அவசரம் அவசரமாகச் சட்டையை மாட்டிக்கொண்டு வெளியே சென்றான். விசாலாட்சி இருந்தவிடத்தில் அப்படியே படுத்துக்கொண்டு 12 மணிவரையிலும் விசித்து விசித்து அழுது, கடைசியாக அலுத்துப்போய் அப்படியே நித்திரை செய்துவிட்டாள்.

விசுவநாதன் ஒரு மணிக்கு வீட்டுக்கு வந்தான். விசாலாட்சி இருந்த கோலத்தைக் கண்டு அப்படியே வெளியே சென்றுவிட்டான். மீண்டும் ஆறு மணிக்குத் திரும்பிவந்தான். விசாலாட்சி ஒரு மூலையில் உட்கார்ந்து கையில் முகவாய்க்கட்டையை ஊன்றிக் கொண்டு விசனத்திலாழ்ந்திருந்தாள்.

"விசாலாட்சி, என்னைப்பார். உனக்கும் நிம்மதியில்லை, எனக்கும் நிம்மதியில்லை. நீ கொஞ்சநாளாவது உனது தாயார் வீட்டில் இருந்துவிட்டுவா. நானும் கொஞ்சநாள் தனியாக இருக்கிறேன்; புறப்படு" என்றான்.

விசாலாட்சி மௌனமாயிருந்தாள். ஆயினும் மனதிற்குள் ஏற்கெனவே நிச்சயப்படுத்திக்கொண்டு விட்டபடியால் எழுந்து நின்றாள். விசுவநாதன் குறிப்பறிந்தான். இருவருமாக வீட்டைவிட்டுக் கிளம்பி தெருமுனையில் நின்றுகொண்டிருந்த மோட்டார் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தனர். ஒருவருக்கொருவர் யாதொன்றும் பேசிக்கொள்ளவில்லை; இருவரது முகத்திலும் சோகம் நிறைந்திருந்தது; ஆனால் விசாலாட்சியின் முகம் மிகவும் சுண்டி குன்றியிருந்தது. பஸ் ராயபுரத்தில் நின்றதும் இருவருமாக இறங்கி ஆரோக்கிய விலாசத்தை யடைந்தனர். விசுவநாதன் அவளை தெருக் கதவண்டை விட்டுவிட்டு தன் வீடு திரும்பினான்.

* * * *

அத்தை காமாட்சி விதவை; சுமார் ஐம்பது வயதிருக்கும்; பாலியத்தில் நல்ல கட்டழகியாயிருந்தவள்; அவ்வழகின் சின்னம் இன்னும் அவளது முகத்தில் காணப்பட்டது. உலகானுபவம் நிரம்பப்பெற்றவள். அவளுக்கும் விசுவநாதனைப்போன்ற ஒரு கணவன் வாய்த்திருந்தான். அவளது தாம்பத்திய வாழ்வும் ஆதியில் கொஞ்சம் கரடுமுரடாகவே இருந்தது. ஆயினும் தனது சாமர்த்தியத்தினாலும் வசீகரத்தினாலும் கணவனை வழிக்குக் கொண்டு வந்து தன்னிஷ்டப்படி ஆடும்படி செய்துவிட்டாள். விசாலாட்சியின் அதிருஷ்டவசமாக அவள் கொஞ்சகாலம் ஆரோக்கிய விலாசத்தில் தங்கியிருந்தாள். அவள் விசாலாட்சியின் நிலைமைக்கிரங்கி அவளுக்குத் தாம்பத்திய வாழ்க்கையின் ரகசியங்களையெல்லாம் அறிவித்தாள்.

* * * *

மாதம் ஒன்றாயிற்று. விசுவநாதனுக்கு வீடு வெறிச்சென்றிருந்தது. அவன் நிம்மதியை விரும்பினான். ஆனால் அவனது வாழ்க்கையே சூன்னியமாய்விட்டது. இல்லாள் இல்லாத இல்லம் இடுகாடாகவே இருந்தது. வீடெங்கும் ஒரே களேபரம்; அவனுக்கு வேளாவேளையில் போஜனமிடுவார் இல்லை. ஆயினும் தினந்தோறும் தனது வேலையை முடித்துக்கொண்டு சுவாமி தியாகனந்தரின் பெரிய போட்டோவின்முன் உட்கார்ந்து தியானம் செய்துவந்தான். ஆனால் மனதில் அமைதி என்னமோ துளியும் ஏற்படவில்லை. தியானம் செய்ய ஆரம்பித்தபோதெல்லாம் அவனது மனம் விசாலாட்சியின்மீதே சென்றது. "ஐயோ பாவம், விசாலாட்சி! அவளுக்கு வாய்த் துடுக்கு கொஞ்சம் அதிகம்; கோபமும் ஜாஸ்தி. ஆனால் அவளைக் கெட்டவள் என்று சொல்லுவதற்கில்லை. இங்கிதம் அறியாதவள் அவள், அவ்வளவுதான்; ஆனால் நானும்தான் அதற்குப் பொறுப்பாளி. நான் அவளிடத்தில் இங்கிதமாக நடந்துகொண்டிருந்தால், ஒரு வேளை அவளும் திருந்தியிருக்கக்கூடும். அவளும் சிறியவள்தானே; அவளை வீட்டைவிட்டுத் துரத்தினேன்; என் கன்னெஞ்சை என்னவென்று சொல்லுவது? ஐந்து வருஷங்களாக எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே என்னோடு ஒட்டிக்கொண்டிருந்தாள். அவள் அங்கேயும் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருக்கிறாளோ, என்னமோ? அவளை ஒருநாள் போய் பார்த்துவிட்டு வந்தால் என்ன?" என்றெல்லாம் யோசனை போகும். அடுத்த நிமிஷமே, "சே, புத்தி எங்கே ஓடுகிறது? பகவானே! என் மனம் லௌகிக விஷயங்களில் அலையா வண்ணம் அருளவேண்டும்; வீடு மனைவி முதலிய யாவற்றையும் மறந்து, தங்கள்மீதே என் மனம் நிலைத்திருக்கும்படி செய்யவேண்டும். மீண்டும் இந்த சம்சார சாகரத்தில்

விழாமல் என்னைத் தடுத்தாட்கொள்ளவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்துகொள்வான். இவ்வண்ணம் மனதைத் திருப்ப முயலுகையிலேயே அவனையுமறியாமல் விசாலாட்சியின் உருவம் அவனது மனத்திரையில் தோன்றும். மீண்டும் மனம் அவள்பால் செல்லவே, அவள் மீது இரக்கம் கொள்வான்.

விசுவநாதனுக்கு தியானம் குதிரவில்லை. அவனுக்கும் அவன் மனத்துக்கும் தினம் போராட்டம்தான். மனதை இழுத்துப்பிடித்துக் கட்டமுயன்றதெல்லாம் வீணாயிற்று. கடவுள் தியானம் பெரும்பாலும் விசாலாட்சியின் தியானமாகவே முடிந்தது. கடைசியாக விசாலாட்சியே வென்றாள்.

"விசாலாட்சி! விசாலாட்சி!! "

"ஏன், அத்தை?"

"அதோ, உன் அகத்துக்காரர் தெருக் கதவண்டை நிற்கிறார். அப்படியே போய்விடப் போகிறார்; ஓடு."

"எங்கே, அத்தை?"

"அதோ நிற்கிறாரே, ஒரு மாசத்திற்குள்ளே அடையாளம் கூடவா தெரியவில்லை?"

விசாலாட்சி விசுவநாதன் கதவண்டை மயங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டாள். இருவரது கண்களும் சந்தித்தன. இருவருக்கும் விஷயம் இன்னதென தெற்றென விளங்கி விட்டது.

"அத்தை, நான் அவாளோடு இப்படியே போகிறேன். புடவையை இப்பொழுதுதான் தோய்த்து வெயிலில் காயப் போட்டிருக்கிறேன். அது உலர்ந்ததும் என் பெட்டியில் மடித்து வைத்து, பெட்டியை தோட்டக்கார கங்கன் மூலமாக சாயந்திரம் அனுப்புகிறாயா?"

"அதுக் கென்ன? அனுப்புகிறேன். போய் வா. போய்வா என்றால் உபசாரமாகத்தான் சொல்லுறேன். திரும்பியும் இங்கே வந்து நிற்கப் போகிறே. நான் சொன்னதெல்லாம் ஞாபகத்திலிருக்கட்டும்."

அத்தையைப் பார்த்து புன்னகை புரிந்துவிட்டு விசாலாட்சி தெருக் கதவண்டைச் சென்று விசுவநாதனின் முன் நின்றாள். விசுவநாதன் அவளை உற்று நோக்கிவிட்டு புன்னகைபுரிந்தான். விசாலாட்சியும் பதிலுக்குப் புன்னகை புரிந்தாள்.

"ஆத்துக்கு வருகிறாயா?"

"ஊம்."

இருவரும் மோட்டார் பஸ் நிற்குமிடம் நடந்துசென்று அங்கு தயாராக நின்றுகொண்டிருந்த ஒரு பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

* * * *

விசாலாட்சி மகாலக்ஷ்மியைப்போல வீட்டிற்குள் நுழைந்தாள். அவளுடன் ஓரேஒளி வெள்ளம் பாய்ந்ததைப்போன்று வீட்டிலுள்ள எல்லாமே திடீரெனப் பிரகாசமடைந்தன. வீடெல்லாம் ஒரே புழுதியாயும் களேபரமாயுமிருக்கக் கண்ட விசாலாட்சி, வந்ததும் வராததுமாக துடப்பத்தை எடுத்துக் கொண்டு, எல்லா இடங்களையும் சுத்தமாகப் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டாள். விசுவநாதனும் அவளுக்கு உதவியாயிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து, சுற்றுக்காரியம் எல்லாவற்றையும் செய்தான். பின்னர் இருவருமாக வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் தூம்பு தட்டித் துடைத்து, அவை அவை இருக்கவேண்டிய இடங்களில் ஒழுங்காக வைத்தனர். இதற்குள் மணி பன்னிரண்டு அடித்துவிட்டது. இருவரும் களைத்திருந்தனர். விசாலாட்சி சமைப்பதற்காக அடுப்பு மூட்டப் போனாள். அதிக நேரமாய் விட்டபடியால் விசுவநாதன் அவளைச் சமைக்கவேண்டாமென்று சொல்லி சமீபத்திலிருந்த ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்தான். இருவருமாக உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டனர். பின்னர் சிரம பரிகாரமாக சற்று படுக்கையில் படுத்து அப்படியே உறங்கினர்.

மணி மூன்று அடித்தது. விசுவநாதன் நித்திரையிலிருந்து எழுந்தான். பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த விசாலாட்சி இன்னும் நித்திரை செய்து கொண்டிருந்தாள். விசுவநாதன் சந்தடி செய்யாமல் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்து அவளது முகம், அவயவங்கள், ஒவ்வொன்றாக சாவதானமாகப் பார்த்த

வண்ணமாயிருந்தான். இத்தனை வருஷங்களாக அவன் நெருக்கத்தில் இருந்து விசாலாட்சியைச் சரிவரப் பார்த்ததேயில்லை. இன்றுதான் அவளது முகபாவம், அங்க லட்சணங்கள், எல்லாவற்றையும் கண்குளிரப் பரிசிலனை செய்தான். உள்ளத்தில் அன்பு ஊற்றெடுத்தது. "ஐயோ பாவம்! விசாலாட்சியை நான் படாத பாடு படுத்திவிட்டேன்" என்று மனம் நொந்தான். இவ்வண்ண மிருக்கையில், ஒரு பெரிய ஈ பறந்து வந்து விசாலாட்சியின் தாடையில் உட்கார்ந்தது. விசுவநாதன் 'பூ' என்று பலமாக வாயால் ஊதி அதை விரட்டினன். விசாலாட்சி திடுக்கென்று கண் விழித்துத் தன் கணவன் தலைமாட்டில் உட்கார்ந்திருந்ததைக் கண்டாள்.

"நீங்கள் எழுந்திருந்து ரொம்ப நாழியாகிறதா?"

"இல்லை, இப்பொழுதுதான் எழுந்தேன்."

விசாலாட்சி படுத்த வண்ணமாகவே இருந்து கணவனை நோக்கித் தன் தளிர்க் கரங்களை நீட்டி அவனது கழுத்தைச் சுற்றி வளைத்தாள். அவனும் வளைந்து கொடுத்து அப்படியே குனிந்து அவளது அதரங்களில் முத்தமிட்டான். விசாலாட்சி அவனை அப்படியே மார்புறத் தழுவி அவனது இரு கன்னங்களிலும் முத்த மிட்டாள்.

"விசாலாட்சி, நான் உனக்குச் செய்ததற்கெல்லாம் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடு. போனதை யெல்லாம் முற்றிலும் மறந்துவிடு, மறந்து விடுகிருயா? என்னை மன்னித்து விடுகிருயா? வாயைத் திறந்துசொல்."

"போனதைப் பற்றி இப்போது நினைப்பானேன்? நான் ஏற்கெனவே எல்லாவற்றையும் மறந்து விட்டேன். என்னமோ, என் பொல்லாத வேளை, அப்படியெல்லாம் ஆயிற்று. நானும் வகையறியாமல் உங்களிடம் கோபம் கொண்டேன். என்மீதே எல்லாத் தப்பிதமும் இருக்கிறது. இனி ஒருவர்மீது ஒருவர் பட்சமாயிருப்போம்."

"விசாலாட்சி, உனது பெருந்தன்மையை நான் என்னவென்று சொல்லுவேன்! அதற்கு நான் அருகனா?"

"அப்படியெல்லாம் சொல்லவேண்டாம். பழைய கதையெல்லாம் எதற்கு? இந்த தினமே சுதினமாக இருக்கட்டும். இன்றிலிருந்து நாம் புதிதாகப் பிறப்போம். மணி என்ன ஆச்சுது? காப்பி போட வேண்டாமா? எழுந்திருப்போம்."

அன்றுமுதல் விசுவநாதனும் விசாலாட்சியும் மன்மதனும் ரதியும் போலிருந்தனர். ஐரோப்பியர்களுள் புதிதாகக் கலியாணமான தம்பதிகள் 'தேன்மதி' கழிப்பார்களே அம்மாதிரியாகவே இருவரும் காலங்கழித்தனர். அவன் வெளியிலிருந்து வீடு திரும்பிவரும் நேரத்தில், அவள் முகத்தைச் சோப்புப் போட்டுக் கழுவி, கூந்தலை வாரி ஒழுங்கு படுத்திக்கொண்டு, நல்ல புடவையைக் கட்டிக்கொண்டு, கணவனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அவன் வீட்டில் நுழைந்ததும், சுப்ரசன்னமாக, உதடுகளில் புன்னகை தவழ, அவனை வரவேற்று, அவனது கோட்டு, நிஜார், பூட்ஸ் முதலியவற்றைக் கழற்ற உதவிசெய்து, உடனே ஒரு வெள்ளித் தட்டில் சுடச்சுடப் பலகாரமும் ஒரு கோப்பை 'எஸ்ஸென்ஸ்' காப்பியுங் கொண்டுவந்து அவனெதிரில் வைத்து அருகில் நிற்பாள். அவனும் அநேகமாக வரும்போதெல்லாம் தெருமுனையிலுள்ள பூக்கடையிலிருந்து ஒரு செண்டு மல்லிகையோ, தவனமோ, விடுதி ரோஜாவோ வாங்கிக் கொண்டு, 'விசாலாட்சி!' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்து அவைகளைத் தன் கையினலேயே அவளது கூந்தலில் வைத்துவிடுவான்.

ஓய்வு நாட்களில் விசுவநாதன் வீட்டிலேயே தங்கிவிடுவான். அதுசமயம் இருவருமாகச் சேர்ந்து பத்திரிகைகளையோ நாவல்களையோ படிப்பார்கள். தமிழாயிருந்தால் விசாலாட்சி படிக்க அவன் கேட்பான். ஆங்கிலமாயிருந்தால் (விசாலாட்சிக்கு ஆங்கிலமும் தெரியும்) அவன் படிக்க அவள் கேட்பாள். இவ்விதம் விசாலாட்சி படிக்கையில், உம் கொட்டிக்கொண்டே அவளது முகபாவங்களையும் அங்கலட்சணங்களையும் திருட்டுத்தனமாகப் பார்த்துக்கொண்டே பூரிப்படைவான். அது சமயம் அவன் இதுவரையிலும் கண்டிராத புதியபுதிய சௌந்தரியங்களை அவளிடம்

(218-ம் பக்கம் பார்க்க.)

அடிசிற்கினியர்

(மா. கிருஷ்ணன்.)

"வேலையை முடிச்சுட்டுப் பதினொரு மணிக்குக் கிளம்பினால் நாலு மணிக்குத்தான் திரும்ப முடியும். காப்பி டிபன் எடுத்துக் கொடுக்க நம்மால் முடியாது. ராத்திரி எட்டரையானால் கண்டிஷனாய் விட்டுவிடவேணும் —சம்மதமானால் இருக்கலாம்."

பார்த்தால் சமைக்கத் தெரிந்தவன் போலிருந்ததால் இத்தனை நிபந்தனைகளுக்கும் ஒத்துக்கொண்டு இவனை ஏற்படுத்திக்கொண்டோம். அநேக வருஷங்களாக எங்கள் வீட்டில் சமைத்துவந்த பிச்சுமணி அவசரமாய் எதிர்பாராதபடி போய்விடவே, பதிலாள் தேடும் பாரம் எங்களைச் சேர்ந்துவிட்டது. முதலில் இது ஒரு பாரமாகத் தோன்றவில்லை. பிச்சுமணி போனது மற்ற சுயம்பாகிகளுக்கெல்லாம் எப்படியோ தெரிந்துவிட்டது. அவன் சென்ற தினமே இரண்டு மங்களூர்க்காரர்கள் வீட்டைத் தேடிவந்து வேலை கொடுக்குமாறு மன்றாடினார்கள். இவர்களுள் சற்றுச் சுறுசுறுப்பாக இருந்தவனை அமர்த்திக் கொண்டோம். அவன் மூன்று நாள் வேலை செய்தான். பிறகு இரவோடு இரவாக குழந்தையின் பட்டுப்பாவாடையைத் திருடிக் கொண்டு ஓடிவிட்டான். சமையல் வேலை செய்பவனுக்குப் பட்டுப்பாவாடை எதற்காக? ஆனால் இதைக் கேட்டுப் பயனில்லை. சமையல் வேலை செய்பவர் இன்னதான் செய்வார்கள் என்று எவராலும் சொல்லமுடியாது. அவர்களுக்கு நாணமோ, நாணயமோ, தன் மரியாதையோ, தங்கள் தொழிலிற் திறனோ கிடையாது. இந்த உண்மையை அறிவதற்குள் இரண்டு மலையாளத்தினர், ஸ்ரீரங்கத்தைச் சார்ந்தவொரு சுயமாசார்ய புருஷர், ஒரு கும்பகோணத்தான், தான் எந்த ஊரைச் சேர்ந்தவன் என்று தனக்கே தெரியாத ஓர் அநாமதேயன்—ஆகமொத்தம் ஐந்து பெயர்களைப் பார்த்துவிட்டோம். இவர்கள் போன பின்தான் மேற்கண்ட உடன்படுக்கைகளுக்கு ஆட்களாகி வாமனவதாரத்தை ஏற்றுக்கொண்டோம். இவன் பெயர் எனக்கு நினைவில்லை—எங்களுக்குள் இவனை 'வாமனவதாரம்' என்றே அழைத்துவந்தோம். மிகவும் குள்ளமானவனாய் இருந்தும் இவனுக்கு பிரமாண்டமான குரல். எப்பொழுதும் சிடுசிடுத்துக் கொண்டே இருப்பான்; இவன் சிரித்து நான் கண்டதில்லை. நாங்கள் சொல்வதை லக்ஷியம் பண்ணமாட்டான்—அவன் சொன்னதை நாங்கள் உடனே அங்கீகரிக்காவிட்டால் கூக்குரவிடுவான். இருந்தாலும் நன்கு சமைக்கத் தெரிந்தவனாய் இருந்தபடியால், வயிற்றின் பொருட்டு மானத்தைக் கைவிட்டு இவன் சொற்படி நாங்கள் பயந்து நடந்துவந்தோம். 'ஓடுகிற நாயைக் கண்டால் துரத்துகிற நாய் துரத்தும்.' வாமனவதாரத்துக்குத் தலைகால் தெரியாதபடி அகம்பாவம் ஏறிவிட்டது. ஒரு நாள் நாங்கள் சாப்பிடும்பொழுது தனக்கு அன்றே பதினைந்து ரூபாய் முன்பணம் வேண்டுமென்றும், கொடுக்காவிட்டால் கையிலிருக்கும் சிப்பில் தட்டைக் கீழே வைத்து அந்த

க்ஷணமே வெளியேறிவிடுவான் என்றும் அவன் கர்ஜித்தான். இதற்கு நாங்கள் இணையாத தால் தன் சொற்படி நடக்துவிட்டான். சா யங்காலம் தான் செய்தது பிசகுதான் என் றும், பத்து ரூபாய் முன்பணம் போதுமென் றும் சொல்லிக்கொண்டு அவன் மறுபடியும் வந் தான்; ஆனல் அவனை நாங்கள் ஏசியனுப்பி விட்டோம். ஏனென்றால் அதற்குள் எங்க ளுக்குக் கோதண்டராமன் கிடைத்துவிட் டான்.

கோதண்டராமனுக்குத் தமிழ் தெரியாது; சுயபாஷையாகிய கன்னடமும் சரியாகத் தெரி யாதாம்; அவன் பேசுவது ஆங்கிலத்தில். இந்த பாஷையில் அவனுக்கிருந்த தேர்ச்சி எங்களுள் ஒருவருக்குமில்லை—அவனுடன் பேசும்பொழுது நாங்கள் முன் யோசனையுட னும் நிதானத்துடனுமே பேசினோம். ராவ் சாகிப் ராஜாராம் ராவ்ராஜா என்ற பெயர் கொண்ட ஒரு சீமானிடம் தான் ஐந்து வரு ஷம் வேலைபார்த்ததாக அவன் சொல்லவே ஒரு வீட்டில் நிலைத்து, ஸ்திரமாக இருப்பான் என்று நாங்கள் உறுதிகொண்டோம். ஒரு சிறு விஷயத்தில்மட்டும் கோதண்டராமனுக் கும் எங்களுக்கும் முதலில் அபிப்பிராய பேத மிருந்தது. மேற்குறித்த ராவ்ராஜாவிடம் தான் மாதம் நாற்பத்தைந்து ரூபாய் வாங்கின தாகவும், நாங்கள் குறைந்தபக்ஷம் முப்பது ரூபாயாவது கொடுப்போமென்று தான் எதிர் பார்த்திருப்பதாகவும் அவன் சொன்னான். நாங்களென்ன ராவ்ராஜாக்களா—முடிவில் நாங்கள் கொடுக்கும் பதினெட்டு ரூபாய்களு க்கு வேலைசெய்வதாக அவன் ஒத்துக்கொண் டான்.

கோதண்டராமனுக்கு சமைக்கத் தெரி யாது. அன்றிரவு இது நன்கு விளங்கிவிட் டது. என்னதான் முயற்சி செய்தும் எங்க ளால் எதையும் புசிக்கமுடியவில்லை. விசாரித் ததில் ராஜாராம் ராவ்ராஜா (ராவ் சாகிப்) அவர்களிடத்தில் தான் ஐந்து வருஷம் வேலை செய்தது வாஸ்தவம்தானென்றும், ஆனல் பரி சாரகனயன்றி குமாஸ்தாவாய் வேலைபார்த்தா னென்றும் கோதண்டராமன் தெரிவித்தான். அன்று நாங்கள் பசியுடன் படுத்ததைக் குறி த்து எங்களெல்லோரைக் காட்டிலும் கோத ண்டராமனே வருத்தப்பட்டான். மறுநாள் விடிந்ததும் அவனைக் காணவில்லை.

பின் ஒரு வாரம் நீலகண்டன் சமையற் கட்டை யாண்டான். இவன் திருநெல்வேலிக் காரன்; நாங்களும் திருநெல்வேலிக்காரர்கள். வந்த நாளிலிருந்தே நீலகண்டன் எங்களிடம் வெகு சுதந்திரமாக நடந்துகொண்டான்.

"தருவை முத்துசாமி ஐயர்ன சொல்லிட்டு இருக்காரேயில்லையோ, அவாள்ளாம் நம்மாத் தப்பத்தி ரொம்பச் சொல்லியிருக்கா" என்று அடிக்கடிச் சொல்லுவான். தருவை முத்து சாமி ஐயரையோ, அவரது நெருங்கின பந் துக்களையோ எங்களுக்குத் தெரியாது. ஆனல் நீலகண்டன் சொல்வதிலிருந்து எங்களைப்பற் றித் தெரியாதது அவர்களுக்கு ஒன்றுமில்லை என்று விளங்கிற்று. மேலும், எல்லா விதங் களிலும் எங்களைக் காட்டிலும் அவர்களே மேன்மையானவர் என்பதும் விளங்கிற்று. முத்துசாமி ஐயர் வீட்டில் பாலைப் பூட்டிப் பூட்டி வைக்கமாட்டார்கள்; அம்மா, சமையற் காரனை நம்பி எல்லாவற்றையும் விட்டுவிடுவார் கள்; அவர்கள் தாராளப் பிரபுக்கள். மேலும் சமையற்காரனென்றால் அவனும் மனிதன் தானே, சனியும் புதனும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டாமா? இப்படியெல் லாம் இவன் சொல்வதுண்டு. வேலைக்கு வந்த மூன்றும் நாள் நீலகண்டன் குழந்தைக்கு நாங்கள் ஏற்படுத்தியுள்ள பாட்டு வாத்தியார் உபயோகமற்றவர் என்று சொல்லிவிட்டான். "ஆயாயா! நம்மாத்துக்கு இதெல்லாம் உத வாது—சை, சாவேரி வர்ணம் இப்படிய பாடு வன் மனுஷன்!" என்று அந்த வர்ணத்தை எப்படிப் பாடுவதென்று வியாக்கியானம் பண்ண வாரம்பித்தான். பாட்டு வாத்தியா ராக அவனை நியமனம் செய்யவில்லை என்றும், அவன் சமைத்தாற் போதுமென்றும் சொல்லி இதைத் தடுத்துவிட்டோம். அன்று முத்து சாமி ஐயரின் வீட்டைப்பற்றி தினத்திலும் அதிகமாகக் கேள்விப்பட்டோம். 'ஏட்டி' என்று அவளை அழைத்ததன் பயனாக நீலகண் டனுக்கும் தூப்புக்காரிக்கும் தீராப்பகை.

ஒருநாள் "ஆய், இந்த வாயாடி முண்டைக களல்லாம் நம்மாத்துக்கு உதவாது" என்று சொல்லி, யாரையும் கேட்காமல் அவளை வேலையிலிருந்து விலக்கிவிட்டான். அன்றே அவளையும் நாங்கள் அனுப்பிவிட்டோம்.

பின் எவனெவனோ வந்து சமைத்தான். இவர்களுள் ஒருவன் நாடகமேடை நிபுணன்; மற்றுமொருவனுக்கு மிருதங்க வாத்தியத்தில் பயிற்சியுண்டாம். மற்ற விஷயங்களில் எத்தனையோ வேறுபாடுகளிருந்தும் இவர்களுள் சில பொருத்தங்கள் இருப்பதையும் நான் கண்டேன்—எல்லோரும் ஆங்கிலத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், எல்லோரும் அதிகப் பிரசங்கிகள், எல்லோரும் சமைக்கத் தெரியாதவர்கள். ஒரு கன்னடியன் "நம்மளுக்கு நாலுவகை பக்ஷணம் தெரிவான்—காலெஜ் க்ளாஸில் படிச்சிருக்கான்—இருபத்தஞ்சு ரூபாய்" என்று சொல்லிக்கொண்டே வந்தான். அவனுக்குத் தெரிந்த நால்வகை பக்ஷணங்கள் பின்வருமாறு:—பீர்க்கங்காய் பஜ்ஜி, உருளைக்கிழங்கு பஜ்ஜி, வாழைக்காய் பஜ்ஜி, தவிரவும் கத்தரிக்காய் பஜ்ஜி!

ஈசனே! நீ ஏனிந்த அற்ப ஜந்துக்களை சிருஷ்டித்தாய்? நீ வேண்டுமென்றே இப்படிச் செய்திருப்பாய் என்று நான் நம்பவில்லை. கோதண்டராமனைப்போல் நீயும் நன்கு படைக்க எண்ணியும், எப்படியோ இவர்கள் உனக்கு வாய்த்துவிட்டனர். இருந்தாலும் நாங்கள் பிச்சுமணியை இழக்கும்படிச் செய்ததுமன்றி, இந்த மடையர்களையும் எங்களிடமே வந்துசேரும்படி நீ ஏன் செய்தாய்? பாவாயில்லை, இதெல்லாம் நடந்ததும் நலமென்றே நான் கருதுகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு சமையலில் திறனற்று ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவனாய் ஒருவன் இருக்கிறானோ, அவ்வளவுக்கு அவன் பரிசாரகனாய் உயர்ந்த சம்பளம் வாங்குவான் என்பதை நான் அறிந்துகொண்டேன். நடுவில் நான்கு நாட்கள் சமையலாளில்லாது போனதின் பயனாக, நானும் அடுப்பினருகில் போயிருக்கிறேன். இனி ஒருநாளும் பிழைப்பதற்கு வழியில்லாமல் வருந்தமாட்டேன். நம்மளுக்கு உப்புமாக் கிளறத்தெரிவான்—காலெஜ் க்ளாஸில் படிச்சிருக்கான்—நாற்பது ரூபாய்.

சம்பு நாராயணபுரம்.

'ஸ்ரீ'



போனவருஷம் நான் சம்புநாராயணபுரத்துக்குப் போயிருந்தேன். அவ்வூர்க்கோவில் நாடெங்கும் பேர்போனதாம்; கோவில் கோபுரங்கள் பிரம்மாண்டமானவை அல்ல; சிற்பக் கலையின் திறம் அங்கு எவ்விடத்திலும் காணப்படவில்லை. அது மலைக்கோவில் இல்லை. சம்புநாராயணபுரம் பாடல் பெற்ற ஸ்தலமும் இல்லை; அந்த ஊருக்கு கிராமலக்ஷணங்கள் குறைவாகவே வாய்த்திருந்தன. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்.' பக்கத்து கிராமமாகிய மேலைப்பள்ளியில் வீடுகளின் புறக்கடைகளை அரித்துக்கொண்டோடும் ஆற்றை நோக்கி இவ்வூரார் ஒன்றரைமைல் நடந்துபோவார்கள். அல்லது, கொல்லைக்கிணறுகளாகிய கசங்களிலிருந்து நீர்மொண்டு ஸ்நானம் செய்வார்கள். கோவிலை அடுத்து ஒரு பாசி படர்ந்த குளம் உண்டு; அதிலும் ஸ்நானம் செய்யலாம். காய் கிழங்குகளும், மோரும், மற்ற சாமான்களும் மேலைப்பள்ளியைவிட இந்த ஊரில் சற்று மோசமாகவும் கிராக்கியாகவுமே கிடைக்கும். இந்த ஊர்ப்பெயருக்குமட்டுமன்றி ஊருக்கே மூலகாரணம் கோவில்தான் என்று ஊகித்தேன்.

அரியும் சிவனும் ஒன்று என்பதை அறியாதாருக்குக் காட்ட இருமூர்த்திகளும் ஒரு வடிவில் நிற்பது இக்கோவிலின் புகழுக்குக் காரணமில்லை. எல்லாம் தேவியின் மகிமை; அம்மன் பெயர் ஜகதீசுவரி; அவள் சந்நிதியில் நூற்றைம்பது வருஷங்களாகக் கேட்டவர் அதிசயக்கத்தக்க அற்புதங்கள் நிகழ்கின்றனவாம். ஆதியில் மேலைப்பள்ளியில் ஒரு மசூதி பிரசித்தி பெற்றிருந்ததென்றும், பிறகு இங்கே அம்மன் சந்நிதியில் பேய் பிடித்தவர்களை ஆடவைத்துப் பேயோட்டும் வழக்கம் ஏற்பட்டதென்றும், அதுமுதல் கோவிலின் புகழ் நாடெங்கும் பரவியதென்றும் கேள்விப்பட்டேன். முன்காலத்தில் தேவி தன் சந்நிதியில் நோற்றுக் கிடந்தவர்களுக்குப் பிரத்தியக்ஷமானதாக எத்தனையோ கதைகள் உண்டு. வெளிப்பிரகாரத்தில், கல்லில் காணும் ஒரு சிற்றடிச்சுவட்டை, ஒற்றைக்காலால் நின்று, தேவி, நாற்பது நாளாக ஆகாரநித்திரையின்றி நோற்றுப்பின் தப்பித்தூங்கிவிட்ட ஒரு செட்டியை எழுப்பி அநுக்கிரகம் செய்த இடம் என்று காட்டுகிறார்கள். அவன் வேண்டியது பிள்ளை வரம்; அதைப் பெற்றபின் அவன் செலுத்திய காணிக்கைத் தொட்டிலை இன்றும் காணலாம். அது பழைய காலத்து மரமா, இல்லையா என்று நிர்ணயிக்கும் திறன் எனக்கில்லை.

தவிரவும், அம்மாதிரியான சந்தேகங்களைத் தீர்க்கப்பார்த்து ஒரு பயனுமில்லை. எத்தனையோ ஜனங்கள் முழுநம்பிக்கையுடனும், பயத்துடனும், பக்தியுடனும் அங்கே நோற்றுக் கிடப்பது உள்ளது. வருஷமுழுவதும் அங்கே வருவாரும் போவாரும் உண்டு. சிலர் சீக்கிரம் மனச்சாந்தி அடைந்து திரும்பிவிடுவார்கள்; சிலர் மாதக்கணக்காய் அங்கேயே இருப்பார்கள். சகுனங்களும், எதிர்பாராத சம்பவங்களும், சொப்பனங்களும் தேவியின் கருத்தை ஒருவாறு தெரிவிக்கும். அறியாமல் நேர்ந்த அனுஷ்டானப் பிசகுகளால், எவ்வளவு நோற்றும் வரம் கிடைக்காமல் போய்விடும். அதையும் சில குறிகளால் தெரிந்துகொண்டவர், இனிக்காத்துப் பயனில்லை என்று தம்மாலான காணிக்கையைச் செலுத்திவிட்டு தீராக்குறையுடன் ஊர் திரும்புவார்கள். அங்கே சிலநாள் இருந்துவிட்டால் எவர் மனமும் மாறிவிடும்; அதிசயங்கள் சகஜமாய்த் தோன்றிவிடும்.

நாங்கள் போன புதிதில் வேதம்மாள் என்ற நாற்பத்தைந்து வயதுள்ள சுமங்கலி ஒருத்தி எங்களுடன் பரிவாகப் பழகினாள். அந்தக் கோவிலைப் பிரதக்ஷணம் செய்து பக்க வாதம் நீங்காதவர் கிடையாதென்று அவள் என் அத்தைக்கு தைரியம் சொன்னாள். அப்படியே, சில நாட்களுக்குள் அத்தைக்கு வியாதி குணமாய்விட்டது.

வேதம்மாளுக்கு வேண்டிய வரம் கிடைக்கவில்லை. அவளுடைய புருஷன், மகன் இருவரும் காசநோயால் பீடிக்கப்பட்டு ஓர் ஆரோக்கியாசிரமத்தில் இருந்தார்கள்; மருமகள் அவர்களுடன் வேண்டியவற்றைச் செய்து கொண்டிருந்தாள். வேதம்மாள் அவர்கள் இருவருக்கும் வியாதி குணமாகவேண்டுமென்று மூன்று மாதமாக இங்கே நோற்றிருந்தாள். அவள் பிறந்த ஊர் அருகாமையில் உள்ளது; பதினாறு வயதில் அவளுக்குப் பேய் பிடித்தவுடன் இந்தக் கோவிலுக்கு வந்துதான் உடம்பு குணமாயிற்றாம். அங்குள்ளவர்கள் எல்லாரும் சகுனங்கள் கனவுகளின் பலன்களை அவளைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அவள் சொந்த விஷயத்தில் அவளுக்கு ஒரு பதிலும் கிடைக்கவில்லை.

இப்படியிருக்க, ஒருநாள் மத்தியானம் ஒரு மோர்க்காரி 'அம்மா! பால் கொஞ்சம் இருக்கிறது, வேண்டுமா?' என்று வேதம்மாளைக் கேட்டாளாம். அவள் வேண்டாமென்று சொல்லவே போய்விட்டாளாம். அதன்பின் வேதம்மாளுக்கு திடீரென்று நெஞ்சை அடைத்து பயமாயிருந்தது. அன்று மாலை அவள் மகன் ஆபத்துநிலையிலிருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரும்படியும் அவளுக்கு தந்தி வந்தது. அவள் கண்ணீர் விடாமல் தைரியமாயிருந்தாள். ஆனால் அடக்கமுடியாத ஆத்திரத்தால் வாய் ஓயாமல் பேசிக்கொண்டேயிருந்தாள். 'என் மடத்தனத்துக்கு நன்றாய் வேண்டும்; மோர்க்காரி ஏன் பால் வேண்டுமா என்று கேட்கவேண்டும். தேவி! என் வயிற்யில் பால் வார்க்க வந்தவளைத் துரத்திவிட்டேன். என் குழந்தை எப்படிப் பிழைப்பான்? காலையில் குளத்தருகில் ஒரு மஞ்சள் கொத்தைக் கண்டெடுத்தேன். இது அம்மன் கிருபை, கிழவர் பிழைத்துவிடுவார் என்று எண்ணிக் கொண்டேனே; பால்காரியைத் துரத்தினேனே'' என்று அவள் திரும்பவும் திரும்பவும் சொன்னாள். இதையெல்லாம் நம்ப வேண்டாம் என்று நான் சொன்னது எனக்கே அசட்டுத்தனமாய்ப்பட்டது. ''தேவி! என்னை நீ என்னவேண்டுமானாலும் செய்; வரன் கொடுக்க வந்தவளை போ, போ என்றேனே--அந்த வரன் மீளுமா—எனக்கு எந்த கதியும் தரும்—அறியாப்பெண்—என் குற்றத்தால் அவள் வாழ்வு கெடாமலிருக்கவேண்டும்—என்னை தண்டித்துக் கொள்—ஜகதீசுவரி—அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துவிடு'' என்று எதிரில் இருப்பவரிடம் பேசுவதுபோல் சொன்னாள். அவளை அன்றிரவு ஊருக்கு அனுப்புவது பெரும்பாரமாய்விட்டது.

இதெல்லாம் போனவருஷ சம்பவங்கள். பட்டணத்துக்குத் திரும்பியபின் நான், எப்பொழுதும்போல, தற்காலப் படிப்பிலும் படித்தவர் சகவாசத்திலும் பொழுதுபோக்கினேன். சம்புநாராயணபுரத்தில் அடிக்கடி என் மனத்தில் தோன்றிய பயமெல்லாம் கனவு போலிருந்தது. வேதம்மாளைத் திரும்பிக் கண்டபின்தான் அந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. அவளுடைய புருஷன் இறந்துவிட்டார்; மகன் எதிர்பாராதபடி வியாதி குணமாகி மறுபடியும் வேலையிலமர்ந்து நல்ல ஸ்திதியிலிருக்கிறார். வேதம்மாளுக்கும் மருமகளுக்கும் ஒத்துவராததால், அவள் வருஷத்துக்குள்ளே மகனை விட்டுப்பிரிந்து தனியாயிருக்கிறாள். அவளுக்கு அவ்வளவு போதுமென்று அவள் மகன் மாதம் பத்து ரூபாய் மட்டும் செலவுக்கு அனுப்புகிறார். அதைத் தவிர வேறு எவ்விதமான பக்கபலனும் அவளுக்கில்லை. அவள் கேட்ட வரன் பலித்தே அவளுக்கு இக்கதி நேர்ந்ததா, மகனையும் மருமகனையும் இப்பொழுது வைதாலும் அவளுடைய வாஞ்சை இன்னும் மறைந்து கிடைக்கிறதா, அவளுக்கு ஆறுதல் ஏற்படும் நாளும் உண்டா என்றெல்லாம் சிலவேளைகளில் தோன்றுகிறது; பதில் ஒன்றும் தெரியவில்லை.

(212-ம் பக்கத் தொடர்ச்சி.)
காண்பான். அவள் சற்று நிமிர்ந்தபோது அவளது வஞ்சனையற்ற மதிமுகத்தையும் ஒளி வீசும் கருவிழிகளையும் நோக்குவான். ஒரு சமயம் அவள் ஒரு ஹாஸ்யமான கட்டத்தைச் சிரித்துக்கொண்டே படிக்கும்போது அவளது பல்லழகைக் கண்டு களிப்புறுவான். ஒரு சமயம் அவளது நீண்ட பாகு மறுவற்ற கழுத்தின் அழகைப் பார்ப்பான். ஒருசமயம் அவளது சுருள்மயிர் முகத்தில் விழுந்து ஒரு புதிய அழகு கொடுப்பதைக் காண்பான். அவளது குரல் அவனுக்குக் கானத்திலும் இனிமையாயிருக்கும். இவ்வண்ணமாக அவள் படிக்கும் கதையின் போக்கையும் கவனியாமல் அவளது அங்க சௌந்தரியத்திலேயே அழுந்தி விடுவான். திடீரென்று அவளை ஸ்பரிசிக்கவேண்டுமென்கிற ஆசை எழும். அது சமயம் ஈயை ஓட்டுகிறவன்போல பாசாங்கு செய்து அவளது கன்னத்தைத் தொட்டு வருடி ரஸிப்பான்.

மாலை நேரங்களில் சில நாட்கள் தம்பதிகள் 'சினிமா'படம் பார்க்கச் செல்வர். சிலநாட்கள் கடலோரம் சென்று தனித்து உட்கார்ந்து சல்லாபம் செய்வர். வீடு திரும்பியவுடன் உணவருந்திவிட்டு அவரவர்க் குரிய வேலைகளைச் செய்வர். மணி பத்து அடித்ததும் என்ன வேலை யிருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு படுக்கச் செல்வர். படுக்கையறையில் முன்போலவே ஒருமூலையில் சுவாமி தியாகானந்தரின் பெரிய போட்டோ படம் சாத்திக் கிடந்தது. ஆனல் விசுவநாதன் முன்போல படுக்குமுன் அதன் முன் உட்கார்ந்து தியானம் செய்வதில்லை. நாளடைவில் அப்போட்டோ படம் மூலையில் இருந்ததையும் மறந்தான். அதுவும் தூசியேறி இருந்தவிடம் தெரியாமலிருந்தது. விசாலாட்சி ஒருநாள் அதை வெகு சாமர்த்தியமாக சமையற் கட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் அங்குள்ள பரணையின்மீது சாமான்களோடு சாமான்களாக வைத்து விட்டாள். விசுவநாதன், சுவாமி தியாகானந்தர், ஆசிரமம், யோகாப்பியாசம்—எல்லாவற்றையும் அறவே மறந்தான். அவனது உள்ளத்தில் தற்சமயம் விசாலாட்சி ஒருத்தியே வீற்றிருந்தாள். வேறெதற்கும் அங்கு இடமில்லை உலகமே அவனுக்கு விசாலாட்சிமயமாய் விட்டது.

இவ்வண்ணமாகப் பல மாதங்கள் சென்றன. தம்பதிகள் எல்லைகடந்த இன்பத்தில் திளைத்தனர். விசாலாட்சியும் சூல்கொண்டனள். பிரசவத்திற்கு சில மாதங்களுக்குமுன்னலேயே அவளது தாய் வீட்டினர் அவளை அழைத்துச்சென்றனர். அவள் கணவனிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது, "நான் போய்வருகிறேன்; என்னை மறந்துவிடாதீர்கள்; நீங்கள் அடிக்கடி என்னை வந்து பார்க்காவிட்டால் எனக்கு நிம்மதியிராது. என்ன, வருகிறீர்களா?" என்ருள்.

"விசாலாட்சி! நீ என்றும் என் நினைவிலிருந்து அகலமாட்டாய். உனக்கு சந்தேகமே வேண்டாம்; உன்னை அடிக்கடி வந்துபார்க்கிறேன்; சந்தோஷமாயிரு; உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். போய்வா" என்ருன் விசுவநாதன்.

* * * *

விசாலாட்சி பிறந்தகம் சென்ற முதல் இரண்டு மாதங்கள் விசுவநாதம் அடிக்கடி வேட்டகம் சென்று மனைவியைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் ஓய்வுநாளன்று வீட்டிலிருக்கையில், சமைபற்காரன் பரணையின் மீதுள்ள ஏதோ ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கையில், அதில் வைக்கப்பட்டிருந்த சுவாமி தியாகானந்தரின் பெரிய போட்டோ படம் பொத்தென்று கீழே விழுந்து கண்ணுடி உடைந்தது. கண்ணுடி உடைந்த சத்தத்தைக் கேட்ட விசுவநாதன் சமையலறைக்கு ஓடிவந்தான். அங்கு சுவாமிகளின் போட்டோவைக் காண ஆச்சரியப்பட்டான். உடனே அந்த போட்டோவை எடுத்து, தூசி தட்டி, கடைத்தெருவுக்குச் சென்று அதற்குப் புதுக்கண்ணுடி போட்டு முன்போல படுக்கையறையில் அதை வைத்தான். அன்றுமுதல் அவனுக்குப் பழைய நினைவுகளெல்லாம் குமுறிக்கொண்டு வந்தன. ரிஷீகேசத்தில் சுவாமி தியாகானந்தரிடம் தான் சொன்னதும், அவர் தன்னிடம் சொன்னதும் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. தனது அத்தியாத்ம லட்சியத்திலிருந்து வழுவி வெகுதூரம் பின்னடைந்திருப்பது அவனுக்கே ஆச்சரியமாகவிருந்தது. மீண்டும் அவனது உள்ளத்தில் ஆன்மக் கனல் மூண்டது.

விசுவநாதன் மெல்ல மெல்ல விசாலாட்சியை மறந்தான். முன்போல படத்திற்குமுன் உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தான். முதல் சிலநாட்கள் தியானம் குதிரவில்லை. ஒருபக்கம் விசாலாட்சியும் மற்றொரு பக்கம் சுவாமி தியாகானந்தரும் அவனது மனதை இழுத்தனர். இந்நிலையில் ஒருநாள், ''பகவானே! நான் புத்தி மயங்கி சம்சார சாகரத்தில் மீண்டும் விழுந்துவிட்டேன். கடவுளே! நீங்கள்தான் திருவுளமிரங்கி என்னைக் காப்பாற்றிக் கரையேற்றவேண்டும். இதோ, நான் எல்லாவற்றையும் துறந்து உமது மலர்ப்பாதங்களில் சரணடைகிறேன். எனது உள்ளத்தில் நீர் ஒருவரே குடியிருந்து எனக்கு வழிகாட்டவேண்டும்'' என்று சொல்லி ஆர்வமிகுதியினால் கண்ணீர்விட்டு அழுதான். அவனது உள்ளம் அனலிலிட்ட மெழுகைப்போல உருகவாரம்பித்தது. பிறகு மெல்ல மெல்ல அமைதியேற்பட்டது. ஒவ்வொருசமயம் படத்திற்குமுன் உட்கார்ந்துகொண்டு மூன்று மணிநேரம் நிச்சலனமாய் தியானம் செய்வான். சிலசமயங்கள் பகல் நேரங்களிலும் இருந்த விடத்தைவிட்டு நகராமல் மணிக்கணக்காக தியானத்தில் ஆழ்ந்திருப்பான். தியானம் குதிரவே, இல்லறவாழ்க்கையின்மீதுள்ள பற்றுதல் தானாக மறைந்தது. அவன் விசாலாட்சியைப் பார்த்து பலநாட்களாய் விட்டன.

* * * *

''ஏண்டி விசாலாட்சி, உன்னுடைய அகத்துக்காரர் வந்து இரண்டு வாரங்களுக்குமேலாய்விட்டதே. ஏன் இன்னும் வரவில்லை?''

''நானும் அதே விசாரமாய்த்தான் இருக்கிறேன், அத்தை. இப்படி வாராமல் இருக்க மாட்டாரே! ஏதாவது உடம்புக்கு வந்துவிட்டதோ என்னமோ? கண்ணைவிட்டு பார்த்துக்கொண்டு...............''

அதற்குள் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அத்தை காமாட்சி வேகமாய்ச் சென்று கதவைத் திறக்க, தபால்காரன் விசாலாட்சியின் விலாசமிட்ட ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான்.

''விசாலாட்சி, உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. உன் அகத்துக்காரர்தான் எழுதியிருப்பார். இந்தா''

விசாலாட்சி உறையைக் கிழித்து கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதில் பின்வருமாறு கண்டிருந்தது:

விசாலாட்சி, என்னை அடியோடு மறந்துவிடு. இனி நான் உன் கணவனல்ல. நான் இவ்வுலக வாழ்கையைத் துறந்து இமாலயம் சென்று யோகாப்பியாசம் செய்ய முடிவு செய்துவிட்டேன். நீ என்னைத் தேடிக்கொண்டு வரவேண்டாம். அது வியர்த்தமான வேலையாகும். எல்லாம் ஈசன் செயல். இனி நீ சுதந்திரமாக உன் வாழ்க்கையை நிர்ணயித்துக்கொள்ளலாம். நம்மிருவருக்குமுள்ள பந்தம் இன்றோடு அற்றுவிட்டது. எல்லாம் வல்ல இறைவன் உனக்கு வழிகாட்டுவாராக!

சென்ட்ரல் ஸ்டேஷன்,

சென்னை.

விசுவநாதன்.

''ஐயோ பாவி! அடசண்டாளா! இப்படியும் என்னை மோசம் செய்வாயோ! வயிற்றில் ஒரு குழந்தையையும் கொடுத்துவிட்டு, ஒருவருக்கு இருவராக எங்களை அநாதைகளாக்கிவிட்டுச் சென்றாயே! ஐயையோ! நான் இனி என்ன செய்வேன்!'' என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு தரையில் புரண்டு அழுதாள் விசாலாட்சி.

மானவீ.

K. வரதாச்சாரி, B.A., B.L.,

(டி. எல். ராய் அவர்களது நாடகத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பைத் தழுவி எழுதப் பட்டது.)

[நாடக பாத்திரங்கள்.]

அமரஸிம்ஹர் ... மேவாரின் அரசன்.

ஸகரஸிம்ஹர் ... அமரஸிம்ஹரின் சிற்றப்பன்.

மஹாபத் கான் ... முகலாய ஸேனாதிபதி: அமரஸிம்ஹரின் புதல்வன்.

அருணஸிம்ஹன்... மஹாபத்கானின் மருமகன்: ஸத்யவதியின் புதல்வன்.

கோவிந்தஸிம்ஹர்.. அமரஸிம்ஹரின் பிரதான ஸேனாதிபதி.

அஜயஸிம்ஹர் ... கோவிந்தஸிம்ஹரின் புதல்வன்.

கஜஸிம்ஹர் ... ஜோதிபுர அரசன்.

ராணி ருக்மணி ... மேவாரின் அரசனான அமரஸிம்ஹரின் மனைவி.

மானஸீ ... அமரஸிம்ஹரின் புதல்வி.

ஸத்யவதி ... ஸகரஸிம்ஹரின் புதல்வி.

கல்யாணி ... கோவிந்தஸிம்ஹரின் புதல்வி: மஹாபத்கானின் மனைவி.

இளவரசர், ஸைனிகர்கள், கிராமவாஸிகள், நகரத்தோர்கள், இன்னும் இதரர்களும்.

அங்கம் 1. காட்சி 1.

(ஸேனாதிபதி கோவிந்தஸிம்ஹரின் வீடு; கோவிந்தஸிம்ஹரும் அவர் குமாரன் அஜயஸிம்ஹரும்.)

கோவிந்தஸிம்ஹர் :—ஆமாம், அதற்காக என்னை அழைப்பானேன்?

அஜயஸிம்ஹர் :—அரசர் எல்லா சிற்றரசர்களையும் அழைத்திருக்கிறார். தங்களையும் கேட்டு, ஒரு முடிவு செய்யவேண்டுமாம்.

கோவிந்த :—முகலாயர்களுடன் ஸமாதானம் செய்துகொள்வதற்காகவா, என்னை யோஜனை கேட்கப்போகிறார்?

அஜய :—ஆமாம்.

கோவிந்த:—ஸமாதானம் என்பது எனக்கு என்ன என்றுகூடத் தெரியாதே! யுத்தம் செய்வதிலேயே இந்த ஐம்பது வருஷத்தையும் கழித்துவிட்டேன். கத்திகளின் ஜங்காரமும், பேரிகளின் நிநாதமும், விழுந்தவர்களின் கூக்குரலும்தான் நான் கண்டது. சத்ருவுடன் எப்படி ஸமாதானம் செய்துகொள்வது என்று நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையே! (அஜயஸிம்ஹர் ஒன்றும் சொல்லாமல் நிற்கிறார்; கோவிந்தஸிம்ஹர் சற்று யோசித்துவிட்டு பிறகு) ஆமாம், ஏன் ஸமாதானம் செய்துகொள்ள வேண்டுமாம்?

அஜய :—இப்பொழுதுதான் சீர்பட்டு தனதான்யம் நிறைந்து செழிப்புற்று வருகிறது இந்த தேசம். இதில் வீணாக, ரக்தத்தை ஓட விடுவானேன் என்கிறார் அரசர்.

கோவிந்த :—ஓஹோ! அதற்காக முகலாயர்களின் செருப்பை, நம் தலையில் தூக்கி வைத்துக்கொள்ள வேண்டியதோ? ஸரிதான். எனக்குத் தெரியுமே! அன்றே தெரியும். என்று மஹாராஜ பிரதாபஸிம்ஹர் ஸ்வயமாக வரித்த தரித்திரத்திற்குப் பதிலாக நாம் விலாஸ போகங்களை விரும்பலுற்றோமோ, அன்றே வந்தது நமது தாழ்வு.

அஜய் :—இல்லை, தற்சமயம் முகலாயர்களை எதிர்த்து நிற்க நம்மிடம் சக்தி இல்லையே. ஏன் வீணாக ரக்தத்தை சிந்தவேண்டும் என்று தான் யோஜிக்கிறார்.

கோவிந்த :—அஜயா! நீயும் அவர்கள் பக்கத்தில் போய்ச் சேர்ந்துகொண்டுவிட்டாயா? நாம் அடிமைகளாகி, தொழுவில் மாட்டிக் கொண்டுவிடுவதா? இந்த எழுநூறு வருஷங்களாக மின்னல்களையும் புயல்களையும் லக்ஷ்யம் செய்யாமல், கம்பீரமாய் விளங்கிக்கொண்டிருக்கும் நம் விஜயக்கொடி முகலாயர்களுடைய மிரட்டலைக்கேட்டா நடுங்கி கீழேவிழுந்துவிடும்? ஒரு பொழுதுமில்லை. இந்த கோவிந்தஸிம்ஹனின் சரீரத்தில் உயிர் தரிக்கும்வரையில், இந்த மேவார் ராஜ்யமும், ஸ்வாதீனமாகவே இருக்கும். நீ போ—அரசனிடம் நான் வருவதாகச் சொல். (அஜயஸிம்ஹன் போகிறான்; பிறகு சுவரில் மாட்டி யிருந்த கத்தியை எடுத்து உறையைக் கழற்றி கத்தியைப் பார்த்துக் துக்கொண்டே சொல்லுகிறார்.)

கோவிந்த :—என் அருமைத்தோழா! நான் இவ்வளவு நாளாக உன்னை கவனிக்கவில்லையே என்று மலினமுற்றாயா? வருத்தப்படவேண்டாம்! இதோ உன்னை மேவார் யுத்தத்திற்கு எடுத்துச் செல்லுகிறேன். நீ என் கையில் உள்ளவரையில், மஹாராஜா பிரதாபஸிம்ஹருடைய கீர்த்திக்கு ஓர் அவமானமும் ஏற்படாது. வா என்னுடன், முகலாயர்களுடைய சூடான ரக்தத்தை உனக்கு ஊட்டுகிறேன். வா—(அதைச் சுற்றிப்பார்க்கிறார்.) ஐயோ! முடியாதா? கை நடுங்குகிறதே! உன் கௌரவத்தை என்னால் காப்பாற்றமுடியாதா? ஐயோ கிழமாய்விட்டேனே! (கத்தியை வைத்துவிட்டு இரண்டு கைகளாலும் தலையை பிடித்துக்கொண்டு கீழே உட்காருகிறார்; கண்ணிலிருந்து நீர்த்துளிகள் வருகின்றன.) ஹே பகவான்! இப்படியுமா ஆகும்? (எழுந்து மறுபடியும் கத்தியை சுழற்றிப் பார்க்கிறார்; அதற்குள் அவர் பெண் கல்யாணி அவ்விடம் வருகிறாள்.)

கல்யாணி :—அப்பா, இது என்ன அப்பா?

கோவிந்த :—இது கத்தி, பார்!

கல்யா :—திடீரென்று, இதை ஏன் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்? வேண்டாம். வைத்து விடுங்கள். இதைக் கண்டாலே பயமாக இருக்கிறதே! (கோவிந்த ஸிம்ஹர் அதைத்தரையில் குத்திவைக்கிறார். அதை அன்புடன் பார்த்துக் கொண்டே கல்யாணியோடு பேசுகிறார்).

கோவிந் :—கல்யாணி! இது எவ்வளவு பயங்கரமாகவும், அழகாகவும் இருக்கிறது, பார். இதற்கு இப்பொழுது என்ன வேண்டும், தெரியுமா? ரத்தம், கொதிக்கும் ரத்தம், முகலாயர்களுடைய ரத்தம்!

கல்யா :—ஐயோ, ஏன் அப்பா உங்களுக்கு முஸல்மான்களிடம் இவ்வளவு கோபம்?

கோவிந் :—ஏன்? காரணத்தை உன் ஜன்ம பூமியிடம் சென்று கேள். இந்த தேசம் அவர்களுக்கு என்ன தீங்கு இழைத்தது என்று இதன்மேல் ராக்ஷஸர்களைப்போல் மீண்டும் மீண்டும் பாய்ந்து வந்து விழுகிறார்கள்? இந்த தேசத்தின் ஸ்வதந்திரத்தை அழித்து இதை தங்கள் வசப்படுத்திக் கொண்டு விடவேண்டும் என்று எவ்வளவு ஆக்ரஹம் அவர்களுக்கு? ஏன் என்று கேளேன்?.........ஆமாம்......... மனுஷ்யனுக்கு திமிர் அதிகரித்து கண்ணை மூடும் ஸமயத்தில் நியாய அநியாயம் புலப்படாது. அநியாயத்தை தடுத்து நியாயத்தை அவர்களுக்கு அப்பொழுது உணர்த்தக் கூடியது இந்தக் கத்தி ஒன்றுதான்! ஐயோ அதற்கும் நான் கிழமாகி விட்டேனே! தொண்டு கிழம்!

(கல்யாணி அழுகிறாள்.)

கோவிந் :—ஏன் அழுகிறாய்? கல்யாணி, பயமாக இருக்கிறதா? இதோ நான் இதை உறையில் வைத்து விடுகிறேன். நீ உள்ளே போ.

கல்யா :—நீங்கள் சற்று நிதானித்து யோஜித்துப் பார்த்தால், முஸல்மான்களிடம் இவ்வளவு............

(திரைவிழுகிறது)

காட்சி 2.

ஓர் வீதி; சாரணிகளும் ஸத்யவதியும் பாடிக் கொண்டிருக்கின்றனர். அஜயஸிம்ஹர் அவ்வழியாக வருகிறார்.

ஸத்யவதி :—தாங்கள், ஸேனைத் தலைவர் தானே?

அஜய :—ஆம்! தலைவர்களில் ஒருவன்.

ஸ்த்ய :—நான் ஒன்று கேள்விப்பட்டேன்: அது வாஸ்தவம் தானா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

அஜய :—என்ன கேள்விப்பட்டீர்கள்?

ஸத்ய :—மறுபடியும், முகலாய ஸேனை படை எடுத்து வருகிறதாமே?

அஜய:—வந்துவிட வில்லை; அதற்குள், அரசன் ஸமாதானம் செய்துகொள்ளா விட்டால் நிச்சயம் ஸேனை வந்துவிடும். முகலாய தூதனும் வந்திருக்கிறான்.

ஸத்ய:—நீங்கள் எல்லோரும், யுத்தத்திற்கு ஸித்தம் தானே?

அஜய :—அரசன் கட்டளைப்படி நடப்போம்.

ஸத்ய:—அரசன் அபிப்பிராயம் என்னவோ?

அஜய :—அரசனுக்கு ஸமாதானம் செய்து கொள்வதிலே தான் விருப்பம். எதற்கும், தீர ஆலோசிப்பதற்காக, ஸபையை கூட்டி இருக்கிறார்; என் தகப்பனாரையும் அழைத்து இருக்கிறார்.

ஸத்ய :—தங்கள் தகப்பனார் யார்?

அஜய: —பிரதான ஸேனாதிபதி கோவிந்த ஸிம்ஹர்.

ஸத்ய :—ஓ! தாங்கள் கோவிந்த ஸிம்ஹரின் புதல்வரா? அவர் அபிப்பிராயம் எப்படி?

அஜய :—யுத்தம் தான்.

ஸத்ய :—ஸரி. உங்களுக்கு நாழியாகிறது. (அஜயஸிம்ஹர் போகிறார்) ஸமாதானமா? ராணா பிரதாபஸிம்ஹரின் புதல்வனா, முகலாயர்களுடன் ஸமாதானம் செய்து கொள்வது? ஒரு நாளும் கூடாது. இதில் ஏதோ பிரமம் இருக்கிறது. (சாரணிகளை) நீங்கள் இங்கேயே இருங்கள்; நான் வந்துவிடுகிறேன் (ஸத்யவதி போகிறாள்.)

காட்சி 3.

ராஜசபை; அரசர் அமரஸிம்ஹர் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கிறார். எதிரிலும் அருகிலும் சிற்றரசர்கள் இருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் கோவிந்த ஸிம்ஹர் நிற்கிறார்.

ஜயஸிம்ஹன் :—மஹாராஜா, நம் தேசத்திற்குள் முகலாய ஸேனை பிரவேசித்து விட்ட பிறகு, இனி யோஜனை என்ன? சண்டை செய்தே தீர்வோம்!

அரசர் :—ஜயஸிம்ஹரே! இந்த சிறிய ராஜ்யம், இவ்வளவு பெரிய முகலாய ஸேனையை எப்படி எதிர்த்து நிற்கப் போகிறது? எதை நம்பி நாம் யுத்தம் புரிவது?

ஜயஸிம் :—க்ஷத்திரிய ஆண்மையை நம்பித் தான்!

கிருஷ்ணதாஸ் :—தங்கள் பிதா எதை நம்பி முகலாயர்களை எதிர்த்து நின்றார்?

அர :—அவர் விஷயமே தனி. அவர் ஓர் தைவசக்தி போலவும், ஓர் பூகம்பம் போலவும், ஓர் இடியைப் போலவும், திடீரென்று தோன்றினார், மறைந்தார். அவரைப்போல் நாம் எல்லோரும் ஆகிவிடமுடியுமா?

கிருஷ்:—எல்லோரும் அப்படி ஆகமுடியாது தான். ஆனாலும் அவர் புத்திரர்கூட, அவர் சென்ற மார்க்கத்தைத் துறந்து விடுவதா? அவர் தான் உயிரையும் விட்டுக் காப்பாற்றிய இந்த தேசத்தின் ஸ்வதந்திரத்தை, ஓர் ஆக்ஷேபணையும்கூட இன்றி, முகலாயர்களிடம் ஒப்புவித்து விடுவதா தாங்கள்?

அர :—கிருஷ்ணதாஸரே! அதெல்லாம் வீண் கனவு; அழகான மனக்கோட்டை. இந்தக் கல்பனைக்காக நாம் இப்பொழுது அனுபவித்து வரும், ஸுகத்தையும் சாந்தியையும் தனதான்ய ஸம்பத்தையும் இழப்பதா? ஏதோ பெயருக்காக மாத்திரம் கப்பம் என்று கட்டிவிட்டு நாம் ஸௌக்கியமாக ஸ்வச்சந்தமாக இருப்பதை விட்டுவிட்டு என் வீணாக ரக்தத்தைச் சிந்தவேண்டும்?

சங்கர :—யார்! நாமா கப்பம் கட்டுவது? அதிலும் முகலாயர்களுக்கா? பகவான் ராம சந்திரனுடைய வம்சத்தில் அவதரித்த நம்மிடம், கப்பம் வாங்க அவர்களுக்கு என்ன பாத்தியம், என்ன அதிகாரம்?

அர :—கப்பம் கொடுக்க வேண்டாம். எல்லாவற்றையும்—இந்த சாந்தி, ஸ்வச்சந்தத்தை, இந்த ஸௌகம் எல்லாவற்றையும் இழந்து விடுவோமா? என்ன; அதுதான் நலமோ? கோவிந்த ஸிம்ஹரே! உம் அபிப்பிராயம் என்ன?

கோவிந் :—(திடுக்கிட்டு) எனக்கா? எனக்கு ஒரு அபிப்பிராயமும் இல்லை. இந்த விஷயங்கள் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. நீங்கள் எதை சுகம் ஸ்வச்சந்தம் என்கிறீர்கள் என்றே தெரியவில்லை. எனக்கு துக்கம் தான் பழக்கம், துக்கத்துடன்தான் வளர்ந்தேன். ஆபத்துடன் தான் செழித்தேன். காட்டிலும் மலைகளிலும், பசியும் தாகமுமாய், ராணாவுடன் இருபது வருஷங்களாக அலைந்தேன். தரித்திரத்தையே நானாக விரதமாக வரித்துக் கொண்டேன். ஆஹா! எவ்வளவு மேன்மையானவாழ்வு அது! எல்லாம் போய்விட்டது. கோயில்கள் இருந்த இடத்தில் சிங்கார வனங்கள் தோன்றி விட்டன. ஜயத்வனியோடு முகரிதமான அதே மலைகளின் அடிவாரத்தில், இப்பொழுது, ஒய்யாரச் சோலைகளும், நர்த்தனசாலைகளும் தோன்றிவிட்டனவே! போய்விட்டது அந்த மஹத்வம்! சாகும் தறுவாயில் இருந்து கொண்டு நம்மை பரிதாபமாய்ப் பார்க்கிறது; இதோ உயிர் நீங்கி ஆகாயத்திற்குச் சென்று விடப்போகிறது.

கேசவ :—தாங்கள் உயிருடன் இருக்கும் வரையில், அந்த மஹத்வத்துக்கு யாதொரு அழிவும் இல்லை, ஹானியும் வராது.

கோவிந் :—நானா? நான் இனி என்ன செய்ய முடியும்? கிழமாகி விட்டேன். தொண்டுகிழமாய் விட்டேனே! இந்த நடுங்கும் கைகளில் கத்திகூட பிடிபடாதே! கால்களும் இந்தக் கூட்டை தாங்கி நிற்க மறுக்கின்றன. ஆனால், ஆசை மட்டில் இருக்கிறது. 'மறுபடியும் என் தாய் நாட்டிற்காக, முன் போல் துக்கத்தை அனுபவிக்க வேண்டும். காடு காடாக திரியவேண்டும்' என்று ஆசை மட்டில் இருக்கிறது. ஐயோ! பகவானே! துக்கத்தை ஸஹிக்கும் சக்தியைக்கூட பிடுங்கிக் கொண்டு விட்டீரே! (பேசாமல் நிற்கிறார்; மற்றவர்களும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விடுகிறார்கள்.)

அர :—ஸரிதான்! ஆனால், பாரதவர்ஷம் முழுவதுமே முகலாய சக்ரவர்த்திக்கு தலை பணிந்தபின், இந்த சிறு மேவார் மட்டும் எவ்வளவு நாட்கள்தான் எதிர்த்து நின்றுவிட முடியும்? திரள்திரளான, தடுக்க முடியாத அவர்கள் ஸேனைகளுக்கு முன், நாம் என்ன செய்யக்கூடும், சொல்லும்.

கோவிந் :—நான் சொல்ல வேண்டியதை முன்பே சொல்லி விட்டேன்; அவ்வளவுதான்.

அர :—ஸரி! யுத்தம் செய்வது வீண் என்பது தான் என் முடிவு; முகலாய ஸேனாதிபதியுடன் உடன்படிக்கை செய்துகொண்டு விட வேண்டியதுதான். சேவகா! முகலாய தூதரை அழைத்துவா. (சேவகன் போகிறான்.)

கோவிந் :—மஹாராணா! பிரதாப ஸிம்ஹரே! இதெல்லாம் உம் காதில் விழுந்து விடுமே! ஏ வஜ்ரமே! உன் கடும் இடியினால் இந்த ஹீன உச்சாரணத்தை மேலே கிளம்ப வொட்டாமல் அமுக்கிக்கொள். ஐயோ! மேவாரே! முகலாயர்களுடைய ஆதீனத்திற்குள் அகப்படும் முன்பே, ஓர் பெரிய பூகம்பம் உண்டாகி, அதில் த்வம்ஸமாக மாட்டாயா! (சேவகனும் முகலாய தூதனும் வருகிறார்கள்.)

அர :—தூதரே! உம் ஸேனாதிபதியிடம் சென்று, நாம் ஸமாதானம் செய்துகொள்ளச் சித்தம் என்று தெரிவியும்.

(ஸத்யவதி அவ்விடம் பாய்ந்து வருகிறாள்.)

ஸத்ய :—ஒரு நாளும் இல்லை! வேண்டாம், இந்த ஸமாதானம்! சிற்றரசர்களே! நீங்கள் ஸித்தமாகுங்கள்! யுத்த களத்திற்கு உங்களை அரசன் அழைத்துச் செல்லவேண்டாம்; நான் அழைத்துச் செல்லுகிறேன், வாருங்கள்.

கோவிந் :—அம்மா! நீ யாரம்மா? இந்த கோமள கம்பீர வஜ்ர த்வனி யாருடையது, அம்மா? இந்த கோர அந்தகாரத்தில் மின்னல் போல் தோன்றினாயே! நீ யாரம்மா?

அர :—உண்மையாகத்தான், நீ யார்?

ஸத்ய :—நான் ஓர் சாரணீ, மேவாரின் மஹிமையை தெருத்தெருவாய் பாடித்திரிகிறேன். என்னைக் குறித்து அவ்வளவு தெரிந்துகொண்டால் போதும்.

சிற்றரசர் :—என்ன ஆச்சரியம்!

ஸத்ய :—புறப்படுங்கள். அரசன், வேண்டுமானால், உதயஸாகரத்தின் சிங்காரச் சோலைகளில் படுத்துக்கொண்டு ஸ்வப்பனம் கண்டுகொண்டிருக்கட்டும்! உங்களை நான் யுத்தத்தில் நடத்துகிறேன், வாருங்கள்.

கோவிந் :—ஆஹா! என் சரீரத்திற்கு யௌவன தேஜஸ் எங்கிருந்தோ வந்து பாய்கிறது. உத்ஸாஹமும் ஆர்வமும் சரீரத்தை நிரப்புகிறது. சிற்றரசர்களே! நீங்கள் அரசனை இந்த அபகீர்த்தியினின்றும் காப்பாற்றுங்கள். மஹாராஜா ப்ரதாபஸிம்ஹரின் புதல்வனது கௌவரத்தை நழுவவிடாமல் ஸம்ரக்ஷியுங்கள்! இந்த சிங்காரத்தை உதைத்துத் தள்ளுங்கள். இந்த அழகு பொம்மைகளை உடைத்து எறியுங்கள். (பக்கத்தில் இருந்த பித்தளைப் பூச்சட்டியை எடுத்து எறிந்து, பெரிய தொங்கும் முகக்கண்ணாடியை உடைத்து எறிகிறார்) எடுங்கள் அஸ்திரங்களை, வாருங்கள். (அரசன் கையையும் பிடித்து இழுத்துக் கொண்டு) வாருங்கள், போவோம், யுத்தத்திற்கு.

அரசன் :—அப்படியே. தூதரே! உங்கள் ஸேனாபதியிடம் சென்று நாம் யுத்தம் செய்வதென்று தீர்மானித்துவிட்டதாகத் தெரிவித்துவிடும். சேவகா! குதிரையைக் கொண்டுவா.

ஸத்யவதீ :—ஜெய், மேவாட்ராணாகீ ஜெய்.

சிற்றரசர்கள்:—ஜெய்! மேவாட்ராணாகீ ஜே!

காட்சி 4.

உதயஸாகரக் கரை; மேவார் ராஜகுமாரி மானஸீ தனியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். அச்சமயம் ஓர் குருடான குழந்தையை அழைத்துக்கொண்டு ஓர் பிச்சைக்காரி அவ்விடம் வருகிறாள்.

பிச்சைக்காரி :—அம்மா மஹாராஜி! பிச்சை, அம்மணி!

மானஸீ :—இது உன் பையனா?

பிச் :—இல்லை, என் தங்கை குழந்தை; பிறவியிலிருந்தே குருடு; தாயும் இறந்துவிட்டாள்.

மான :—தகப்பனார்?

பிச் :—பரதேசம் போனவர் திரும்பிவரவில்லை.

மான :—அழகான குழந்தை! எனக்கு கொடுப்பாயா?

பிச் :—என்னை விட்டுவிட்டு இருக்காதே!

மான :—ஸரி, நீயே வைத்துக்கொள். ஆனால் தினம் ஒருதடவை அழைத்துக்கொண்டு வா. இந்தா! (ஓர் மோஹரா கொடுக்கிறாள்.)

பிச் :—மஹாராஜியாக இருக்கவேண்டும், தாயே! (குழந்தை அழைத்துக்கொண்டு போகிறாள்.)

மான:—ஆஹா! இந்த பிச்சைக்காரியின் ஆசீர்வாதம், எனக்கு தாயாரின் ஆசீர்வாதத்தைக் காட்டிலுங்கூட அன்பு நிறைந்ததாகவும், குழந்தையின் மழலை மொழிகளைக் காட்டிலுங்கூட மதுரமாகவும், ஜயபேரியின் த்வனியைக் காட்டிலுங்கூட பிரபலமாகவும் ஒலிக்கின்றதே. ஆஹா! (அஜயஸிம்ஹர் வருகிறார்).

அஜய :—மானஸீ!

மான :—வாரும், வாரும்; எனக்கு இப்பொழுது மிகுந்த ஸந்தோஷம். நீங்களும் இதில் கொஞ்சம் பங்கு எடுத்துக்கொள்ளலாம், வாரும்.

அஜய :—என்ன, அப்படி?

மான :—பரிபூர்ணமான ஸந்தோஷம். ஓர் பிச்சைக்காரி என்னை மனப்பூர்வமாக ஆசீர்வாதம் செய்துவிட்டுச் சென்றாள்.

அஜய :—இதில் என்ன விசேஷம்? உன்னை ஆசீர்வாதம் செய்யாதவர்களும் உலகில் உண்டா? சற்று வெளியிற் சென்று பார், தெரியும். குடிசைகளாகட்டும், கடைத்தெருவாகட்டும், உன்னை புகழாத இடமே கிடையாதே! போகட்டும். உன்னிடம் விடை பெற்றுக்கொள்ள வந்தேன்.

மான :—எங்கே செல்லப்போகிறீர்?

அஜய :—யுத்தத்திற்கு; காலையில் போகிறேன்.

மான :—எப்பொழுது திரும்பி வருவீர்?

அஜய :—வருகிறேனே இல்லையோ? யுத்தத்தில் இறப்பதும் உண்டு.

மான :- ஐயோ, அப்படிச் சொல்லாதீர்.

அஜய :—மானஸீ! நான் திரும்பிவராவிட்டால், நீ வருத்தப்படுவாயல்லவா?

மான :—ஆமாம்.

அஜய :—எவ்வளவு அலக்ஷ்யமாகச் சொல்லுகிறாய். கவலையற்ற பதில்! நான் உன்னிடம் எவ்வளவு அன்புகொண்டிருக்கிறேன், தெரியுமா? உனக்கு ஏன் என்னிடம் சிறிதளவும் அன்பும் இல்லை?

மான :—ஏன் இல்லை? இருக்கிறதே!

அஜய :—இல்லேவேயில்லை, வேறு யாரிடமோ உனக்கு;........

மான :—மனுஷ்ய வர்க்கத்தினிடமே எனக்கு அன்புதான். ஜீவராசிகள் அனைத்தும் என் அன்புக்குப் பாத்திரம் தான். உம்மிடம் மட்டில்தான் நான் அன்புகொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பது நீர் ஸ்வார்த்தபரர் என்று அல்லவா காட்டும்.

அஜய :—மானஸீ! அன்பின் தன்மையை நீ தெரிந்துகொள்ளவில்லையா, இன்னும்? எல்லோரையும் ஸமமாகக் கருதுவதுதானா அன்பு? என்னிடமும் உனக்கு அவ்வளவுதான் அன்பா?

மான:—கோபித்துக்கொள்ளாதீர்கள். ஏன் எல்லோரிடமுமே ப்ரியம் இருக்கக்கூடாது? நீர் யுத்தத்திற்குச் செல்லுகிறீர். அங்கு எதிரிகளை த்வம்ஸம் செய்யப்போகிறீர். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கொலை செய்கிறீரோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உமக்கு கீர்த்தி வளரும். அதேபோல் எவ்வளவுக்கெவ்வளவு நான் மனிதஜாதியையே நேசிப்பேனே, அவ்வளவுக்கவ்வளவு நான் அபராதம் செய்தவளாக ஒருவேளை ஆய்விடுவேனா?

அஜய :—மானஸீ! வாஸ்தவம் தான்; உன் ஹ்ருதயம் விசாலமானது; ஸ்நேகபூர்ணமானது; உலகிற்கே நன்மையை நாடி நிற்பது! அதை கட்டிப்போட்டு என்னிடமே வைத்துக்கொண்டுவிடவேண்டுமென்று நான் விரும்புவது பிசகுதான். உன் நல்ல கார்யங்களுக்கு இடையூறாக நான் இருக்க விரும்பவில்லை; என்னை மன்னிப்பாய்; நான் போய்வருகிறேன்.

மான :—கோபித்துக் கொண்டு போகவேண்டாம். பாருங்கள், யுத்தமே ஓர் கொலைத்தொழில் அல்லவா? உலகிலே அநியாயமும் கொடுமையும் அதிகரித்துத்தான் வருகிறது. அதைத் தடுப்பதற்காக சிற்சிலசமயம் யுத்தமும் அவசியமானதுதான். முடிந்தவரையில், வீண் கொலை செய்யாமல், உம்மை பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவே முயலும்; போய் வாரும். (அஜயஸிம்ஹன் போகிறான்.)

மான :—போய் வாரும். என்னுடைய பிரார்த்தனை உம்மை ஓர் கவசம்போல் கவர்ந்து ரக்ஷிக்கும். ஆமாம், இந்த யுத்தத்தில் எவ்வளவுபேர்கள் உயிரை இழப்பார்கள்! அவர்களுடைய ஸ்த்ரீகள், தாயார்கள், பெண்கள் எல்லோரும் என்னைப்போலவே பகவானைப் பிரார்த்தனைசெய்து மங்களம் சொல்லியே அனுப்பியிருப்பார்கள் அல்லவா? எவ்வளவு பிரார்த்தனைகள் நிஷ்பலமாக ஆகுமோ? பகவானே! இதற்கு ஒன்றும் வழி இல்லையா? பிரதிவிதானம் இல்லையா? (கண்களில் நீர் நிரம்புகிறது; மேலே பார்த்துக்கொண்டே இருக்கிறாள்; சிறிது நேரத்தில் முகம் பிரஸன்னமாகிறது. கையைக் கொட்டிக்கொண்டு, ஸந்தோஷமாக) ஆம் ஆம், அதுதான் ஸரி. இறப்பவர்களுக்கு நான் யாதொரு உதவியும் புரியமுடியாதுதான். ஆனல் காயம்பட்டவர்களை நான் நிச்சயமாய்க் காப்பாற்றலாம் அல்லவா? அவர்களுக்கு ஸேவையும் சுச்ரூஷையும் புரியலாம். அப்படியே செய்கிறேன்; ஏன், இதில் என்ன பிசகு? ஒன்றுமில்லை; அப்படித்தான் செய்யவேண்டும். (ராணி ருக்மணி வருகிறாள்.)

ராணி :—கேட்டாயா, மானஸீ?

மான :—என்ன அம்மா?

ராணி :—உன் தகப்பனார் யுத்தத்திற்குச் சென்றுவிட்டார்; அதுவும் முகலாயர்களுடன் யுத்தமாம்.

மான :—ஆமாம், கேட்டேன்.

ராணி :—கேட்டாயா? என்னமோ அலக்ஷ்யமாக கொஞ்சம்கூட கவலை இல்லாமல், சொல்லுகிறாயே! யுத்தம் என்றால் என்ன என்று தெரியுமோ உனக்கு? எவ்வளவுபேர் காயம்பட்டு விழுவார்கள், எவ்வளவுபேர் உயிரற்று விழுவார்கள், தெரியுமா? அதுவும் இத் தடவை 'பாத்ஷா'வுடன் யுத்தம்! எல்லாம் போய்விடும். ஸர்வநாசம் தான்; யுத்தத்தில் இறப்பவர்களை ஸாகசாலிகள் என்று ஆகிவிடும், தெரியுமோ?

மான :—ஆமாம், அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

ராணி :—நீயா? உனக்கு அதற்காகத்தான் கல்யாணத்தை செய்துவிடவேண்டும் என்று சொன்னேன். ஜோதிபுர அரசகுமாரனுக்கு நிச்சயம் செய்யச் சொன்னேன். இனி எது? எல்லாம் போய்விடும். எல்லோரும் நாசம் தான்; அதற்குத்தான் அப்பொழுதே கல்யாணத்தை முடித்துவிடுங்கள் என்று மன்றாடினேன். அரசன் கேட்டால்தானே!

மான:—அம்மா! நீ கவலைப்படாதே. கல்யாணத்தைக் காட்டிலும் உயர்ந்த ஒன்றை, நான் எனக்கு நிச்சயம் செய்துகொண்டுவிட்டேன்.

ராணி :—அது என்ன?

மான :—நான் யுத்தகளத்துக்குச் செல்லுகிறேன்.

ராணி :—ஏனடி?

மான:—நீ பயப்படாதே! நீதானே சொன்னாய், 'யுத்தம் என்றால் எவ்வளவு பேர்கள் காயப்பட்டு அவதிப்படுவார்கள்' என்று. அதற்காகத்தான் நான் அங்கு சென்று அவர்களுக்கு முடிந்தவரையில் உதவி செய்ய வேண்டும்.

ராணி :—ஸரிதான், எல்லாம் இந்த அஜயஸிம்ஹனின் துர்ப்போதனைதான்! அப்பொழுதே எனக்குத் தெரியுமே!

மான :—இல்லை இல்லை; அவர் கொல்லப் போகிறார்; நான் காப்பாற்றப் போகிறேன்.

ராணி :—அது எல்லாம் நீ செய்கிற வேலையா? சே, நீ எங்கும் போகக்கூடாது.

மான :—அம்மா! உனக்கு என்னைத் தெரியாதா? ஓர் கார்யம் செய்யத்தான் வேண்டும் என்று நான் தீர்மானித்துவிட்டால், பிறகு நான் செய்யாமல் இருக்கமுடியுமா? நான் நிச்சயமாக போகத்தான் போகிறேன். நீ கவலைப்படாதே; நீ போ; நான் வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டும்.

ராணி :—நீ யாருடன் செல்வது?

மான :—அஜ்யஸிம்ஹரின் ஸேனையுடன்.

ராணி :—ஸரிதான்! நான் பயந்தபடியே ஆகிவிட்டதா! போ! அரசனும் இப்பொழுது இங்கு இல்லையே!

மான :—தகப்பனார் இம்மாதிரியான கார்யம் நான் செய்வதை தடுப்பார் என்று நினைக்கிறாய்? அவர் எனக்கு இன்னும் உத்ஸாஹம் அளிப்பார்.

ராணி :—எல்லாம் அவர் உனக்கு கொடுத்த இடம்தான்! நீ மனம் போன போக்கெல்லாம் போய்க்கொண்டிருக்கிறாய். போயிற்று, எல்லாம் போய்விட்டது! என்ன உபத்ரவம்!

மான :—அம்மா! நீ கவலையே படாதே. ஓர் மனிதன் மற்றொரு மனிதனை கொல்லுகிறான். என்னால் முடிந்த வரையில் இந்த ஹிம்ஸையின் கொடுமையைக் குறைக்க முயல வேண்டாமா? நீ போ, அம்மா, ஒன்றும் பயமில்லை. நீ போ.

ராணி :—அதுதான் கலிகாலம் முழுக்க முழுக்க வந்துவிட்டது, போ.

மான :—ஆம். அதுதான் ஸரி! நல்ல யோஜனை! யோஜிக்க யோஜிக்க, சிறந்த கார்யமாகவே எனக்குத் தோன்றுகிறது. ஓர் புதிய உத்ஸாஹம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. பரம ஆனந்தம் உண்டாகிறது. இந்த ஸேவை சச்ருஷையில் அன்றோ, மனப்பூர்வமான ஸந்தோஷம்! இதற்கு முன் கல்யாணஸாகம் எம்மாத்திரம்!

காட்சி 5.

மேவார் யுத்தகளம்; முகலாய ஸேனைத்தலைவர் காயம்பட்டு விழுந்துவிட்டார்; ஸைனிகர்கள் ஓடுகிறார்கள்; ராஜபுத்ரர்களுடன் அஜயஸிம்ஹர் ஜயத்வஜத்துடன் வருகிறார்.

அஜய :—ஜெய் மேவார் ராணகீ ஜெய்!

ஸைனிகர்கள் :—ஜெய் மேவார் ராணகீ ஜெய்! அஜயஸிம்ஹகீ ஜே! (போகிறார்கள்; மானஸீயும் சில ஸைனிகர்களும் வருகிறார்கள்.)

மான:—உங்களில் சிலர் அங்கு பார்த்துக் கொள்ளுங்கள்; இங்கு நான் கவனித்துக் கொள்ளுகிறேன். (சில ஸைனிகர்கள் செல்கிறார்கள்.)

மான :—ஆஹா! எங்கு பார்த்தாலும் கொலையும், காயமும், கூக்குரலும் கதறலுமேயா? பரிதாபகரமான காட்சி! ஹே பகவானே! உம் ராஜ்யத்திலேகூடவா இப்படி மனிதனே மனிதனை அடித்துக் கொன்றுகொள்ளவேண்டும்? இந்த ஹிம்ஸை ஓயாதா—ஒழியாதா? தங்குத் தடை இன்றி இப்படிக் கொன்றுகொண்டே இருக்கின்றார்கள்! நீர்—தயாமூர்த்தியான நீர், பார்த்துக்கொண்டே—வேடிக்கை பார்த்துக்கொண்டே இருக்கின்றீரே! உலகம் முழுவதும் இந்த பாபத்தின் பயங்கர விஜய ஹுங்காரம் ஆக்ரமித்து கோஷிக்கின்றதே—நீர் இதை அடக்கமுடியாதா? ஹ்ருதயத்தை பிளக்குமே இந்த கோரம்! இந்த பிணக் குவியல்கள்! காயமுண்டவர்களின் ஆர்த்த த்வனி! கேட்க ஸஹிக்க முடியவில்லையே!

காயம்பட்ட ஒருவன் :—ஐயோ! உயிர் போகாதா?

மான:—அப்பா, எங்கே அடா, அப்பா, காயம்? எங்கே பட்டது? உனக்கு ரொம்ப கஷ்டம், பாவம்.

காயம்பட்டவன்:—ஐயோ, இங்கே, இங்கே தான். நீ யாரம்மா?

மான :—சற்று பேசாமல் இரு; இதோ. (துப்பாக்கி குண்டு பாய்ந்த இடத்தில் துணியை கட்டுகிறாள்; ஸைனிகன் ஒருவனுக்கு ஸம்க்ஞை செய்கிறாள்; அவன் ஓர் கோப்பையைக் கொடுக்கிறான்.) அப்பா! இந்தா இதை சாப்பிட்டுவிடு; இனி பயமில்லை. (அதற்குள் காயம்பட்ட மற்றொருவன் கத்துகிறான்; அவனருகில் செல்கிறாள்.) பேசாமல் இரு; இதோ உனக்கு வேண்டியதை எல்லாம் நாங்கள் செய்கிறோம், பார்.

காயம்பட்ட மற்றொருவன் :—ராமா! வேதனைப்பட முடியவில்லையே.

மான :—(அவனருகில் சென்று) அப்பா! உயிர் இருக்கிறது. (ஓர் ஸைனிகனைக் கூப்பிட்டு) இவனைப் பார்த்துக்கொள்.

முகலாயத் தலைவன் :—ஐயோ! தண்ணீ, தண்ணி—

மான :—(ஓர் ஸைனிகனைக் கூப்பிட்டு தீர்த்தம் வாங்கி) இந்தா, இதைக் குடி.

முகலாய :—(குடித்து) அப்பா! அல்லாஹோ! நான் பிழைத்தேன். (சில ஸைனிகர்களுடன் அஜயஸிம்ஹர் வருகிறார்.)

அஜய :—இது யார்? மேவார் ராஜகுமாரியா?

மான :—அஜயர்!

அஜய :—(அருகில் வந்து) மானஸீ!

மான :—உங்கள் ஸைனிகர்களில் சிலரை எனக்கு உதவிக்கு அளிக்கலாமா? எங்கள் ஆட்கள் போதவில்லை.

அஜய :—என்ன செய்யவேண்டும்?

மான :—இந்த காயம்பட்டவர்களை தூக்கிக்கொண்டுபோய் ஸேவாசிரமத்தில் விடவேண்டும்.

அஜய :—ஸைனிகர்களே! இவர்களைத் தூக்கிச் செல்லுங்கள். (ஸைனிகர்கள் எடுத்துச் செல்லுகிறார்கள்.)

மான :—இதுதான் ஆனந்தம்! பரிபூர்ண ஸுகம் இதிலேதான்.

அஜய:—என்ன ஜ்யோதிஸ்! ஆஹா!

மான :—எது? எங்கே?

அஜய:—உன் முகத்திலேதான். கோரமான கூக்குரல்கள், பிரதிக்ஷணம் கிளம்பும் இந்த ம்ருத்யுவின் லீலா க்ஷேத்ரத்தில், இந்த பயங்கர ச்மசானத்தில், இருட்டையே அதிகரிக்கும் இந்த நக்ஷத்ரங்களின் அரை வெளிச்சத்தில் தோன்றும் இந்த ஜ்யோதிஸ், புயலடித்து கொந்தளிக்கும் கடலின்மேல் உதிக்கும் ப்ராதக்கால ஸூர்யனைப் போன்றும், இருண்டு சுழலும் மேகங்களுக்குமேல் புலப்படும் ஸ்திரமான நீல ஆகாயம் போன்றும், துக்கத்தின் மேல் வந்து விழும் கருணையின் கடாக்ஷம் போன்றும்—என்ன அபூர்வமான ஜ்யோதிஸ் இது! எவ்வளவு ரம்மியமான மூர்த்தி இது! எவ்வளவு அத்புதமான மானஸீ! (கையை பிடித்துக்கொள்கிறார்.)

மான :—அஜயரே!

காட்சி 6:

(உதயபுர ராஜமார்க்கம்; காலை; சாரணிகள் தேசிய கீதம் பாடிக்கொண்டு முன்செல்லுகிறார்கள்; பின்னால், அரசரும் கோவிந்தஸிம்ஹர், அஜயஸிம்ஹர், முதலியோர்களும் வெற்றிக்கொடி முதலிய ஜயசின்னங்களுடனும், ஜெயித்துப் பிடித்த எதிரிகளின் கொடிகளுடனும் வருகின்றனர்.)

எல்லோரும் :—ஜெய் மேவாட் ராணாகீ ஜெய்!

அங்கம் முதல் முற்றிற்று.

(தொடரும்.)

வாழ்க்கைதாங்கி.

(மஞ்சேரி ஸு. ஈச்வரன் : தமிழில் எழுதியது வே. ராகவன்.)

கிணறுபோல் கிடந்த இருண்ட இரவில் நழுவி விழுந்தன குண்டுகுண்டாக மூன்று நாத பிண்டங்கள்; மணிக்கூண்டில் நகர கடிகா யந்திரம் காலை 3 மணி அடித்தது. மூன்றாவது அடியின் கார்வை, உறங்கிக்கொண்டிருக்கும் ஜம்புவின் நாடிகளை சற்றுத் தொட்டெழுப்பியது; ஒருதரம் புரண்டு, விலகும் தலையணையை இழுத்துக்கொண்டான்; தன்னைவிட்டு விலகினாற்போல் தோன்றிய கால் கைகளைச் சுருக்கிச் சேர்த்துக்கொண்டான்; தன்னைச் சுற்றியிருக்கும் உலகையும் சுருக்கிக்கொள்ள, பக்கத்திலிருந்த பெரும் கம்பளியொன்றை இழுத்துத் தன்னை முழுதும் மூடி, ஸமாதி செய்துகொண்டான். கொஞ்சம் 'கம்' என்று இருந்தது. இப்படி ஜம்பு படுத்துக்கொண்டிருந்த இடம் ப்ம்பாயில் மாடுங்காவில் ஒரு அறை; ஆனாலும் சற்று நேரத்திற்கெல்லாம் கம்பளிக்குள் தன்னையே சுருட்டிக்கொண்டு பிண்டம்போல் கிடக்கும், ஜம்பு ஏதோ இன்ப வெள்ளம் ஒன்று அலையெழுந்து மோதி ஓடிக்கொண்டிருப்பதாகவும், தான் அலைநுனிகளில் குதித்துக் குதித்து, நுரைப்பூவை நாற்புறமும் வீசிக்கொண்டும், அக்கரையிலும் இக்கரையிலும் பாடும் பறவைகளுக்குத் தொங்குங் கொடிகளிலிருந்து கனிகளை பறித்துக் கொடுத்துக்கொண்டும்......ஆஹா! எங்கேயோ மாயமாய், மயக்கமாய் போய்க்கொண்டிருப்பதாய் காண ஆரம்பித்தான். கற்கட்டியாய் கிடந்த அவன் உள்ளம் விரிந்தது; கயிற்றுக் கட்டிலைப்போல் தொய்ந்துபோயிருந்த அவனது நரம்புகள் 'விண்' என்று இறுகி, 'நீயான்-ஸைன்' கம்பிகள்போல் ஓர் அபூர்வ மின்சார சக்தியேறி ஜ்வலிக்க வாரம்பித்தன. அவனுக்கெதிரில் அறையிலிருந்த 'எலக்ட்ரிக் பல்ப்' நக்ஷத்திரம் போல் விளங்கிற்று; சுக்கிரோதயம் ஆனாற்போலிருந்தது. 'ஷெல்பு'களும், புஸ்தகங்களுமா நாற்புறமும் கிடந்தன? இல்லை, எல்லாம் பசுஞ்செடிகளாயும் செம்மலர்களாயும் தோன்றின. துணிக்கொடியில் தொங்கிக்கொண்டிருந்தவையோ, அலங்காரக்கொடிகள் போன்றன.

"நாம் எங்கே இருக்கிறோம்? நாம் என்னமாய் மாறிக்கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே போய்கொண்டிருக்கிறோம்?......ஸரி, மாமியாத்துக்குப் போகனும் இன்னிக்கு; மங்களத்தை அழச்சுண்டு, 'பீபிள்ஸ் பார்க்கு'ப்போய், 'த்ஸூ'விலே மிருகங்கள்ளாத்தையும் காண்பிக்கிறேன்னு சொல்லிருந்தேனே; செவ்வாக்கிழமை இன்னிக்குத்தான்; பாத்தியா, மறந்து போகத் தெரிஞ்சேனே; இதோ கிளம்பறேன், நாழியாச்சு—" என்று ஜம்பு உடுப்புகளை மாட்டிக் கொண்டு தன் மாமிவீட்டைக் குறித்து நடந்தான்.

முகப்பில் இழைத்த மணிபோலும், நெற்றியிலிட்ட திலகம் போலும் வாசற்படியிலேயே ஜம்புவை எதிர்பார்த்தவளாய் மங்களம் நின்றுகொண்டிருந்தாள். "அத்தான் வந்துட்டான்" என்று அவள் கைகளை வீசிக்கொண்டு குதிக்கவாரம்பித்ததும், பறந்துவிடப்போகும் பக்ஷி போல் காணப்பட்டது அவளுடைய சிறு உருவம். மங்களத்துக்கு வயது பதின்மூன்று ஆய்விட்டது; அவள் குழந்தையாய் தவழும் பருவத்திலிருந்து அவளை ஜம்பு பார்த்தவன்; அப்படி இருந்தும் அன்று அவள் திடீரென ஸங்திக்கப்பட்ட அத்புதம்போல் ஜம்புவின் கண்களுக்குத் தோன்றினாள். பளபளவென்று சாட்டையாய்க் கிடந்த பின்னல்; அளந்து வைத்த மூக்கு; ஜீவன் துடிக்கும் உதடு; மனதுபோல தெளிந்து பரந்த கண்கள்.

"அத்தான்! நீ மறந்துட்டேன்னு நினைச்சேன்"..."இல்லேன்னா இன்னொரு நாளைக்கு ஆகட்டம்னு இருக்கயோன்னமோன்னு நினைச்சேன்"......"அம்மா, யாரோ வந்திருக்கா" என்று சொல்லிவிட்டு ஜம்புவைப் பார்த்து, தன் உதடுகளில் விரலை வைத்து 'உஸ்' என்று ஸம்க்ஞை செய்தாள் மங்களம். உள்ளிருந்து விரைந்துவந்த தாயார் வந்திருப்பவரைப் பார்த்ததும் மங்களத்தைப் பார்த்து, "மங்களம்! யாரோ தெரியாதவா வந்துருக்கா, நீ உள்ளே போ" என்றாள்.

"ஸரி, நாழியாச்சு 'த்ஸூ'வுக்குப்போக; மாமி, சட்டுனு கிளம்பணம்" என்றான் நகைத்தவனாகவே அத்தான் ஜம்பு.

உலகின் சுருக்கமாய் விளங்கியது மிருக பக்ஷி காட்சிச்சாலை. மரியாதைக்குக் கட்டுப் பட்ட மனிதன்போல் கூண்டிற்குள் கிடந்து ஒன்றும் செய்ய இயலாதவையாய் தவித்தன சிங்கங்களும், புலிகளும்; தரையை அறைந்து, எலும்புகளை விருந்துண்டுகொண்டிருக்கும் சிங்கங்களின் இடிமுழக்கம் மங்களத்தைத் தூக்கி வாரிப்போட்டது. புலிகளின் கூண்டுகளின் நாற்றத்தைத் தாங்கமுடியாமல் நகர்ந்தாள் மங்களம். 'வளைவில் எவ்வளவு இருக்க முடியும், விகாரத்தில் எவ்வளவு இருக்க முடியும், என்னைப்பார்' என்றதுபோல் ஒட்டகம் ஒருபக்கம் நின்றுகொண்டிருந்தது. கரடிகள் மூக்கைச் சிணுக்கிக்கொண்டு, நிற்காமல் கூண்டிற்குள் ப்ரதக்ஷிணஞ் செய்துகொண்டிருந்தன. ஒன்றுக்கொன்று கோபித்துக் கொண்டனபோல் பிரிந்து தத்தம் வழியே விரைந்து போய்க் கொண்டிருக்கும் கோவேறு கழுதைகளைப் பார்த்த ஜம்புவுக்கு ராஜீயவாதிகளின் நினைவு வந்தது. "அத்தான் அத்தான், இதோ பார்" என்றாள் மங்களம். "இது ஒட்டகச்சிவிங்கி; ஒட்டகத்தைவிட சிறந்த அழகு! என்ன கால்கள், என்ன கழுத்து! இது நிற்பதைவிட ஓடுவது விகாரம்" என்றான் ஜம்பு. "என், அத்தான், இப்படித் தனியா நிக்கறது?" "மதிப்பு அவ்வளவு!" அவ்விடத்தைவிட்டு குரங்குகளின் பக்கம் வந்தார்கள்; சிறு குரங்குகள், மனிதக் குரங்குகளான 'கொரில்லா, உராங்குடாங்' முதலியன; ஒரு கிடாக்குரங்கு மங்களத்தைப் பார்த்துக் கண்ணடித்தது! அதை அவள் தெரிந்துகொள்ளாமல், வாங்கியிருந்த பட்டாணிக் கடலையை சிறு குரங்குக் குஞ்சுகளிடம் போட்டாள். மௌனிபோல் தவஞ் செய்து கொண்டு ஒருபக்கமாயிருந்த 'கொரில்லா'வைப் பார்த்துவிட்டு நகர்ந்தார்கள்.

பக்ஷிகளிருக்குமிடம் வந்தார்கள். மங்களம் மயில்களிருக்குமிடம் நெருங்கியதும், மயில்கள் கூக்குரலிட்டுத் தோகையை விரித்து ஆடவாரம்பித்தன. "என்ன இது?" என்று ஜம்புவைக் கேட்டாள் மங்களம். "மங்களம், மயில்களுக்குப் பாம்புகள் ஆகாரம்; உன் நீண்ட கரும்பின்னலைக் கண்டு கருநாகமென்று மயங்கி மயில்கள் இப்படிக் கூவிக் கூத்தாடுகின்றன." இப்படிச் சொல்லிக் கொண்டு, மங்களத்தின் கருநாகப் பின்னலைக் கையிலெடுத்துத் தடவிக் கொடுத்தான் ஜம்பு; பட்டுபோலிருந்தது அதன் ஸ்பர்சம். "ஆமாம், பாம்புபோலேதான் இருக்கிறது!" என்றான். "அப்புடீன்னா, நீதான் பாம்பாட்டியாம்!" என்றாள் மங்களம்.

மங்களத்தை ஆடவைக்கும் பாம்பாட்டியாயிருந்து ஓயாமல் மகுடியூதும் மனோராஜ்யத்தை ஒவ்வொரு கணமும் வேண்டிக் கொண்டுதான் இருந்தான் ஜம்பு. ஆனால் ஜட்ஜு பதவியிலிருக்கும் தன் மாமனின் ஒரே அரும் புதல்வியான மங்களத்தை ஜம்பு எப்படி அடைய முடியும்? சென்னை 'ராமகிருஷ்ண ஹோம்' மூலம் படித்து, பி.ஏ., தேறி, வேலையின்றித்திரியப்போகும் ஜம்பு, மங்களத்தை விட பன்னிரண்டு வயது பெரியவன், தாய் தந்தையற்றவன்—இவனா மங்களத்தை யடையத் தகுதியானவன்" என்று தன்னைப் பற்றித் தானே மனதிற்குள் விசாரணை செய்துகொண்டான்.

தன் குழந்தைப் பருவத்திலேயே தன் தாயாரிடம் குடும்பப் பளுவை இறக்கி விட்டு, ஜம்புவின் தகப்பனார் காலமானார். அந்தப் பளுவை சிறிது காலம் தாங்கிவிட்டுத் தாயாரும் காலமானாள். அதற்குமேல் மாமனின் சிபார்சைக்கொண்டு 'ராமகிருஷ்ண ஹோ'மில் சேர்க்கப்பட்டு அநாதப்பிள்ளையாய் ஜம்பு படித்துவந்தான். 'லீவு' நாட்களில் மாமன் வீட்டிற்கு வருவான். ஜம்புவும் மங்களமும் விளையாடுவார்கள்; மங்களத்திற்குக் குழந்தைப் பருவத்திலிருந்து அந்தந்த வயதுக்கேற்ற விளையாட்டுகளாலும் விநோதங்களாலும் களிப்பூட்டி வந்தான். தான் பீ.ஏ. தேறிய வருஷம், கோடை விடுமுறை நாட்கள்; மாமன் வீட்டிலேயே தங்கியிருக்கலாமென்று ஜம்பு வந்திருக்கும் ஸந்தர்ப்பம். திடீரென இடி விழுந்தது!

மங்களத்திற்குக் கல்யாணம் நிச்சயித்திருக்கிறார்கள்! "ஜம்பு, மங்களத்துக்குக் கல்யாணம்! பையன் எம்.ஏ., எலக்ட்ரிக் இஞ்சினீர்

பிள்ளே!......'' என்று மாமி சொன்னதும், ஜம்புவின் மனம் இடிந்து சளசளவென்று விழுந்தது.

ஜீவன்மரணத்தை யடைந்த ஜம்பு மங்களத்தின் கல்யாணத்தின்போது ஊரில்லாமலிருக்க வேண்டுமென்று முதலில் எண்ணினன்; எண்ணினனே யல்லாமல், அதை நடத்த முடியவில்லை. ஒவ்வொரு நாளேயும் ஒரு விசித்திர மலராய் தொடுத்துத் தான் மங்களத்துடன் கழித்த ஆண்டுகளை கதம்பமாலையாய் தன்னுள்ளத்தில் அணைத்தணைத்து வைத்திருந்தான் ஜம்பு; அம்மாலை நழுவி விழுந்துபோய், அதன் மலர்களும் அவிந்துபோயின.

சில நாட்கள் கழித்து அவனுக்கு பி.ஏ. தேறிவிட்ட செய்தி வந்தது. ஆனல் அச் செய்தியை உணர்ச்சியின்றியே ஜம்பு ஏற்றுக் கொண்டான். ''வாழ்க்கையில் தவறி விட்டவன் புத்தகங்களில் தேறினல் என்ன பயன்?'' பற்பல சில்லறை 20ரூ, 30ரூ. உத்யோகங்களில் புகுவதும் வெளிவருவதுமாயிருந்தவன் திடீரென ஒரு நாள் கிளம்பி பம்பாயை அடைந்து, அங்கு குஜராதி வியாபாரியொருவனின் பெரும் வியாபார ஸ்தலத்தில் வேலையைப் பெற்றான்.

மங்களத்தை அவன் பார்த்து சில வருஷங்களாயின. பம்பாயில் வேலை பெற்ற பிறகு மாமிக்குக் கடிதமொன்று எழுதியிருந்தான்; ஆனல் அவளிடமிருந்தும் வெகு நாட்களாய் பதிலே இல்லை. கடைசியில் ஒரு கடிதம் வந்தது; தன்னை ஏதாவது வீட்டில் நடக்கப் போகும் விசேஷத்தைக் குறித்து வரச் சொல்லி மாமி எழுதியிருப்பாளென்று ஆவலுடன் கடிதத்தை உடைத்தான் ஜம்பு......... சுப ஸமாசாரத்தையெதிர்பார்த்த ஜம்பு முதற் பிரஸவத்தையே தாங்காமல் மங்களம் மாண்ட விவரத்தைப் படித்தான்.

............பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த இச் சம்பவங்கள் கனவில் புரண்டு கொண்டிருக்கும் ஜம்புவின் நினைவில் தெளிவாய் தோன்றின; எல்லாவற்றிலும் மிகத் தெளிவுடன் அவன் முன்னெருநாள் மங்களத்தை 'த்ஸ-பி'வுக்கு அழைத்துக் கொண்டுபோனது தோன்றிற்று; பட்டுபோல் வழவழவென்று தொங்கிய அவளது சாட்டைப் பின்னல் ஜம்புவின் கையில் கிடந்தது. ''அப்படீன்ன, நீ தான் என் பாம்பாட்டியாம்'' என்ருள் மங்களம்...........

எலக்ட்ரிக் மணி இரண்டுதரம் அடித்தது; செருப்பு சப்தஞ் செய்ய, ஒருவன் கதவைத் திறந்து ஒரு கண்ணுடிக் குப்பியை வைக்கும் சப்தம் கேட்டது: பால்காரன் வந்து பாலை வைத்துவிட்டுப் போனன். பால்காரன் சப்தத்தினல் படுக்கையிலிருந்து எழுந்திருந்தான் ஜம்பு. தன்னருகிலிருந்து மங்களம்போல் யாரோ நகர்ந்து வாசற்படி வழியாய் மறைந்து போவது போலிருந்தது. கனவிலிருந்தும் சற்றுத் தெளிந்து ஜன்னல் கதவுகளைத் திறந்தான்; படுக்கைக்கெதிரில் கண்ணுடி தென்பட, அதில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். தலையில் நரை, வழுக்கை இரண்டும் தோன்றி விட்டன; இன்னும் ப்ரம்மசர்யத்திலேயே இருந்துகொண்டிருக்கும் தன்னை சற்று தியானித்துக் கொண்டான். செக்குமாடுபோல் உழைப்பில் அவனைப்பூட்ட, பகல் மறுபடியும் அவனைத் தேடி வந்து விட்டது. தன்னையும் அடையாமல், அவனை யடைந்தவனிடமும் தங்காமல் மறைந்துபோன மங்களத்தைக் குறித்து அவனுக்கிருந்த துயரமும் அவனுடைய வாழ்க்கையை ஒரு வகையில் தாங்கிச் சென்றதென்றே சொல்லவேண்டும்.

சக்திக் குழவி.

(காரைடுகோத்தான் ஸ்ரீ ராமநாகப்பன் பாடியன.)

பைங்குழந்தாய் பாவையே—பராசக்தி
பைம் பொன்மணி யழகே
எங்கள் குலக் கொழுந்தே—என்றும்
ஏற்றம் புரிபவளே.

அன்பின் சிகரம் நீயே—நான்
ஆனந்தமாய் இருப்பேன்
என்பின் திறம் வளரும்—பராசக்தி
உன்தன் சிரிப்பாலே.

விரிந்த நுதல்தனையே—பராசக்தி
விண்ணவர் போற்றும்படி
பரிந்துன்னைப் பொட்டிட்டு—பாரில்
பாவையர் போற்றும்படி.

கண்ணின் கருணைதனை—பராசக்தி
கண்டு விட்டால் எமக்கு
வண்மை மிகுந்து விடும்—பின்
வாழ்க்கை யுயர்ந்து விடும்.

விண்ண முதா யிருக்கும்—உன்னை
மேவி முத்தமிட்டால்
எண்ணில் உவகை கொளும்—உன்தன்
எழில்தனை நோக்கிவிடில்.

செல்வம் சிறந்ததில்லை—உனைவிடச்
சீரிது ஒன்றுமில்லை ;
பல்லோர் புகழ் பெற்ற—உனைவிடப்
பாவை பிறிது முண்டோ ?

கீதப் பகுதி

தமிழ்க் கீர்த்தனைகள்.

(திருச்சி அகில இந்திய ரேடியோ ஸ்ரீ T. சங்கரன்B.A., B.L., உதவியன.)

இரண்டாவது கீர்த்தனத்தின் ஸாஹித்யத்தையும் ஸ்வரத்தையும் எனக்கு உதவியவர் காலஞ்சென்ற வித்துவான் நாயனு பிள்ளை அவர்களின் தாயாரும், காஞ்சீபுரம் ஸ்ரீமதி தனகோடி அம்மாளின் தங்கையுமான ஸ்ரீமதி காமாக்ஷி அம்மாள் அவர்கள்; ஸ்ரீமதி தனகோடி அம்மாளின் தாயார், ச்யாமா சாஸ்திரிகளது மாப்பிள்ளையான ஸ்ரீமான் கச்சு சாஸ்திரிகளிடம் கான வித்தையைப் பயின்றவள்.

முதல் கீர்த்தனத்தின் ஸாஹித்யத்தை உதவியவர் வித்துவான் நாயனு பிள்ளை அவர்கள். இதை ஒத்ததொரு தெலுங்கு ஸாஹித்யமும் உண்டு.—T. சங்கரன்.

1. (ஸ்ரீ ச்யாமா சாஸ்திரிகள் பாடியது.)

பல்லவி.

பரஜு : *ராகம்* சாப்பு : *தாளம்*

ஸந்ததமும் என்னை ரக்ஷிப்பாய்

அனுபல்லவி.

உன்தன் பாதார விந்தத்தை வந்திப்பேன்
அநுதினம் சிந்திப்பேன்.

சரணங்கள்.

1. ஸாரஸாக்ஷி என மனவி சாரத்தைத் தீர்க்க
மிகவும் பாரமா? உன் கடைக் கண் பாரம்மா.
2. மேதினியில் உன்னைப்போல் வேறு தெய்வம்
உண்டோ? சொல், பரஞ்சோதியே!
எவருக்கும் அனுதியே.
3, மான மறியா மூடரே தானே துதிக்க மிகவும்
ஏனம்மா உன் பெருமை தானம்மா.
4. நாதரூபிணி வீணுவிநோதினி காமாக்ஷி என்னை
ஆதரி ச்யாம கிருஷ்ண ஸோதரி.

2. ஸ்ரீ காமாக்ஷி

வசந்தா : ராகம் ஆதி : தாளம்

பல்லவி.

; ஸா , கரிஸஸநிஸா , மமககமதா ; ஸ்நிதநி | ஸ்ா ; ;ஸ்நி | தநிஸ்ாரிஸ் நிதமாகா
ஸ்ரீ கா மா . . . . க்ஷி க . டா
கமாக || ரிஸரிநி
க்ஷி . . . . . .

அனுபல்லவி.

; , ஸ்நிதா , மமகமாதா ; ஸ்நி ஸ்ாரிக்ரிஸ்ஸ்ா | ; , ரிஸ்ாஸ்நி | தமதாஸ்நிதம|| கா
ஏ. க வ ஸ் து வா . . . கு . . ; , எங்குமாய் நி.றைந்தா . . யே,

ஸக்ாம்ாக்ரிஸ்நிதமகமதா | ; தநிஸ்ாரிஸ்ஸ்நிதமா | நீ , ததாமாமகரிகமாபம|| கரிஸநி
போகமோக்ஷம் பக்தர்க்கு ; பு . ரிந் திடும் என் . தன் . தாயே . . . .

சிட்டைஸ்வரம்.

; மா , கரீ ; தநீஸாரி நீ ; ; மக | மா , தாமாக ||
மா நிலம்தனில் தேவி நின் மகி மை , யைச்சொல்ல

மாகரிஸநிமகமாநிதநிஸ்ம்ா | க்ரிநிதநிமாநி | தமாஸமாகரி || ஸநி
மாலயனுலும் ஆகுமா? உனக்குஸமா | னமினிதைவமா நி ஜமா? குமாரனே || ரக்ஷி

சரணம்.

; , மா மகரீஸா ஸநிதா நீஸரிஸா | ; , ஸகாமா | தாஸ்நிதமகா
வேதா க ம ச்ாஸ்த்ர ; , நாதஸ்வ ரூ பி.ணி . யே

; , கமதா ; ஸ்நிதமகா கமாகரிஸரிநி | ; , ஸமகமா | தாஸ்நிதமகா
வேகமே வந்தி ப்போ தேன் ; , வறுமையை நீக்கு . வா . யே

ஆதாரம் எனக்கு நீ — வேதபுரீச்வரியே
அம்பா சித்தமிரங்கி — அடிமையைப் பாலிப்பாயே.



மொழிபெயர்ப்புப் பகுதி.

மறுமலர்ச்சியின் மூன்று படிகள்.

(ஸ்ரீ அரவிந்தர் எழுதியது: ஸ்ரீ. P. கோதண்டராமன் மொழிபெயர்த்தது,)

இன்று தவிர்க்கமுடியாததாக விளங்கும் புத்துயிரின் கதி அல்லது போக்கை சரித்திர பூர்வமாகவும் தர்க்கரீதியாகவும் மூன்று படிகளாகப் பகுக்கலாம். இப்படிகளின் மூலமாகவே இடைக்காலம் நிர்வகிக்கப்பட்டும், பழைய சிக்கல்கள் ஒழிந்தும், புத்துருவும் புதுவமைப்பும் ஏற்பட்டும், பழைய கலாசாரம் உருமாறி ஒரு புதுயுகம் பிறந்தும் வருகின்றது. இது பழைய பட்டுப்போன நாகரிகத்துடன் ஒரு புது நாகரிகத்தைச் சேர்த்துக்கொள்வதன்று; இது ஒரு உண்மையான மறுபிறப்பு அல்லது புத்துயிர்ப்பேயாகும். இதற்கு மூல அஸ்திவாரங்கள் ஏற்கெனவே போடப்பட்டிருக்கின்றன. ஆயினும், இறுதியான பலன் இன்னும் கண்ணுக்குப் புலனாகாமல் இருந்துவருகின்றது.

ஐரோப்பியத் தொடர்பை ஏற்றுக்கொண்டு பழைய கலாசாரத்தின் பிரதான அம்சங்கள் பலவற்றை அடியோடு புனர்விமர்சனம் செய்ததும், அதன் மூலதத்துவங்களிற் சிலவற்றை தீவிரமாக மறுத்ததும் முதற்படியாக இருந்தது.

பாரதநாட்டின் ஜீவனானது ஐரோப்பிய ஆதிக்கத்துக்கு அப்படியே இணங்கிவிடாமல், அதை எதிர்த்தும், அது அளித்ததைச் சில சமயம் அடியோடு மறுத்தும், பண்டைதேசீய கலாசாரத்தின் மூலாம்சத்தைப் போலவே அதன் புற அர்சத்தையும் வற்புறுத்தியும் வந்தது. ஆயினும், ஐரோப்பிய கலாசாரம் சீரணிக்கப்பட்டு தன்மயமாகி வருவதை இவ்வெதிர்ப்பு மறைத்து வந்ததேயொழிய வேறொன்றும் செய்யவில்லை. இது இரண்டாவது படியாகும்.

மூன்றாவது படி இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. இது புதுசிருஷ்டியின் ஒரு போக்கேயாகும். இப் போக்கில் இந்திய மேதையின் ஆன்மசக்தி உன்னதமாக விளங்குகிறது. அது தனது உண்மைகளை மீண்டும் அடையப்பெறுவதுடன், நவீன கருத்திலும் அமைப்பிலும் எது உரமானதாயும், உபயோகமுள்ளதாயும், தவிர்க்கமுடியாததாயும் இருக்கின்றதோ, அதையும் ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால், அதையும் மாறுதலடையும்படி செய்து இந்தியமயமாக்கி, தன்னுள்ளேயே சம்பூரணமாக ஐக்கியப்படுத்தி, அதன் அன்னிய இயல்பினை மறையும்படி செய்கின்றது. இவ்வண்ணம்

புதுமையின் செல்வாக்குக்கு உட்படாமலும் அதற்கு உடைமைப்பட்டுவிடாமலும் இருப்பதுடன், அப்புதுமையையே தன்ஆதிக்கத்திற்குள் கொண்டுவந்து உடைமைப்படுத்திக்கொள்ளும்படியான புராதன தேவதையாகிய பராசக்தியின் சுபாவமான தொழிற்பாட்டில், இந் நவீன கருத்தும் அமைப்பும் மற்றுமோர் இசைவு பொருந்திய அம்சமாக விளங்குகின்றன.

பாரதத்தாய் புதுமையில் மெல்லவே புகுவாள்.

இயற்கையன்னையின் விவகாரம் மனிதர் சம்பந்தமாயிருப்பினும் சரி, பொருள் பற்றியிருப்பினும் சரி, அவளது பல போக்குகளில் யாதொன்றும் தற்செயலாகவோ, புறகாரணங்களின் சக்தியினாலோ ஏற்படுவதன்று. மிகப் பெரிய மாறுதல்களின் கதியும் உட்புறமாயுள்ள விஷயங்களினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. காலம் என்னும் வரையறையற்றவளான பாரதத்தாய் தன்னியல்பு கொண்டு விளங்குவதால், இந்த இடைக்காலத்தின் சிக்கலான நிலைமை முன்னாலேயே நிர்ணயிக்கப்பட்டும் தவிர்க்கமுடியாமலும் இருந்தது. மேனாட்டுக் கருத்துக்களையும் அவைகளின் உருவ அமைப்புக்களையும் அப்படியே விரைவாக ஏற்றுக்கொண்டு, தனது புராதனமான மூலாதாரக் கருத்துக்களைப் பின்னர் அன்னிய மாறுதல்களுடன் சாத்தியமானவரையில் இணங்கிப் பொருந்துமாறு விடுவது என்பது அவளால் ஒப்பமுடியாத விஷயமாகும். நவீன ஜப்பானை உண்டுபண்ணிய வேகமான உருமாறுதலைப் போன்றதொரு உருமாறுதலுக்கு, அங்குள்ளதைப்போலவே இங்கும் புறநிலைமை அனுகூலமாயிருப்பினும், அதை அவள் ஏற்றுக்கொள்ளாதிருந்தனள்.

ஏன்? ஜப்பானின் குணவிசேஷமும் சௌந்தரிய உணர்ச்சியுமே அவளது ஜீவன் ஆதலால், அவள் எப்போதுமே அன்னிய வஸ்துக்களை விரைவாக சீரணஞ் செய்து தன்மயமாக்கிவிடும் சக்தியை யுடையவளாக இருந்திருக்கிறாள். நீடித்துள்ள அவளது திடமான குணவிசேஷம் அவளது தனித்தன்மையைப் பாதுகாக்கப் போதுமானதாயும், அவளது கலைவிழி அவளது ஆன்மா அழிவுறாமல் இருக்கச்செய்ய வல்ல சக்தியையுடையதாயும் இருந்துவருகின்றது. ஆனால் பாரதத்தாய்க்கு ஆன்மவாழ்க்கையே பிரதானம். உயிரின் உல்லாசமும் உற்சாகமும் அவளுக்கு அவ்வளவு அதிகமாகக் கிடையாது. ஆகவே, நிலைமைக்குத் தக்கபடி தயாராகத் தன்னைப் பொருத்தியமைத்துக் கொள்ளும் சிருஷ்டியின் குணம் அவளிடமில்லை.

ஆயினும், மிகத் தீவிரமாயும் ஆழமாயும் ஆலோசனைசெய்யும் இயல்பு அவளுக்குண்டு. அவள் தனது வாழ்க்கையின் புற அம்சங்களை மாற்றுவதற்கோ, புதுக்கி யமைப்பதற்கோ விஷயங்களைத் தனது உள்ளத்தின் ஆழத்திற் கொண்டு செல்லவேண்டியிருப்பதால், அவளது போக்கானது சாவதானமாயும், நிச்சயமற்றதாயும், நீண்டகாலம் பிடிப்பதாயும் இருக்கக்கூடும். அவ்வண்ணம் அவைஉள்ளுக்குள்ளே முற்றிலும் சீரணமாகி, தன்மயமாக்கப்பட்டு, புத்துருவின் சக்திகள் நிர்ணயிக்கப்படும்வரையில், தான் செல்லும் புதிய பாதையில் அவள் இதினும் ஸரளமாக முன்னேற முடிவதில்லை.

அவள் தீர்க்கவேண்டிய பிரச்னைகளின் கஷ்டங்களெல்லாம் இயக்கத்தின் சிக்கலிலிருந்தே வருகின்றன. அதன் போக்கில் பல அபிப்பிராயங்கள், நோக்குகள், சாய்வுகள் இவற்றின் குழம்பிய நிலையும் அகப்பட்டுக்கொள்வதால், அவள் சுலபமாகவும் தெளிவாகவும் திடமாகவும் முன்னேறுவதானது தடைபடுகின்றது. ஆகவே, எதிர்காலத்தின் போக்கு என்னவென்பதைப்பற்றி யாதொரு தெளிவான கருத்துமின்றி, குழப்பத்தில் நெருக்குண்டு, நமது பிரேரணை யலைகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஒப்ப, நாம் முன்னேறுவதைக் காண்கிறோம்.

ஆனால் இந்நிலையிலும் ஓர் உறுதியுள்ளது உட்புறமாக நம்மை வழிநடத்திச் செல்லும் சக்தியானது ஒருதடவை தனது மார்க்கத்தைக் கண்டுபிடித்து, தனது உள்ளுறை பொருளை வெளிப்புறத்திலும் ஒளிரும்படி செய்துவிட்டால், அது மேனாட்டு நவீனத்தை ஆசியப் போர்வையால் மூடி உள்ளே நுழைத்துவிடும் ஒரு முயற்சியாக இராமல், மானிட நாகரிகத்தின் எதிர்காலத்துக்கு மிகவும் முக்கியமானதும் மகத்தானதுமான ஒரு புதிய சிருஷ்டியாய் விளங்கும் என்பது திண்ணம்.

ஆதி அறிவாளர்களின் போக்கு.

பாரதநாட்டில் மேனாட்டுக்கல்வியின் முதற் பயனாக உதித்தவரும், புதிதாகச் சிருட்டிக்கும் ஆற்றலும் மேதையும் வாய்ந்தவரும், சொற்ப தொகையினருமான ஆதி அறிவாளிகளின் கருத்து இதுவாக இல்லை. அவர்கள் ஜப்பானிய நாட்டில் பின்னர் ஆச்சரியமான வேகத்துடன் நடைபெற்ற உருமாறுதலைப் போன்ற ஒரு பெரிய மாறுதலையே ஆத்திரத்துடன் எதிர்பார்த்திருந்தனர். மனத்திலும், உள் நோக்கிலும், வாழ்க்கையிலும் முற்றிலும் அடியோடு புத்துருப் பெற்ற ஒரு புது பாரதத்தை அவர்கள் வரவேற்றவண்ணமாய் இருந்தனர். அவர்கள் உட்கருத்தில் தீவிர தேசபக்தர்களாயிருந்தும், மனப்பாங்கில் நாட்டின் தனிப் பண்பை இழந்தவர்களாய் இருந்தனர். நமது புராதன கலாசாரம் ஒரு அறைகுறையான நாகரிகம் என்கிற மேனாட்டுநோக்கத்தை அவர்கள் வாய்விட்டு உரைக்காவிடினும், கிரியாம்சையில் அவர்கள் அதை அப்படியே ஒப்புக்கொண்டனர். அவர்களது பிரதான லட்சியங்கள், மேனாட்டு இரவல்களாகவோ, குறைந்த பட்சம் தாங்கள் பெற்ற கல்வியின் பயனாக மேனாட்டு நோக்கினின்றும் ரகத்தினின்றும் உயிர் பெற்றெழுந்தவையாகவோ இருந்தன. அவர்கள் பாரதநாட்டின் இடைக்கால நாகரிக வாழ்க்கையை எதிர்த்து, அதனின்று விலகி, அது சிருட்டித்ததை யெல்லாம் புறக்கணிப்பதற்கு உள்ளங்கொண்டனர். அதனின்றும் எதையே னும் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதைக் கவித்தையின் சூசனைக் குறியைப்போல மதித்து அதற்கொரு நவீன பொருளையும் மேற்பூச்சையும் கொடுத்தனர்.

ஆனால், இதற்கு நேர்மாறாக, புராதன இந்திய நாகரிகத்தின் சில போக்குகளிலாயினும் பெருமை கொண்டு, அதனின்று தங்களது புதுநோக்குக்கு உட்படக்கூடிய சில விஷயங்களைக் கையாள இசைந்தனர். ஆயினும் அவ்விஷயங்களின் ஆதி உட்கருத்தையும் நோக்கையும் கிஞ்சித்தும் கிரகிக்கமுடியாமல் தங்களது மேனாட்டுமயமான புத்திக்கு ஒத்துவாராதவைகளை அவைகளினின்றும் விலக்கிவிட முயன்றனர்.

மேலும், அவர்கள் புற ஆடம்பரம் அற்றதான சாமான்னிய பகுத்தறிவுகொண்டு ஆக்கப் பெற்ற மதத்தைக் கண்டுபிடிக்க முயன்றனர். ஆங்கில இலக்கிய மாதிரிகளின் முழு அமைப்புக்களையும், கருத்துக்களையும், ஜீவனையும் இறக்குமதி செய்து, அவைகளை அப்படியே கையாண்ட ஒரு புது இலக்கியத்தைச் சிருட்டித்தனர். இதர கலைகளின் பயன்களை அவர்கள் அடியோடு அசட்டை செய்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வழங்கிய மத்திய வகுப்பினரின் ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட போலிஜனநாயகத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதும், நகல் செய்வதுமே தங்களது அரசியல் கோட்பாடும் நம்பிக்கையும் என்று அவர்கள் கொண்டிருந்தனர். ஐரோப்பிய சமூக அமைப்பின் கருத்துக்களையும் பிரதான குணவிசேஷங்களையும் இந்திய சமூக அமைப்பில் நுழைத்து ஒரு புரட்சியை யுண்டாக்க அவர்கள் விரும்பினர்.

அவர்கள் முறை தவறானது.

இவ்வித போராவலுடனும் திடநிச்சயத்துடனும் அவர்கள் கிரகித்த விஷயங்களுக்கு எதிர்காலத்தில் எத்தகைய மதிப்பு இருக்கக் கூடுமாயினும், அவர்களது முறை தவறாக இருந்ததென்றே நாம் இன்று காண்கிறோம். பாரதநாடு ஆங்கிலமயமான ஒரு நாடாக ஆவது இனி சாத்தியமில்லை; அது விரும்பத் தக்கதும் அல்ல. அவர்கள் சென்ற வழியில் நாமும் கடைசிவரையில் தொடர்ந்து சென்றிருந்தோமானால், கஷ்டப்பட்டுக்கொண்டு ஐரோப்பிய நாகரீகத்தை நகல் செய்வோராகவும், ஐரோப்பிய நாகரிக வளர்ச்சியை விவேகமற்றவராய் பின்பற்றிக் கொண்டும் அம் முயற்சியில் என்றும் தடுமாறிக்கொண்டும், எப்போதும் அந்நாகரிகத்திற்கு ஐம்பது வருஷங்கள் பின்தங்குபவராகவும் இருந்திருப்போம். இச் சிந்தனையியக்கம் அதிககாலம் நீடித்திருக்கவில்லை; அவ்விதம் இருக்கவும் முடியவில்லை. அதன் ஒரு சிறு அம்சம் மட்டும் இன்னும் இருக்கிறதாயினும், அது மீண்டும் திடமாக உயிர்பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் அதன் முழுசக்தியும் போய்விட்டது.

அதன் விளைவுகள்.

ஆயினும், முதற் பருவத்தில் இவ்விதமாகப் பதம் பார்க்காமல் பச்சையாக அப்படியே ஏற்றுக்கொண்ட மேனாட்டு ஆதிக்கமும், சக்தி வாய்ந்த மறுமலர்ச்சிக்கு அத்தியாவசியமானவையும் பயன்படத்தக்கவையுமான சில விளைவுகளை விட்டுச்சென்றது. அவ்விளைவுகளில் மூன்றை முதற்தரமானவை யெனக் குறிப்பிட வேண்டும்.

முதலாவதாக, அந்த ஆதிக்கமானது நமது புத்தி விழிப்புற்று சுவேச்சையாகத் தொழில் புரியும்படி செய்தது. இவ் விழிப்பு முதலில் குறுகிய எல்லைக்குட்பட்டதாயும் கருத்துக்களின் ஒரு பகுதியை மட்டும் தழுவியதாயும் இருக்கிறது. இது இப்போது மக்களுக்கும் நாட்டுக்கும் உரிய எல்லா விஷயங்களிலும் பாவி, தான் பற்றும் ஒவ்வொரு பொருளிலும் மேன்மேலும் அதிகரிக்கும் ஆவலுடனும், மேன்மேலும் வளரும் கற்பனைசக்தியுடனும் காரியப்படுகிறது. எல்லாவிதமான அறிவையும் பெற வேண்டுமென்னும் தணிக்கமுடியாத பழைய தாகத்தை அது இந்திய புத்திக்கு மீண்டும் அளித்து வருகின்றது. புத்தியின் தொழிலுக்கு ஒரு விரிவையும் ஆழத்தையும் வளைந்து கொடுக்கும் ஆற்றலையும் கூடிய சீக்கிரத்திலேயே அது அளித்தாக வேண்டும். பழைய காலத்தில் வெகு சிலரால் ஒரு குறித்த எல்லைக்குள் பிரயோகிக்கப் பட்டு வந்ததும், ஆனால் இப்போது மானிட புத்திக்கு இன்றியமையாத முஸ்திப்பாக ஆய்விட்டதுமான விமர்சன சக்திக்கும், பூரணமாக உற்றறிந்து தங்குதடையின்றி நிதானித்து நிர்ணயிக்க வேண்டும் என்னும் பேரவாவுக்கும், அது முழு சந்தர்ப்பம் அளித்திருக்கிறது.

அப்படியே நகல் செய்துவந்த முதற் பருவத்தில் இவ்விஷயங்கள் வெகுவாகப் பின் தொடரப் படவில்லையாயினும், அது விதைத்த விதை இன்று செழிப்புற்று வளர்ந்து பலன் தர ஆரம்பித்திருப்பதைக் காண்கிறோம்.

இரண்டாவதாக, அது பழைய கலாசாரத்தில் புதுக்கருத்துக்களைப் புகுத்தி ஒரு கொந்தளிப்பை யுண்டாக்கியது. மேலும், நமது வழக்கமான நோக்கில் யாதொரு பலமான தாக்குதலும் ஏற்படாமல் நிலையான பழைய சம்பிரதாயங்களின் வழியே சென்று கொண்டே இருந்தால் எவ்விதமிருக்குமோ அவ்விதமாக விட்டுவிடாமல், இப் புதுக் கருத்துக்களை நம் பார்வை முன் நிறுத்தி இவைகளை நாம் சமாளிக்கும்படி நிர்ப்பந்தப் படுத்தியது.

கடைசியாக அது நமது பண்டைச் செல்வங்களுள் அடங்கியுள்ள யாவற்றையும் ஒரு புது விழியுடன் நோக்கும்படி செய்தது. விவேகமற்ற பழைய மாமூல் அனுஷ்டானங்களில் நீண்ட காலமாக மறைந்துபோன பழைய உட்பொருளையும் ஜீவனையும் மீண்டும் ஒரு சிறிதளவேனும் அடையப் பெறுவதற்கும், இவைகளிலிருந்து ஒரு புத்தொளியை மேலே கொணர்ந்து, பழைய உண்மைகளுக்கு ஒரு புதுத் தோற்றத்தையும் வளர்ச்சிக்கும் புதிய சிருஷ்டிக்கும் உரியனவாயும் சாத்தியமானவையாயுமுள்ள புதிய சக்திகளையும் அளிப்பதற்கும் அது நமக்கு உதவியளித்தது.

இம் முதற்பருவத்தில் நமது பழைய கலாசாரத்தை நாம் தவறாகப் புரிந்து கொண்டதினால் பாதகமில்லை. வைதீக முறையில் சிந்திப்போரும் கூட ஒப்புக்கொள்ளுமாறு அதை மீண்டும் ஆராய்ச்சி செய்யும்படி கட்டாயப்படுத்தியதுதான் மிகவும் முக்கியமான விஷயமாகும்.

தேசீய நோக்கு வலுவடைதல்.

இரண்டாம் பருவத்தில், இந்தியபுத்தியானது இப்புதிய அம்சங்கள்விஷயமாக நடந்து கொண்ட விதமும், சீர்குலைந்த தேசீய சமநிறையை மீண்டும் அடைய அது செய்த முயற்சியும், இச் சக்திகளையும் போக்குகளையும் சரியான பலன்தரத்தக்க மார்க்கங்களில் செலுத்துவதற்கு நமக்கு உதவியளித்திருக்கின்றன. எல்லாவற்றையும் ஆங்கிலமயமாக்கும் பிரேரணைக்கு எதிராக தேசீய நோக்கானது கிளம்பி, வலுத்து, அதைப் பலமாக வியாபிக்க ஆரம்பித்தது. இன்று, தற்கால அறிவாளிகளில் வெகு சொற்பமாயுள்ளவரும் மேன்மேலும் சுருங்கி வருபவருமான சிறு தொகையினரே மேனாட்டு மயமான தங்களது நோக்கை விடாது பற்றி நிற்கின்றனர். ஆனால்,

இவர்களுங்கூட, ஒருகாலத்தில் சாதாரணமாக நிலைத்திருந்த பழைய பொருள்களை அடியோடு இகழும் மனபான்மையைக் கைவிட்டனர். பலபேர்கள் தங்களது நவீனப்போக்குடன் பழைய கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மேன்மேலும் சேர்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்தியவிஷயங்களின் கருத்தையும் குணாதிசயங்களையும் பற்றிய அவர்களது உள்ளாராய்வு இப்போது முன்னிருந்ததைவிட தெளிவாகவே இருக்கிறது. அவைகளின் புற அமைப்புக்குள்ளிருக்கும் உட்பொருளை தாராளமாக ஒப்புக்கொண்டு அவைகளுக்கு ஒரு புது வியாக்கியானம் செய்யவும் முயலுகின்றனர். மூலக்கருத்து முதலில் நவீன ரகமாயும் எங்கும் மேனாட்டு ஆவேசங் கொண்டதாயும் இருந்து வந்ததாயினும், அது பழைய கருத்துக்களையும் தன்னுள் சேர்த்து தன் மூலாம்சத்தில் மாறுதலடைய வாரம்பித்தது. கடைசியாக, இவ்விதம் வியாபித்துவந்த அம்சமே பெருகி, ஆதியில் இருந்த கருத்துக்களையும் நோக்கையும் தன் ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவந்துவிடவே, இப்பொழுது சிந்தனை, ஜீவன், போக்கு, ரூபம், எல்லாமே சகஜமாகவே இந்தியமயமாயிருக்கின்றன. நமது சமீப கால இலக்கியத்தில் புதிதாக சிருஷ்டிக்கும் மேதையுடன் சிறப்புற்றோங்கும் பங்கிம் சந்திர சாட்டர்ஜி, டாகூர், இவர்களின் நூல்கள் இவ்விடைக்காலத்தின் படிகளைத் தெளிவுறக் காட்டுகின்றன.

பழமையும் புதுமையும் கலந்த புத்துருவு.

இந்த இயக்கத்துடன், இதற்கு நேர்விரோதமானதும், மிகவும் விசேஷத்தன்மையும் சக்தியும் வாய்ந்ததுமான ஒரு இயக்கமும் நடைபெற்றுவந்தது. இது முதலில் இந்நாட்டைச் சார்ந்தது என்னும் காரணத்தினால் பாரதநாட்டில் அதுசமயம் இருந்த யாவற்றையும் பூராவாக ஒப்புக்கொண்டு அதுவே சரியெனச் சாதிக்கும் ஒரு எதிர் இயக்கமாக ஆரம்பித்தது. அந்த பிரேரணையின் அலைகள் இன்னும் காணப்படுகின்றன! அதன் சக்தி வாய்ந்த பிரேரணைகளிற் பல இன்னும் நம்மிடையே வேலைசெய்து வருகின்றன. அதன் வேலை இன்னும் முற்றுப்பெறவில்லை. ஆனால், உண்மையாகப் பார்க்கப் போனால், புதிய சேர்க்கையும் அதன் சீரணமும் மிகவும் சூக்குமமாக நடைபெற ஆரம்பித்திருப்பதையே இந்த எதிர் இயக்கமும் குறிக்கிறது. ஏனெனில், இது பண்டை விஷயங்களைத் தாங்கி வருகையில், பழைய புத்திப் போக்குடையவர்களுக்கும் புதிய ஆராய்ச்சிப் போக்குடையவர்களுக்கும் திருப்தியளிக்கும் முறையிலே தனது ஆதரவு அமைந்திருக்கும்படி செய்ய நேரிட்டிருக்கிறது. இது கலப்பற்ற புராதன வழிக்கு அப்படியே திரும்பிச்செல்லும் இயக்கமல்ல. அறிந்தோ, அறியாமலோ, இது ஒரு புனர் விசாரணையைத் துரிதப்படுத்துகிறது. பின்னோக்கிச் செல்லும் இவ் வியக்கமானது முதிர்ச்சியடையும்போது எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு பூரணப்படுத்தும் ஒரு மறுவிளக்கத்தைத் தனது கொள்கையாக உடையதாய்விடுகிறது. இது பண்டைக்கலையின் ஜீவஸத்தை அடைய நாடுகிறது. அது பழைய உருவ அமைப்புகளுக்கு மரியாதை செய்தபோதிலும், அவைகளுக்குப் புத்துயிரளிக்கவும், புத்துருவுத் தரவும், உயிரற்றும் பிரயோசனமற்றும் உள்ளதை விலக்கிவிடவும், பழைய ஆன்மவாழ்க்கையுடன் சேர்க்கப்பட்டு சீரணம் செய்யக்கூடியதும் அதன் வளர்ச்சியை விரிவுபடுத்தக்கூடியதுமான எப்புதிய கருத்தையும் ஒப்புக்கொள்ளவும், அது தயங்குவதில்லை. பழமையையும் புதுமையையும் இவ்விதம் தாராளமாகச் சமாளிப்பதையும் புதிய அமைப்பில் பழமையைப் பாதுகாப்பதையும் போற்றலுடன் விவரித்துக் காட்டுவதில் தமது ஜீவியகாலத்திலேயே தலைசிறந்து விளங்கியவர் விவேகானந்தரே யாவர்.

இது கலப்படமல்ல—சொரூபத்தின் பூரணமே யாகும்.

இது தன்னைப் பொறுத்த மட்டில் புது சிருஷ்டியின் ஒரு கொள்கையை நோக்கிச் செல்லுகிறதாயினும், இதுவுங்கூட ஒரு கடைசியான குறியாக இருக்கமுடியாது. இல்லையேல், சிந்தனை, போக்கு என்னும் இவ்விரு சக்திகளும், பாதி ஐரோப்பிய ரீதியிலும் பாதி இந்திய ரீதியிலும், நாம் விசித்திரமாக உடுத்திக் கொள்வதைப்போல, மனநிலையில் ஒரு பொருத்த மற்ற சேர்க்கையாக இருக்கும்.

பாரதநாடு தனது ஆழ்ந்த ஜீவனுக்கு இயற்கையாயுள்ள சக்தியை மீண்டும் பூரணமாகப் பெற்று, தனது தற்கால எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான சக்திகள், குறிகள் எல்லாம் அந்த ஜீவனின் தொழிற்பாட்டினுள் ஒன்று சேர்ந்து ஒன்றோடொன்று இணங்குமாறு செய்யவேண்டும். இத்தகைய உயிருள்ள புது சிருஷ்டிக்கு புது இந்திய அருங்கலையை ஒரு சிறந்த உதாரணமாக நாம் காட்டக்கூடும். நமது தேசிய காரியங்களின் ஒவ்வொரு பகுதியிலும் புதிய சிருஷ்டி இவ்விதம் வேலை செய்ய ஆரம்பித்திருப்பதானது, மறுமலர்ச்சியில் நமது சொரூபத்தைப் பூரணமாகக் கண்டு அடைந்துவருவதற்கு ஓர் அறிகுறி யாகும்.

கதைக் கடல்.

மதனமஞ்ஜூகா என்ற ஆறாவது லம்பகம்.

இரண்டாம் அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

(187ம் பக்கத் தொடர்ச்சி.)

உபகதை 4.

சித்ரகூட மலையில் ஸுஷேணன் என்று யுவாவான அரசன் இருந்தான். சிவனைக் கண்டு ஆகாமையால், ப்ரம்மதேவன் சிருஷ்டித்த இரண்டாவது காமதேவனைப் போலிருந்தான் அவ்வரசன். தேவர்களுக்கு நந்தன வனத்தில் வஸிப்பதிலேயே ருசி இல்லாமல் செய்துவிடும் திவ்வியமான தோட்டம் ஒன்றை ஸுஷேணன் அப்பெரிய மலையடியில் ஏற்படுத்தினான். அதன் நடுவே அலர்ந்த தாமரைகளுடைய வாவியொன்றை ஏற்படுத்தினான்; அலர்மங்கையின் தாமரைகளுக்கு புது உற்பத்தி ஸ்தானம் போலிருந்தது அவ் வாவி. தனக்கொத்த மனைவியரில்லாததால், பெண்துணையின்றி அவ்வரசன் ரத்தினமயமான படிக்கட்டுகளோடு கூடிய அவ் வாவிக்கரையிலேயே எப்பொழுதும் நின்று கொண்டிருப்பான். ஒரு ஸமயம், தற்செயலாய், அவ்வழியே, இந்திரனுடைய மாளிகையிலிருந்து தேவலோகத்து அழகியான ரம்பை ஆகாசத்தில் போய்க் கொண்டிருந்தாள். பூத்திருக்கும் தோட்டத்தின் நடுவே உண்மையில் வஸந்தருதுத் தேவனே விளையாடிக் கொண்டிருப்பதுபோல் அந்தத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் ஸுஷேணனை ரம்பை கண்டாள். "இந்த வாவியிலிருக்கும் தாமரைகளில் ஆசைக் கொண்டு தேவலோகத்திலிருந்து இங்கு வந்துவிட்ட லக்ஷ்மீதேவியைப் பின் தொடர்ந்து வந்த சந்திரன்தானோ இவன்? இல்லை, இல்லை! இவனுடைய களை (கலை) குறைந்து போகிறதே இல்லை. பூக்களை விரும்பி இந்த பூங்காவிற்கு வந்த மன்மதனோ? அப்படியானால் இவனை விட்டு இணை பிரியாத ரதி எங்கே போயிருக்கிறாள்?" இப்படியாக தனக்கு அவனிடம் இருந்த ஏக்கத்தால் அதனை எண்ணிக் கொண்டு ஆகாய மத்தியிலிருந்து இறங்கி, மானிட மங்கையுருவுடன் ரம்பை ராஜனிடம் வந்தாள். திடீரென வந்த அவளைப் பார்த்து வியந்துபோன ஸுஷேணன் நினைத்தான்: "ஆஹா! எண்ணமுடியாத ரூபத்தையுடைய இவள் யாராயிருக்கலாம்?

இவள் மானிடஸ்த்ரீயல்லள்; ஏனெனில் இவளுடைய அடிகள் தரையைத் தொடவில்லை; கண்களும் இமைகொட்டவில்லை; ஆகையால் இவள் யாரோ ஒரு தேவஸ்திரீதான். யாரென்று கேட்டால், ஒருவேளை ஓடிப்போனாலும் போய் விடுவாள்; ஏனெனில் ஏதோ காரணம்பற்றி இம்மானிட வுலகிற்கு வரும் இந்த தேவஸ்த்ரீகள் அனேகமாய் தம் ரகஸ்யங்கள் வெளியாவதை பொறுப்பதில்லை.'' இப்படி யோஜித்தவனாய் அவ்வரசன் கொஞ்சம் கொஞ்சமாய் அவளுடன் பேசி அம்முறையிலேயே அவளுடைய ஆலிங்கனத்தையும் பெற்றான். அவ் வுத்தியானத்தில் அவ் வப்ஸரஸ்திரீயுடன் வெகுகாலம் இன்புற்றிருந்தான்; அவளும் தேவலோகத்தை மறந்தாள்; காதலல்லவோ மனதை இன்புறுத்துவது, பிறந்த ஊரல்லவே? ஆகாயம் மேருவின் தங்கச்சிகரங்களால் நிரம்பி நிற்பது போல், அவ்வரசனின் இருப்பிடமும் ரம்பையின் தோழிகளான யக்ஷிணிகள் மழைபோல் கொட்டிய பொன்குவியல்களால் நிரம்பிற்று.

நாளடைவில் அவ்வுத்தம அப்ஸரஸ் கர்ப்பிணியாகி ஸுஷேண மஹாராஜனுக்கு ஒப்பற்ற பெண்ணொருத்தியை பெற்றுக்கொடுத்தாள். பிரஸவம் ஆனதும், அவ் வப்ஸரஸ் அரசனிடம் சொன்னாள்: ''அரசே! எனக்கேற்பட்ட சாபம் இப்படி. அது இப்பொழுது முடிவுக்கு வந்துவிட்டது. நான் ரம்பையென்ற தேவஸ்த்ரீ; உம்மைப் பார்த்ததும் காதல் கொண்டேன். எங்களுக்கு கர்ப்பம் உண்டாகிக் குழந்தை பிறந்ததும், காதலனை விட்டுவிட்டு, அந்த க்ஷணமே போய்விடுவோம். இது எங்களுடைய வழக்கு; ஆகையால் நீ இக்கன்னிகையைக் காப்பாற்றிவா; இவளுக்கு மணம் ஆனதும், நம் இருவருக்கும் மறுபடியும் தேவலோகத்தில் சேர்க்கை ஏற்படும்.'' பராதீனையான ரம்பை இப்படிச் சொல்லிவிட்டு மறைந்து போனதும், அத் துயரத்தால் அரசன் உயிரை விட்டுவிடுவதென்று இருந்தான். ''சகுந்தலையைப் பெற்றுவிட்டு மேனகைபோனதும், பற்றொன்றுமில்லாத விச்வாமித்ரர்கூட உயிரை விட்டுவிட்டாரா என்ன? ''என்றெல்லாம் மந்திரிகள் சொல்ல, விஷயம்தெரிந்த அந்த ஸுஷேண மஹாராஜன் மனம் தேறி, தனக்கு மறுபடியும் ரம்பையுடன் கூடல் ஏற்படுவதற்குக் காரணமாகப் போகிற அக்கன்னிகையை எடுத்துக்கொண்டான். அங்கம் ஒன்றொன்றிலும் அழகியாயிருந்த அந்தப் பெண்ணிடம், அவளுடைய நினைவாகவே எப்பொழுதும் இருந்தான்; கண்ணின் அழகு அவளுக்கு மிக்க இருந்ததால், அவளுக்கு ஸுலோசனை என்று பெயரிட்டான்.

நாளடைவில் யௌவனத்தை அடைந்த அந்த ஸுலோசனையை, அவள் தோட்டத்திலிருக்கும்போது, அவ்வழியே போய்க்கொண்டிருக்கும் யுவன், காச்யப கோத்திரனை முனிவன், வத்ஸன் என்ற பெயருடையவன் தற்செயலாய்க் கண்டான். தவங்களே உருவெடுத்தாற்போலிருக்கும் அந்த இளைஞன் அந்த அரசகுமாரியைக் கண்டு காதலென்ற உணர்ச்சியை அடைந்தவனானான். அவன் யோஜித்தான்: ''ஆகா! இக்கன்னிகையின் ரூபம் ஏதோ மிகவும் அத்புதமாய் இருக்கிறது. இவளை நான் மனைவியாய் அடையாவிட்டால், தவத்திற்கு வேறு என்ன பயன் இருக்கிறது?'' இப்படி யோஜனை செய்துகொண்டு, புகையற்ற நெருப்புப்போல் ஜ்வலிக்கும் ஒளியோடு நிற்கும் அந்த முனிவனை ஸுலோசனையும் பார்த்தாள். அக்ஷமாலையுடனும் கமண்டலுவுடனும் இருக்கும் அவனை நோக்கி, அவனிடம் காதல் கொண்ட ஸுலோசனை யோஜனை செய்தாள்: ''சாந்தமும் அழகும் கூடிய இவன் யாரோ?'' அவனை வரிப்பவள்போல் அவனிடம் நெருங்கி, தன் கண்களாகிற கழுநீர்மாலையை அவனுக்கிட்டு, அம்முனிவனை வணங்கினாள். ''கணவனைப் பெறுவாய்'' என்று, தேவர்களாலும் அஸுரர்களாலும் தாண்ட முடியாதவனான மன்மதனின் ஆக்ஞைக்கு உட்பட்டவனாய், அவளுக்குஆசீர்வாதம் கூறினான். மிகவும் அருமையாயிருந்த அவனுடைய அழகினால் தன் மானமெல்லாம் அபஹரிக்கப் பட்டவளாய், ஸுலோசனை குனிந்த முகத்துடன் அம்முனியிடம் சொன்னாள்: ''தேவரீர்! என்னை உமக்குக் கொடுக்கக்கூடியவரான என் தந்தை அரசனிடம் கேளும்'' என்று. அதன்மேல் அவளுடைய குலத்தையும் பரிவாரத்தையும் அவளிடம் கேட்டுக் கொண்டு, அம் முனிகுமாரன் அவளுடைய தந்தை ஸுஷேண மஹாராஜனிடம் அவளைத் தனக்கு மனைவியாய்க் கொடுக்கும்படி கேட்டான். தவத்தாலும்

அழகாலும் உயர்வு பெற்றிருந்த அந்த முனி குமாரனை அரசன் கண்டு, உபசரித்து, அவனிடம் சொன்னான்: "முனிவ, ரம்பையென்ற அப்ஸரஸிடம் எனக்கு பிறந்தவள் இக்கன்னி; இவளுக்கு மணம் முடிந்ததும், அந்த ரம்பையோடு எனக்கு தேவலோகத்தில் சேர்க்கை ஏற்படும். தேவலோகத்திற்குப் போகும் போது ரம்பையே அப்படிச் சொல்லிவிட்டுப் போனாள். பெரியோரே! இவ்விஷயம் எப்படி என்று நீரே விளக்க வேண்டும்." அதைக் கேட்ட முனிகுமாரன் சற்று தியானஞ் செய்தான்: "முன் மேனகையின் பெண்ணான ப்ரமத்வரை பாம்பினால் கடிக்கப்பட்டபோது ருரு மஹரிஷி தன் ஆயுளில் பாதியை அவளுக்கு அளித்து, அவளைத் தன் மனைவியாகவும் செய்துகொள்ளவில்லையா? சண்டாளனாய்ப் போன திரிசங்குவையும் விச்வாமித்ரர் ஸ்வர்க்கத்திற்கு அனுப்பவில்லையா? ஆகையால் இக் காரியத்தை நானும் என் தவத்தைச் செலவு செய்து ஏன் செய்யக்கூடாது? இது ஒரு பெரிதல்லவே?" இப்படி யோஜித்து, அம் முனி குமாரன் சொன்னான்: "தேவதைகளே! என் தவத்தின் ஒரு பங்கைக் கொண்டு, இவ் வரசன் ரம்பையுடன் கூடி இன்பத்தைப் பெற இவ்வுடலுடனேயே தேவலோகத்தை யடையட்டும்." ராஜ ஸதஸ் கேட்டுக்கொண்டிருக்க முனிகுமாரன் இப்படி மொழிந்ததும், "அப்படியே ஆகட்டும்" என்று தெளிவாய் தேவ வாக்கு ஏற்பட்டது. அதன்மேல் கச்யப குலத்தோனான அந்த வத்ஸ முனிவனுக்கு தன் மகள் ஸுலோசனையைக் கொடுத்துவிட்டு ஸுஷேண மஹாராஜன் தேவலோகத்தை அடைந்தான். அங்கு தேவத்தன்மையை அடைந்து, இந்திரனால் கட்டளையிடப்பட்டவளும் திவ்விய மஹிமை வாய்ந்தவளுமான ரம்பையோடுகூட மேலும் சுகித்திருந்தான்.

"அரசே, இப்படியாக ஸுஷேண மஹாராஜன் தன் பெண்மூலம் கடைத்தேறினான். உம்மைப் போன்றவர்களின் அகங்களில் இந்த ஸுலோசனை போன்ற கன்னிகைகள் அவதரிப்பார்கள் அல்லவா? ஆகையால் இந்தப் பெண்ணும் யாரோ ஒரு தேவஸ்த்ரீயாயிருந்து, சாபத்தால் நழுவி உம் வீட்டில் பிறந்திருக்க வேண்டும். அதனால், அரசே! இப் பெண் பிறப்பினால் நீர் துக்கிக்கக் கூடாது."

வீட்டிற்குப் பெரியோரான அந்தணரிடம் இக்கதையைக்கேட்டு அரசன் களிங்கதத்தன் கவலையை விட்டுவிட்டு, ஸந்தோஷத்தை யடைந்தான். தன் கண்களுக்குக் களிப்பையளித்து சந்திரகலை போல் இருக்கும் தன்னுடைய அப் பெண்குழந்தைக்கு களிங்கஸேனை யென்று பெயரிட்டான். தந்தை வீட்டில், தோழிகளிடையே எப்பொழுதும் இருப்பவளாய் ராஜகுமாரி களிங்கஸேனையும் நாளடைவில் வளர்ந்தாள். விநோத ரஸமயமாயிருந்த இளமைக் கடலின் அலையேபோல் அக்களிங்க ஸேனை மாடங்களிலும், வீடுகளிலும், தோட்டங்களிலும் விளையாடி வந்தாள். ஒரு ஸமயம் மேல்மாடியில் விளையாடிக் கொண்டிருக்கும் களிங்கஸேனையை வானத்தின்வழியே சென்று கொண்டிருந்த மயாஸுரன் புதல்வி ஸோமப்ரபை யென்றவள் கண்டாள். அழகினால் முனிவரின் மனதையும் மயக்கவல்ல அந்த களிங்கஸேனையைக் கண்டு, அவளிடம் அன்பு கொண்டவளாய், ஸோமப்ரபை வானிலிருந்த வண்ணமே யோஜித்தாள்: "இவள் யார்? சந்திரனின் மூர்த்திதானோ? பகலிலே சந்திரனுக்குக் காந்தியேது? ரதியாயிருந்தால், காமதேவன் எங்கே? இவள் கன்னிகை யென்று தெரிந்து கொண்டேன். தேவஸ்த்ரீ யொருத்தி சாபத்தால் நழுவி இங்கு அரசன் வீட்டில் தோன்றியிருக்கலாம்; பூர்வஜன்மத்தில் எனக்கும் இவளுக்கும் நட்பு இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது; இவளிடம் மிக்க நட்புக் கொண்டு தடுமாறும் என் மனம் இவ்வுண்மையையே சொல்லுகிறது. ஆகையால் மறுபடியும் நானே இவளை வரித்து என்னுடைய தோழியாய் செய்துகொள்வது உசிதமே." இப்படி நினைத்துக்கொண்டு, அந்தச் சிறுமிக்கு பயத்தை யுண்டுபண்ணக் கூடாதென்று, அவளால் பார்க்கமுடியாதபடி வானிலிருந்து இறங்கினாள். அவளுக்கு நம்பிக்கை கொடுக்கும்படியான ஒரு மானிட கன்னியின் உருவெடுத்துக் கொண்டு, மெள்ள களிங்கஸேனையிடம் நெருங்கினாள். "ஏதோ தற்செயலாய் யாரோவொரு ஆச்சரியகரமான ரூபத்தோடு கூடிய அரசகுமாரி தானாய் என்னிடம் வந்திருக்கிறாள்; இவள் எனக்குத் தக்க தோழியே" என்று அவ்வப்ஸரஸைக் கண்டவுடனேயே நினைத்துக் கொண்டவளாய், களிங்கஸேனை

ஆதாவுடன் எழுந்திருந்து ஸோமப்ரபையை ஆலிங்கனஞ் செய்துகொள்ள, அவளும் களிங்கஸேனையை ஆலிங்கனஞ் செய்து கொண்டாள். உட்கார வைத்துக்கொண்டு, களிங்கஸேனை அவளுடைய குலத்தையும் பெயரையும் கேட்டாள்; "இரு, எல்லாவற்றையும் சொல்லுகிறேன்" என்று ஸோமப்ரபை உரைத்தாள். அதன்மேல், அவ்விருவரும் ஒருவர் கைகளை மற்றொருவர் பிடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருக்க, பேச்சு மூலம் அவ்விருவருக்கும் நட்பு ஏற்பட்டது.

பிறகு ஸோமப்ரபை சொன்னாள்: "தோழி! நீ ராஜ கன்னிகை; ராஜ புத்திரர்களோடு ஸ்நேகமாயிருப்பது கஷ்டமாயிற்றே! சிறு குற்றங்களுக்கும் அளவுகடந்து அவர்கள் கோபிப்பர். இவ் விஷயத்தில் ஒரு ராஜ புத்திரனுடையவும் ஒரு வணிக புத்திரனுடையவும் கதையைச்சொல்லுகிறேன், கேள்."

புராணச் சிறுகதைகள்.

(மா. பா.)

இக் கதைகள் வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப் பட்டவை. இவை கி. பி, 12-வது நூற்றாண்டில் வாழ்ந்த காசிவாசியாகிய ஸ்ரீ வித்யா ஸாகர ஸரஸ்வதி யென்பவரால் பல உபகதைகளினின்றும் சேர்த்துத் தொகுக்கப் பெற்று மூலகிரந்த ரூபமாக முதன் முதலில் வெளிவந்தன. வடமொழி மூலம் இன்னும் அச்சேறிய பாடில்லை. மொழிபெயர்ப்பாளர் சமீபத்தில் வாழ்ந்தவர். தமிழ் நூலும் இன்னும் கைப்பிரதியாகவே இருக்கிறது. இவைகுறித்து, மொழிபெயர்ப்பாளரின் முகவுரைக் கூற்றுபின்வருமாறு:—"இக்கதைகள் மூடநம்பிக்கை, மூடமதப்பற்று, அஞ்சிப்பாராட்டல், பிணம் போற்றல், சொல் விரித்தல் முதலிய பாபங்களுக்கு உள்ளானவரும், நகைச்சுவையென்னும் நறுந்தேனை வெறுப்பவரும், இளமையைப் பழிப்பவருமான ரோகியருக்கு, கடுகளவாக மருத்துவனால் உபயோகிக்கப்படும் விஷமென வுட்புகுந்து, கோபம், கடுங்கோபம், வியர்வை, நாக்குழறல் முதலிய சின்னங்களை விளைவித்து, முடிவில் ஓரளவு புன்சிரிப்பு மூட்டும் என்க. இன்னும் இவை, மக்களின் ஆடலெனப் பெரியோர்க்கு ஒரு சார்பு முனிவும் ஒரு சார்பு இளக்கமும் உண்டு செய்வன."

1. ராமரும் ஸீதையும்.

புஷ்பவிமானத்தில் ஏறிக்கொண்டு, காற்றின் அலைகள் மோத, கடற்பாறைகளைப் போல் தம்முடன் கிடந்த மேகங்களையும், கீழ் நோக்கி பூமியின் அதிசயங்களையும் ஸுகமாகக் கண்டு மகிழ்ந்து ஸ்ரீராமரும் ஸீதாதேவியும் சென்றனர். அப்பொழுது ஸீதா ஸ்ரீ ராமரிடம் மிகுந்து மல்கும் அன்புடன் கூறுவாள் :—

"கொடியவனான ராவணன் கசந்துகழியும் சிறையில் என்னை வைத்தபோது, இரவு பகலாக நான் வேண்டிக்கொண்டது ஒன்றுதான். எப்படியேனும் மறுபடியும் நாமிருவரும் மானுட ஜன்மம் எடுக்கவேண்டும். நன்றோ, நீ தோ, நான் உங்கள் பத்தினியாகவிருந்து ஓர் நாளேனும் இடையின்றிக் கூடிவாழ்ந்து, முன்னமே மாணமடைய வேண்டுமென்பதே."

ஸ்ரீ ராமர் புன்முறுவல் புரிந்தருளினர்.

ஸீதா "உங்கள் சிரிப்பின் தாத்பர்யம் என்ன?" என்று கேட்டாள்.

ஸ்ரீராமர் விடை பகருவார்:— "கேளாய், ஜனகன் மகளே, பரம்பொருள் ஒன்றே. அதுவே உபாஸனமூர்த்தியாக ஒவ்வொரு ஸ்தானத்திலும் ஜீவனுல் தியானிக்கப்பட்டதைக் கொடுக்கிறது. கட்குடியனுக்கு மதுவே மூர்த்தியாகத் தன்னிலடங்கிய களி வெறியைத் தருகிறது. கொலையிலும் மறச்செயல்களிலும் ஈடுபட்டவர் அச் செயல்களைப்பற்றி என்றும் சிந்திப்பதால், பிறர்க்குத் துன்பம், தம் வலிமைப்பெருக்கு முதலியன பெற்று, அந்த போகங்களை ஒரு ஜன்மத்திலோ, பல ஜன்மங்களிலோ அடைகின்றனர். சிறையிருந்த காலத்தில் நீ சித்தத்தை அதி தீவிரமாக என்மேல் செலுத்தியபடியால், உண்மையில் நான் துவாரகையில் கிருஷ்ணன் என்ற அரசனாகச் செங்கோல் நடத்திவரும் காலத்தில், நீ பீமராஜனின் புத்திரி ருக்மிணி யென்பவளாக வளர்ந்து, பத்தினியாக வென்னைச் சேர்ந்து, ஒரு நாளும் பிரியாத பல வருஷங்களாகச் சிற்றின்ப போகங்களைப் புஜிப்பாய்."

இதைக்கேட்டதும் ஸீதா பரவச நிலையெய்தினாள். ரோமம் சிலிர்த்து கண்கள் மலர்ந்து பனிசொரிய, ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினாள். தண்புனற் பெருக்கில் தலைநீட்டியவர்போல் அவளுடைய மூச்சு தடுமாறியது. ஒருவாறு சாந்தமடைந்து, இறுதியில், "இது நற்செய்தியே; ஆனால் நீங்கள் புன்சிரிப்புற்றதின் ஹேது வென்ன?" என்றாள்.

ஸ்ரீராமர் "ஒன்றுமில்லை. மனமிளக்கால் அவ்வாறு முறுவல் பூண்டேன். ஆனால் உன்னைப்பற்றி யன்று" என்றார்.

"இதென்ன, இதென்ன?" வென்று ஸீதா பரபரப்புடன் கேட்டாள். ஸ்ரீ ராமர் கூறுவார்:— "விதி அனைவர்க்கும் ஒன்றல்லவா? இந்த ஜன்மத்தில் என்மீது அன்பு பூண்டவர் பலருள்ளனர். அவருள் சூர்ப்பணகை என்ற ராக்ஷஸி என்னை பர்த்தாவாகப் பாவித்து என்மீது அதிதீவிர பக்தி செலுத்தினாள். அதன் வெளிப்பயனாக, என் அருளை அடையாமல் அங்க ஹீனம் முதலிய கொடுந்துன்பங்களை அடைந்தாள். அவள் தியானமும் ஸித்தி பெறவேண்டியது அவசியம். அவள் ராதா என்கிற ஸ்திரீயாகக் கிருஷ்ணவதாரத்தில் என்னை அடையப் போகிறாள். பாபம், இந்த ஜன்மத்தில் அவளுக்கு ஒருக்ஷணமேனும் என்னைச்சார்ந்து இன்பம் நுகரும் பாக்கியம் கிடைக்கவில்லை. மறுபிறப்பின் நிகழ்ச்சிகளை யறிந்து, அவள் பொருட்டாக மனமகிழ்ந்தேன்."

ஸீதையின் ஒளிமுகத்தில் ஓர் சாயலுண்டாயிற்று. அவளுக்கு ஒன்றும் சொல்ல நாவெழவில்லை.

"நீ மவுனம் சாதிப்பதின் தாத்பர்யம் என்ன?" என்று ஸ்ரீராமர் விளையாட்டாகக் கேட்டார்.

சிறிது காலம் பெருமூச்சு விட்டுவிட்டு, பின் ஸீதை கூறுவாள்:— "போகிறது; இவளொருத்திதானே. இன்னும் உங்களை அடையவேண்டுமென்று தியானம் செய்து கொண்டிருக்கிற ஸ்திரீகள் யாராவது உண்டோ?"

ஸ்ரீராமர்:— "ஸ்திரீகள் இல்லை. ஆனால் என்னிடத்தே மனதை வைத்த பக்தர்களாய் இந்த வானர ஸைந்யங்களில் பலர் எல்லா பாவங்களாலும் என்னை சேவித்துப் பூஜிக்க வேண்டும் என்று அந்தரங்கமாகக் கடுந்தவம் செய்கிறார்கள். இவரும்—"

"என்ன சொல்கிறீர்கள்? என்று" ஆத்திரத்துடனும் கோபத்துடனும் ஸீதா வினவினாள்

"இவர்களும் பலபல கோபிகா ஸ்திரீகளாக ஜனித்துக் கிருஷ்ணவதாரத்தில் என்னை அடைவார்கள்" என்று ராமர் முடித்தார்.

"அவதாரமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்று ஸீதா கண்டிப்பாகச் சொன்னாள்.

"அதெப்படி? துஷ்ட நிக்ரஹ ஸாது பரிபாலனம் நடந்து தீர வேண்டியதாயிற்றே" என்று ராமர் சிரித்தார்.

2. லக்ஷ்மியும் நாரதரும்.

ஒருநாள் வைகுண்டத்தில் புதிதான வோர் வீணாகானம் கேட்டது. அப்பொழுது தான் நாரதர் அதிதிசாலையில் பட்டுக்களால் மூடப் பெற்று அன்ன ரூபமாயமைந்த ஹேம வாகனத்தில் சயனித்துக்கொண்டு, பரிமள தாம்பூலம் மென்று, வாயில் காப்போரிடம் வம்பளந்து கொண்டிருந்தார். விஷயம் அபாரமான ஹாஸ்யம். விசுவாமித்ர மஹரிஷி சில வேளைகளில் தாம் ராஜரிஷி என்ற செருக்கை மறக்க இயலாதவராய், கிருஹஸ்தரைப் போலவே ஆடையுடுப்பது வழக்கம்; அதிலும் வெண்பட்டென்றால் மிகப்பிரியம். அவர் இந்தக் கோலத்தில் ஓர் அரசனிடம் யாகவிஷயமாய் பேச்சுக் கொடுக்கவந்த போது, அவன் இவரை முன்பின் அறியாமல் ஏதோ பிராமண கிருஹஸ்த ரென்றே யெண்ணி, ஜடைதாடி முதலியவற்றை கர்ப்பதீக்ஷை என்று நிச்சயித்து, பார்யாகுடும்ப விஷயமாய் யோக க்ஷேமங்களை விசாரித்தானாம். இது மேனகா விஜயத்திற்குச் சில காலத்திற்குப் பின்பு நடந்தது. கோபமும் குற்றம் சாட்டும் நெஞ்சும் ஒருங்கே விசுவாமித்திரரைச் சீர்குலைத்து விட்டன. அந்த துர்ப்பாக்கிய அரசனுக்கு எந்த க்ஷவரக் கத்தியாலும் வெல்ல முடியாத தாடி ஜடைச் செழிப்பை ஆயுள் பர்யந்தம் விதித்துச் சபித்துவிட்டார். அவனை இருபது மயிர் வினைஞர் தினம் சூழ்ந்து தொண்டு புரிந்தும், அவன் காடியையே யொத்து, வெட்கத்தினால் வெளிவர முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இதற்குப் பரிஹாரம் தேடுவதும் சிரிப்பதுமாக நாரதரும் வாயில் காப்போனும் உல்லாசமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார்கள்.

திடீரெனப் பேச்சு நிற்கும்பொருட்டு நாரதர், வெற்றிலைச் சுருள்கொண்ட தம் கையை யுயர்த்தி, "யார் வீணை வாசிக்கிறது?" என்று கேட்டார்.

வாயில் காப்போன் ஆச்சர்யக் குறியுடன்—"தங்களுக்குத் தெரியாதா? அம்மா ஸ்ரீ தேவிதான் வாசிக்கிறார்" என்றான்.

நாரதர் :—"இது எத்தனை நாளாக?"

வா. கா:—"சிறிது காலத்திற்கு முன் மஹா சரஸ்வதிதேவி யவர்கள் இங்கு வந்திருந்தார்கள். அப்பொழுது என்ன பாருங்கள், பகலெல்லாம் திவ்விய ஸங்கீதம், மாலை யெல்லாம் ஸகல சாஸ்திர உபந்யாஸங்கள். வைகுண்டத்தில் எள்ளுப் போடமுடியாது. அப்படி மஹாரிஷிகளும் பக்தர்களும் தேவர்களும் சூழ்ந்து விட்டார்கள். பகவானே பிரமித்து விட்டார். அப்பொழுதுதான் அம்மா ஸ்ரீதேவி யவர்கள், தானும் எவ்வாறேனும் வைணிக வித்யாலங்காரத்துடன் பிரகாசிக்க வேண்டுமென்று—"

நாரதர் :—"ஓஹோ, புரிந்தது, புரிந்தது இந்த அப்யாஸம் வெகு மும்மரமோ?"

வா. கா:—"இரவு பகலென்று நிதான மில்லாமல் அம்மா அவர்கள் இதில் லயித்து விட்டார்கள். எங்களுக்கு உரக்கப் பேசவும் பயமாயிருக்கிறது. சில தினங்களாய் நித்ரா பங்கமாய் வருகிறது. தாங்கள் இந்த விஷயத்தில் ஏதேனும்—"

நாரதர் :—"என் சாமர்த்தியத்திற்கு மீறின விஷயமுண்டோ? நிஜமாகவே இதில் ஸஹாயம் புரிவேன். நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்."

சிறிது நேரமானபின், வெகு ஸ்வதந்திரமாக நாரதர் பகவான் சிரமபரிஹாரம் செய்து கொண்டிருக்கும் அறைக்குள் சென்றார். அங்கே திவ்விய வடிவப் பணியாளர் தீபங்கள் தாங்க, தூபங்கள் நறுமணம் கமழ, பகவான் கோடி ஸூர்யப் பிரகாசத்துடன் சயனித்திருந்தார். எதிரில் ஸ்ரீ தேவி வீற்றிருந்து வீணாகானம் புரிய, சில பணியாளர் அவளைச் சாமரங்களால் மெதுவாக விசிறிக் கொண்டிருந்தனர். பகவான் நாரதரைப் பார்த்து புன்னகை புரிந்து ஆஸனத்தில் அமரும்படி ஜாடை செய்தார். நாரதரும் சேவித்துப் பின் ஆஸனம் அமர்ந்தார்.

எல்லாரும் மவுனமாகவே யிருந்தனர். வீணாகானம் தொடர்ச்சியாக நடைபெற்றது. நாரதர் தமக்குள்ளேயே, ஆனால் ஓரளவு யாவராலும் கேட்கும்படி, மெதுவாகச் சிரித்தார்.

ஸ்ரீ தேவியின் திவ்விய முகச்சாயல் மாறியது. வீணாகானம் சட்டென்று நின்று விட்டது. நாரதரை உற்று நோக்கி, "ஏன் சிரித்தீர்? "என்று வினவினர்.

நாரதர் ஒன்று மறியாத குழந்தையைப் போல், "நான் ஒன்றும் சிரிக்கவில்லையே?" என்றார்.

ஸ்ரீ தேவி :—"நீர் சிரித்தது உண்மை. அஸத்யம் வேண்டாம். காரணத்தைச் சொல்லிவிடும்."

நாரதர் (ஸேவித்து) :—"அம்மாவின் ஆக்ஞைப்படியே. சிரித்ததை ஒப்புக் கொள்கிறேன். காரணமொன்று மில்லை."

ஸ்ரீ தேவி :—நீர் அகாரணமாக எதையும் செய்வதில்லை யென்பது கேவலம் ஸாமான்ய ஞானம். ஒளிப்பு மறைப்பு வேண்டாம். சொல்லிவிடும்.

நாரதர் [பேச பத்தனித்துத் தயங்கி] :—"ஒன்று மில்லை, மன்னிக்க வேண்டும். ஆனால்—சிறிது—ஓரளவு—அபஸ்வரம்—"

அதற்குப் பின்பு நடந்ததை நம்மால் வருணிக்க முடியாது. வைகுண்டத்தில் பிரளயமென்று தேவரும் சித்த கணங்களும் நடுக்கமுற்றனர். நாரதர் 'அபராதம்' அபராதம்' என்று பலமுறை பணிந்தும், ஸ்ரீ தேவியின் உக்கிர ஆவேசம் மாறவில்லை. இறுதியில் ஸரஸ்வதி தேவியை உடனே வரவழைப்பதென்றும், அந்தத் தேவியின் அபிப்பிராயத்தை முடிவாகக் கொள்வதென்றும், அபஸ்வரமிருந்தால் ஸ்ரீதேவி இனிமேல் வீணையைத் தொடுவதில்லை யென்றும், இல்லாவிட்டால் நாரதர் மனிதராலும் இகழப்பட்ட கழுதையைப் போல் கானம் செய்ய வேண்டுமென்றும், ஒப்பந்தம் பேசி முடித்தார்கள். சரஸ்வதி தேவியும் அதி தீவிரமாக அழைக்கப்பட்டு வந்து, விஷயத்தை விசாரித்தறிந்து, ஸ்ரீ தேவியார் வீணையில் வாசித்த ஸஞ்சாரத்தை அப்படியே மாற்றில்லாமல் மறுபடி வாசிக்கக் கேட்டார். அபஸ்வரம் தட்டின விடத்தில், நாரதர் திரும்பவும் கர்வமாகச் சிறிது புன்னகை புரிந்து, தீர்ப்பை தைர்யத்துடன் எதிர்பார்த்தார்.

ஆனால் ஸரஸ்வதிதேவி விழிக்கோணத்தில் குறும்பு மிளிர—"இது நானல்லவா அக்கா அவர்களுக்கு ஸாதகம் செய்வித்தேன்? சுத்த ரஞ்சகமான ஸ்வரங்கள். அபஸ்வரம் என்று குறை சொல்வது மஹாபாபம்" என்றாள்.

ஸ்ரீ தேவி [நாரதரைச் சுட்டிக்காட்டி] :—"இவர்தான் வாய் கூசாமல் அவ்வாறு—"

ஸரஸ்வதிதேவி :—"என்ன அக்கா, இவர் ஸமாசாரம் உங்களுக்குத் தெரியாதா? எப்போதும் சூதும் வாதும் பொறாமையும் தான்."

பகவான் :—"சரி நாரதரே, ஒப்பந்தத்தை மறக்க வேண்டாம்."

நாரதருக்கு இடி விழுந்தாற் போல் கலக்கமுண்டாய் விட்டது. நாரதர் கர்த்தபகானம் செய்யப் போகிறார் என்ற ஸமாசாரம் ஊழித் தீபோல் த்ரிலோகங்களிலும் பரவி விட்டது. மஹரிஷிகள், இந்திராதி தேவர், கந்தர்வர், சில வரபுருஷர் கூட அமிதமான உத்ஸாகத்துடன் திரளாய் வைகுண்டத்திற்கு வந்து மொய்த்தனர்.

வேறு வழியில்லாமல் நாரதர் தம்பூரு சுருதியை மீட்டி, உன்னதமான சுருதியில் "ஹீ ஹா, ஹி ஹாஹீ, ஹி ஹா" என்ற தொனிகள் கிளம்புமாறு பாடினர். அதைக் கேட்டவர் யாவரும் மயிர் சிலிர்த்துப் பரவசம் எய்தி— "அடாடா! கழுதையல்லவா கத்துகிறது? ஐயோ, சிருஷ்டியின் அதிசயமெப்படி! இதை இதுகாறும் இழிவாக நினைத்தோமே! கழுதையின் குரலில் என்ன காம்பீர்யம், என்ன நயம்?" என்று சொக்கிப்போயினர். ஏன் ஸரஸ்வதி தேவியே கண்பனித்து விட்டாரே!

அந்த ராகத்திற்கு 'கர்த்தப காம்பீர்யம்' என்று பெயர். எப்போதும் பாடக் கூடியது; மத்யமாவதியைப் போல் மங்களகரமானது; தோஷ நிவிர்த்தி செய்வது. -ஷாடவ ஸம்பூர்ணம், சுத்த ரிஷப, அந்தர காந்தாரப் பிரதி மத்தியமங்கள் ராகச் சாயா ஸ்வரங்கள். இதை ஆலாபனம் செய்யக் கூடிய ஸங்கீத வித்வான் தற்காலத்தில் எவருமில்லை.

அநுஷ்டானப் பகுதி

விக்கிரம வருஷம்

ஒரு ஸம்பாஷணை.

‘கௌசிகன்’

பாப்பா :—அப்பா, இன்று எங்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லை; தமிழ் வருஷப் பிறப்பு என்று வாத்தியார் சொன்னார். அதென்ன, அப்பா, தமிழ் வருஷப் பிறப்பு? புது வருஷம் தான் ஜனவரி மாதம் முதல் தேதியே பிறந்து விட்டதே. அப்புறம், தமிழ் வருஷப் பிறப்பு, தெலுங்கு வருஷப் பிறப்பு, மலையாள வருஷப் பிறப்பு துலுக்கு வருஷப் பிறப்பு என்றெல்லாம் ஏன், அப்பா?

அப்பா :—இதைப் பள்ளிக் கூடத்திலேயே உனக்குச் சொல்லித் தரவில்லையா?

பாப்பா :—பூகோள வாத்தியார் சொன்னார்: ‘பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது’ என்று; தன்னைத் தானே பூமி ஒரு தடவை சுற்றினால் ஒருநாள் ஆகிறதாம்; சூரியனைச் சுற்றினால் ஒரு வருஷமாம். நாள் என்பது எல்லாருக்கும் ஒரே மாதிரித் தானே இருக்கிறது. அதுபோல வருஷமும் ஒன்றாகத் தானே இருக்கவேண்டும்.

அப்பா :—அப்படியா செய்தி? எல்லாருக்கும் நாள் ஒரே மாதிரித்தான் இருக்கிறதோ? உங்கள் வாத்தியார் சொல்லித்தரவில்லையா, நமக்கு விடியற்காலமாகும்போது சீமையிலெல்லாம் அர்த்த ராத்திரி என்று.

பாப்பா :—ஆமாம்; சொல்லியிருக்கிறார். எனக்குத் தான் மறந்துபோச்சு.

அப்பா :—அது கிடக்கட்டும், பாப்பா. பூமி சூரியனைச் சுற்றிவர ஒரு வருஷம் ஆகும் என்றாயே, சுற்று எங்கிருந்து ஆரம்பிக்கிறது? எங்கே முடிகிறது? ஒவ்வொரு தேசத்திலே பூமி பிரதக்ஷிணம் சுற்றுவதை ஒவ்வொரு இடத்திலே ஆரம்பிப்பதாகக் கொண்டார்கள். அதனாலே வருஷப் பிறப்பும் வேறுவேறாகப் போச்சு. ஆதி ரோமர்கள் மார்ச்சுமாத ஆரம்பத்திலே பூமி இருக்கும் இடத்தை சுற்றின் ஆரம்பமாகக் கொண்டார்கள்; அதுவே அவர்களுக்கு புது வருஷ ஆரம்பம்; ஸெப்டெம்பர் அவர்களுக்கு ஏழாவது மாதம். அக்டோபர் எட்டாவது மாதம், நவம்பர் ஒன்பதாவது மாதம். டிஸம்பர் பத்தாவது மாதம். டிஸம்பர் மாதக் கடைசி வாரத்திலேதான் ஏசு கிருஸ்து பிறந்தாராம். அவர் பிறந்த நாளிலிருந்து ஒரு வாரம் திருநாள் கொண்டாடி, பிறகு ஜனவரி மாதத்தை புது வருஷத்தின்

முதல்மாதமாகக் கொண்டார்கள் இந்த கிருஸ்தவர்கள். கிருஸ்து பிறந்து இன்று 1940 வருஷமாகிறது. இதுதான் கி. பி. 1940 என்னும் இங்கிலீஷ் வருஷம்.

பாப்பா:—அப்படியானல், அப்பா, யார் பிறந்ததைக் கொண்டு நாம் புது வருஷம் கொண்டாடுகிறோம்?

அப்பா:—யார் பிறந்த தினத்தைக் கொண்டும் நாம் புது வருஷம் கொண்டாடுவதில்லை. பூமி தன்னைத்தானே சுற்றுவதாலே நாள் உண்டாகிறதல்லவா? நாளைப் பகல் இராத்திரி என்று இரண்டாகப் பிரிக்கிறோம். சில நாட்களில் பகற்பொழுது அதிகமாயிருக்கிறதல்லவா? வேறு சில மாதங்களிலே இராத்திரிப் பொழுது அதிகமாயிருக்கும். வருஷத்திலே இரண்டு நாளிலேதான் இரவும் பகலும் சரிசமமாய் ஒவ்வொன்றும் பன்னிரண்டு நேரமுள்ளதாய் இருக்கும். அவ்விதநாட்களை விஷு என்று சொல்வார்கள்; சித்திரை விஷுவன்று தான் தமிழ் வருஷப்பிறப்பு.

பாப்பா:—அப்படியானல், தெலுங்குவருஷப்பிறப்பு மட்டும் ஏன் முன்னடியே வந்து விடுகிறது? அவர்களுக்குச் சித்திரை விஷு முன்னலேயே வந்துவிடுமா?

அப்பா:—அப்படிக்கேள்; அதுதான் சமத்து. சித்திரை விஷு எல்லாருக்கும் ஒரு நாளிலே தான் வரும். ஆனல் அதற்கு முந்திய அமாவாசையன்றே தெலுங்கர்கள் பழைய வருஷம் பூர்த்தியடைந்ததாகவும் பாட்டிமை முதற்கொண்டு புது வருஷம் ஆரம்பிப்பதாகவும் கணக்கிட்டுக்கொள்கிறார்கள்.

பாப்பா:—மலையாளிகளோ?

அப்பா:—அவர்களுக்கு எல்லாம் தலை கீழ் அல்லவா? சித்திரை விஷுவை அவர்கள் பெரிதாகக் கொண்டாடினலும், ஆவணி அல்லது புரட்டாசி மாதம் முதற் கொண்டே புதுவருஷம் என்று கணக்கிட்டுக்கொள்கிறார்கள். அங்கேயுள்ள கொல்லம் என்ற ஊர் அப்போது தான் கட்டிமுடிந்ததாம். இப்பொழுது கொல்லம் கட்டிமுடிந்து 1115 வருஷம் ஆயிற்றாம். கொல்லமாண்டு ஆவணிபுரட்டாசியிலேதான் தொடங்குகிறது.

பாப்பா:—துலுக்க வருஷம்?

அப்பா:—அதுவா? அதற்குமுன்னலே நீ ஒன்று தெரிந்து கொள்ளவேண்டும். வருஷத்திற்குப் பன்னிரண்டு மாசம் அல்லவா? பன்னிரண்டு பௌர்ணமி ஆவதற்கு 355 நாள் தான் ஆகிறது. பூமி சூரியனைச் சுற்றிவரவோ 365 நாள் ஆகிறது.

பாப்பா:—இல்லையப்பா, 365¼நாள்; கால் நாள் எல்லாம் சேர்த்து நாலு வருஷத்திற்கு ஒரு தடவை பெப்ரவரி மாதத்திற்கு ஒரு நாள் அதிகமாகும் என்றுகூட வாத்தியார் சொன்னரே!

அப்பா:—ஆமாம், கணக்காய் 365¼ நாள் தான்; ஆனல் 12 பிறை கொண்ட துலுக்க வருஷத்திற்கு 355 நாள் தான்; ஆகவே, வருஷத்திற்குவருஷம் பத்து நாளைக்கு முன்பே அவர்களுக்கு வருஷப்பிறப்பு வந்துவிடும்; நமக்கு 36 வருஷமாகும் போது, அவர்களுக்கு 37வருஷமாகும். தெலுங்கர்களும் சந்திரனைக் கொண்டே மாதம் நிச்சயிக்கிறார்கள். அவர்களுக்கு அமாவாசைக்கு அமாவாசை மாதம்; ஆனல் மூன்று வருஷத்திற்கு ஒரு தடவை வருஷத்திற்குப் பத்து நாளாகக் கூடிவரும் முப்பது நாட்களையும் சேர்த்து அதிக மாதம் என்று கணக்குப்பண்ணி, அந்த வருஷத்திற்கு பதின்மூன்று மாதம் என்று கணக்கைச் சரிப்படுத்துகிறார்கள். அப்படித்தான் வேதத்திலே சொல்லியிருக்கிறதாம்.

பாப்பா :—வேதத்திலே என்ன சொல்லி இருக்கிறது, அப்பா?

அப்பா :—'வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதம்; சிலபோது, பதின்மூன்று மாதமும் உண்டு' என்று.

பாப்பா :—சரி, புதுவருஷத்திற்குப் பெயர் என்ன, அப்பா?

அப்பா :—விக்கிரம வருஷம்.

பாப்பா :—இந்த வருஷங்களுக் கெல்லாம் யார் பெயர் வைத்தார்கள், அப்பா?

அப்பா :—யார் பெயர் வைப்பார்கள்? ஜோஸ்யர்கள் தான். அவர்கள்தான் நக்ஷத்திரங்களை 27 ஆகப் பிரித்துப் பெயர் வைத்தார்கள்; $2\frac{1}{4}$, $2\frac{1}{4}$ நக்ஷத்திரங்களைச் சேர்த்து ராசிகளாக்கிப் பெயரிட்டார்கள்; ஒவ்வொரு ராசியிலும் சூரியன் புகும் காலத்தை மாதப் பிறப்பாகவும், அசுவதி நக்ஷத்திரத்தில், அதாவது, மேஷ ராசியில் புகும் காலத்தை சித்திரை மாதப் பிறப்பு அதாவது வருஷப் பிறப்பாகவும் ஏற்படுத்தினார்கள். ஆடிமாதப் பிறப்பன்று சூரியன் தெற்கு நோக்கிப் போகிறான் என்று கண்டுபிடித்து அதற்கு தக்ஷிணாயன காலம் என்றும் தை மாதப் பிறப்பிலே சூரியன் வடக்கு நோக்கிச் செல்கிறான் என்றறிந்து அதற்கு உத்தராயண காலம் என்றும் பெயர்கொடுத்தார்கள். சித்திரைமாதப் பிறப்பன்றும் ஐப்பசி மாதப்பிறப்பன்றும் இரவும் பகலும் சமமான விஷுக்களென்றும் கணக்கிட்டு அறிந்தார்கள். ஆனால் அவர்கள் கணக்கெல்லாம் இப்பொழுது தப்பாய்ப் போய்விட்டது. மார்ச்சு மாதம் 23 தேதியும் செப்டம்பர் மாதம் 21தேதியும் கணக்குப்படி அமைந்த விஷுக்கள்; அயனங்களும் முன்னாலே பிறக்கின்றன.

பாப்பா:—வருஷங்களுக்கு யார் பெயரிட்டார்கள் என்றால், என்னெல்லாமோ சொல்லுகிறீர்களே, அப்பா! எனக்குப் புரியவில்லையே, இதெல்லாம்.

அப்பா:—அப்புறம் புரியும்படியாகச் சொல்கிறேன். நக்ஷத்திரமண்டலத்தைப் பிரித்தார்கள் என்று சொன்னேனே. ஒரு ராசியில் ஒரு மாதமாக சூரியன் நக்ஷத்திரமண்டலத்தை ஒரு சுற்று சுற்றிவர ஒருவருஷம் ஆகும்; வியாழன் என்னும் குருவுக்கு ஒரு ராசியில் ஒருவருஷமாக ஒரு சுற்றுக்கு பன்னிரண்டு வருஷம் அல்லது ஒரு வியாழவட்டம் ஆகும். சனிதான் மிகவும் மந்தமான கதியுடையவன். அவனுக்கு ஒரு ராசிக்கு $2\frac{1}{2}$வருஷமாக முப்பது வருஷம் வேண்டிவரும். பாப்பா, உனக்குத்தான் கணக்குப்போடத் தெரியுமே, சூரியன் குரு சனி இவை மூன்றும் சில குறிப்பிட்ட இடங்களிலே இன்று இருந்தால், மறுபடியும் அவை அதே இடங்களிலே ஒரே சமயத்திலே வருவதற்கு எத்தனை வருஷம் வேண்டும்?

பாப்பா:—என்ன, அப்பா! இதுகூடவா தெரியாது எனக்கு? 12, 30 இவற்றின் அதமப் பொது மடங்கு 60; அறுபது வருஷமாகும்.

அப்பா:—இப்படிக் கணக்குப் போட்டு, அறுபது வருஷக் கிரகஸ்திதிகளை நாள்வாரியாக எழுதி பஞ்சாங்கங்களிலே குறித்துக்கொண்டாற்போதும், சாசுவதப் பஞ்சாங்கமாகிவிடும். அறுபது வருஷத்திற்குப்பின், அப்படியே கிரகநிலைகள் திரும்பத் திரும்பவரும் என்று கொண்டு, பிரபவ முதற்கொண்டு அக்ஷய வரை அறுபது வருஷங்களுக்குப் பெயரிட்டு, கிரகநிலைகளையும் பலாபலன்களையும் ஜோஸ்யர்கள் எழுதிவைத்துக் கொண்டார்கள். இந்த பிரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸரங்களிலே இன்று முடியும் பிரமாதி பதின்மூன்றாவது. இந்த வருஷத்திலே அரசியல் துறையிலே கேடும் திருடர்களின் பீடையும் பஞ்சமும் கோரயுத்தமும் நேரும் என்று ஒரு புராணத்திலே சொல்லியிருக்கிறது.

பாப்பா:—புராணத்திலே சரியாய்த்தான் சொல்லி இருக்கிறது. லோகமெல்லாம் யுத்தத்தால் கேடு உண்டாச்சு. போலண்டும் பின்லாண்டும் அழிஞ்சு போச்சு. நாட்டிலே எங்கும் பஞ்சம். சென்னையிலே கண்காட்சிச் சாலை தீப்பற்றி எரிந்தது; காங்கிரஸ் கூட்டத்தை மழை கொட்டிக் கலைத்து விட்டது. ஹிந்து முஸ்லீம் சச்சரவு பெலத்து விட்டது. இவ்வளவு கேடு போதாதா ஒரு வருஷத்திற்கு?

அப்பா:—அப்படியில்லை, பாப்பா! கெட்டதும் நல்லதும் மாறி மாறித் தான் வரும். அதனாலே தான், "பல்லைக்கடித்துக் கொண்டு சாகாமல் இருந்தால், எப்படியும், வருஷம் நூறானாலும், அவசியம் ஆனந்தம் வந்தே தீரும்" என்ற பழமொழி ஏற்பட்டது. அதனாலேதான் பிராம்மணர்கள் மத்தியான்ன வேளையிலே சூரியனைப் பார்த்து, "நாங்கள் நூறு வருஷம் பார்க்கவேண்டும்; நூறு வருஷம்வாழ வேண்டும்" என்றெல்லாம் பிரார்த்திக்கிறார்கள்.

பாப்பா:—அப்பா! அந்தப் புராணத்திலே புது வருஷத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

அப்பா:—

ஜாயந்தே ஸர்வ ஸஸ்யானி,
மேதினீ நிருபத்ரவா;
லவணம் மது கவ்யஞ் ச
மஹார்க்கம் விக்ரமே, ப்ரியே!

அதாவது, பரமேசுவரன் பார்வதி தேவியைப் பார்த்துச் சொல்கிறார்: "பிரியே! விக்ரம வருஷத்திலே காய்கறிகள் செழிப்பாக இருக்கும்; பூமியெங்கும் யாதொரு உபத்திரவமும் இன்றி இருக்கும்; உப்புக்கும் கள்ளுக்கும் நெய்க்கும் விலை அதிகம் ஆகும்" என்று.

பாப்பா:—அப்படியானால் இந்தப் பாழும் யுத்தம் முடிந்து விடுமா, இந்த வருஷத்திலே?

அப்பா:—அப்படித்தான் தோன்றுகிறது. விக்ரமம் என்றாலே வெற்றி; இது விக்ரம வருஷமல்லவா? பல கேடுகளையும் விளைவித்து உலகையெல்லாம் கலக்கிய இந்த பிரமாதி வருஷத்தையும் பல நன்மைகளை நமக்கு உதவப் பிறந்த இந்த விக்கிரம வருஷத்தையும், பாரதியாரை அனுசரித்து, இதோ பாட்டாக எழுதியிருக்கிறேன். இதைப் பார்த்துக் கொண்டே பாடு, பார்க்கலாம்.

பாப்பா:—

சோதி மிக்க மணியிலே—பிரமாதீ, நீ
சூழ்ந்த மாசு போன்றனை, போ போ போ.
சாதி நூறு சொல்லியே, வீணை
சச்சரவுண் டாக்கினாய், போ போ போ.
வேறு வேறு பாஷைகள் கற்றும் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய், போ போ போ.
தாறு மாறுமாகவே சிதறுண்டு
கூறு பட்டு மாழ்குவாய், போ போ போ.
வெற்றி கொள்ளும் விக்ரமா, வா வா வா;
வினயமுள்ள நாவினாய், வா வா வா;
ஒற்றுமைக்குள் உய்யவே, நாடெல்லாம்
ஒன்று பட்டு வாழவே, வா வா வா.
பயிர்கள் செழித் தோங்கவே, வா வா வா.
பஞ்ச மில்லையாக்கவே, வா வா வா.
உயிர்கள் வாட்ட மின்றியே வாழ்தற்கே
உதய மாகும் வத்ஸரா, வா வா வா.
தெய்வ சாப நீங்கவே நங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய்—வா வா வா.
வெய்ய துயரங்களாம் இருள் மாய்க்கும்
விக்ரமப் பெயரினாய், வா வா வா.

அப்பா:—பாப்பா! முந்தி ஒரு புதுவருஷப் பிறப்பன்று, பாரதியார் ஒரு பாட்டுப் பாடினார். அது என்ன பாட்டு, தெரியுமா உனக்கு? இப்பொழுது நாடெங்கும் வாழ்த்துப் பாட்டாகப் பாடுகிறார்களே, 'வாழிய செந்தமிழ்' என்று, அதுதான். அதைப் பாடி வாழ்த்தி முடிப்போம், வா.

இருவரும்:—

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக!
நந்தேயத்தினர் நாள் தோறும் உயர்க!
வந்தே மாதரம், வந்தே மாதரம்!

புஸ்தக விமர்சனம்

இராமாயண வெண்பா: கோட்டையூர் வித்வான் மீ. சுப்ரமண்ய ஐயரவர்கள் பாடியது: ஸ்ரீமான் க. வீ. அள. ராம. முத்தையா செட்டியார் அவர்கள் குமாரர் ஸ்ரீ. ராமநாதன் செட்டியாரவர்களின் பொருளுதவியால் வெளியிடப் பெற்றது. 1930.

இந் நூலாசிரியரின் முதன் மாணுக்கரும் இந்நூலைப் பதிப்பித்தவருமான ஸ்ரீ. வேங்கடராம ஐயரவர்கள் முகவுரையிலே பின்வருமாறு இந்நூலின் வரலாற்றைக் குறிக்கின்றனர்: "மகாகவி கம்பரால் தமிழில் செய்யப்பெற்று கம்பராமாயணமென்று சிறப்புப்பேர் பெற்றிருக்கும் செய்யுட்களை குருமொழியாகப் பாடங் கேட்டுத் தேர்ச்சி யுள்ளவரா கையால், நாமும் இந்த ராமாயணமே செய்யவேண்டுமென்றும், அதிலும் மற்றெவர்களுடைய கருத்து மின்றி கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பன் சொல்லிய வழியே நாம் செய்ய வேண்டுமென்றும் துணிவுடையவராய் கம்பகவி விருத்தப்பா வானபடியால் நாம் வெண்பாவாகப் பாடவேண்டுமென்று உத்தேசித்து கடவுளை பிராத்தித்துக் கொண்டு பெரும்பாலும் நேரிசையும் இன்னிசையுமாகவே ஆறு காண்டங்களும் வெண்பாச் செய்யுள்களினுல் பாடிமுடித்தார்." கம்பகவி ஒவ்வொன்றும் ஒவ்வொரு வெண்பாவாக அமைந்து விளங்கும் இந்நூல் கம்ப ராமாயணத்தின் பொருளைச் சுருக்கியும் தெளிவாக்கியும் கம்பனைக் கற்போருக்கு மிகவும் உதவுகின்றது. வெண்பா விலக்கணம் பற்றிப் பாடியதால் எதிர்பாராது நேர்ந்த அனுகூலம் இது. எவ்வளவு நெடிய விருத்தமாயினும், அதன் பொருளை வெண்பாவின் ஒழுங்கு பெற்ற அளவிற்குள் அமைக்க வேண்டிய அவசியத்தினுல், சிற்சில இடங்களிலே கம்பர் வாக்கின் அழகு அதிகரிக்கின்றது; சிற்சில இடங்களிலே, சுருக்கிப் பாடுவதால், கம்பரின் கருத்தானது தெளிவையும் வன்மையையும் பெறுகின்றது. சில இடங்களிலே கம்பருடைய வாக்கின் மதுரமும் நயமும் கெடுகின்றனவாயினும் இவ்வாறு அழகு குன்றும் இடங்களிலும் இந் நூலிலுள்ள வெண்பாக்கள் வேறொரு வகையிலே உதவுகின்றன. 'விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்னும் வசனத்தின் உண்மையை இவை தெளிவாக்குகின்றன. கம்பனுடைய வாக்கின் இனிமையும் நயமும் பொருத்தமும் ஒரு புறமிருக்க, அவ் வமுத வாக்குகள் அனைத்தும் விருத்தப்பா வாக வன்றி வேறு வகையிலே மாற்றி அமைத்தால் அவை ரஸம் குன்றுவனவாயும் சிற்சில இடங்களில் அவலட்சணமுடையனவாயும் ஆகின்றன என்னும் பரம தத்துவத்தையும், கம்பன் பாடல்கள், கருத்தும் சொல்லும் வேறு வேறுகப் பிரித்தறிய இயலாத வகையிலே ஐக்கியப் பட்டு விளங்குகின்றன என்னும்படியான உத்தம காவிய லக்ஷணத்தையும் வற்புறுத்திக் காட்டுவன இந் நூலிலுள்ள பல வெண்பாக்கள்.

மேற் கூறியவற்றை நன்கு நிரூபிப்பன சுந்தர காண்டம் காட்சிப் படலத்தினின்றும் கீழே எடுத்துக் காட்டப் பெற்றுள்ள கம்பகவிகளும் இராமாயண வெண்பாக்களும்.

துயிலெனக் கண்களிமைத்தலு முகிழ்த்தலுந் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலியற் குயின்மழலைபாள் மானிளம் பேடை
அயிலெயிற்றுவெம்புலிக்குழாத்தகப்பட்டதன்னா ர்.

இச்செய்யுளிலே, மூன்று உவமைகள் அமைந்துள்ளன. பொதுவாக, கம்பராமாயணச் செய்யுள்களில் அமைந்த சிறந்த லக்ஷணம், 'மூன்றுமடியும் நான்காமடியும் ஒன்றுபட்டு ஒரு கருத்தினை விரித்துரைத்து, முன்னிரண்டிகளின் சிகரமாக விளங்குவன என்பதே. அது போன்றே அமைந்தது இச் செய்யுளும். இராமாயண வெண்பாவிலே, இப்பாடல் இவ்வாறு உருமாறுகின்றது.

துயிலடையாக் கண்கள் துடித்திமைத்தல் செய்யாள்
வெயிலிடையாந் தீபவொளி மெய்யாள்—அயிலெயிற்று
வெம்புலிக்கு ழாத்தினுற்ற மென்மானின் பேடையுற்றாள்
அம்புலிக்கு நல்வதனத்தாய்.

வெண்பாவாக மாற்றும் விசித்திர வேலைக்கு விருத்தத்திலுள்ள எதுகைச் சொற்களை அப்படியே உபயோகித்துக் கொள்ளுகிறார் இந் நூலாசிரியர். கம்பரது கருத்து மூன்று அடிகளிலே சுருக்கப்பட்டு விடுவதும் நான்காமடியானது வெண்பாவாசிரியருடைய சொந்தக் கற்பனைக்கு இடந்தருவதும் இங்கு நோக்கத் தக்கன. கம்பர் சொன்னயத்தையும் அது வெண்பாவிற் குன்றுவதையும் இவ் வுதாரணத்திற் காணலாம்.

பிராட்டி மயில் போன்றவள்; குயில் போன்றவள்; மானிளம்பேடை போன்றவள். இவையெல்லாம் உத்தமஸ்திரீயின் இயல்பு. புலி போன்றனர் அவளைச் சூழ்ந்திருந்த அரக்கியர்.

இவ்வாறு அழகாக வருணிக்கும் பாடலில் ஒரு சொல்லும் மிகையன்று. ஆனால் அதனை வெண்பா வாக்கும்போது, ஆசிரியருக்கு 'மயிலியற் குயின்மழலையாள்' என்னும் அழகிய சொற்றொடரை விடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அதுவும் ஒரு நன்மை தான் என்று கொள்ளலாம்; முக்கியமான கருத்து "மானிளம்பேடை அயிலெயிற்று வெம்புலிக்குழாத்தகப்பட்டதன்னாள்" என்பதேயன்றோ? அந்த முக்கியக் கருத்தினின்றும் நமது மனது வேறுசெல்லாத வண்ணமாய், 'மயிலியற்குயின் மழலையாள்' என்பதை நீக்கியதை ஒரு வகை நன்மையெனக் கொண்டாலும், 'மானிளம்பேடை அகப்பட்ட தன்னாள்' என்பதை 'மென்மானின் பேடையுற்றாள்' என்று அழகுகெடப் பாடவேண்டிவந்தது வெண்பாவின் நிர்ப்பந்தத்தாலன்றோ? இனி, முதல் வரியைக் கவனிப்போம். 'துயிலென்று கண்களை இமைத்தலும் பின்பு முகிழ்த்தலும் செய்யவில்லை பிராட்டி' என்கிறார் கம்பர். கண்மலர்களை அரவிந்த நீலோற்பலங்களைப் போன்றன என்று சொல்வது கவிமரபு. அவை குவிந்து பின் மலருவனபோன்று, கண் துயிலும்போது மூடி, விழிக்கும்போது திறப்பது. இப்பொருள் 'முகிழ்த்தல்' என்னும் சொல்லிலே தொனிக்கின்றது. இதனை நன்கறிந்தும், வெண்பா விதிகளால் இடர்ப்படும் இவ்வாசிரியர் 'துடித்திமைத்தல் செய்யாள்' என்கிறார். "பிராட்டிக்கு அசோக வனத்திலே கண் துடித்தலும் இமைத்தலும் உண்டு; மானுடமாய் அவதரித்தபின் கண் இமைத்தல் இல்லாது போமோ? அனுமான் வருகைக்குச் சூசகமாகக் கண் துடித்ததன்றோ?" என்ற ஆக்ஷேபம் எழாத வண்ணம், இவ்வாசிரியர் அவ்வாறு துடித்தலும் இமைத்தலும் பிராட்டியின் செய்கையன்று என்பாராய், 'துடித்திமைத்தல் செய்யாள்' என்று கூறினும், 'முகிழ்த்தல்' என்னும் பதத்தின் சுவையை இழந்தது இழந்ததுதானே? எனினும், கம்பருடைய அடிப்படையான கருத்தை அப்படியே கூடிய மட்டும் அவருடைய சொற்களைக் கொண்டே அமைத்து வெண்பாவின் சுவையும் குன்றுவண்ணம் பாடும் இவர் திறமையை விளக்கவும் இவ் வுதாரணமே சாலும்.

இனி, அடுத்த கவியைக் கவனிப்போம்.

விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல் இராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுதலன்றி மற்றய லொன்றுஞ்செய்குவதறியாள்.

என்பது வெண்பா வடிவெடுக்கும்போது பின் வருமாறு வேஷம் மாறுகின்றது.

விழுதலிரா மற்றுளங்கல் மேனி வெருவல்
எழுதலிரா மற்றுனையென் றெண்ணித் தொழுதலொடு
சோர்தலன்றி நெருங் துயரத் துயிர்த்தல் கண்ணீர்
வார்தலன்றி வேறென்வரும்.

விருத்த வடிவு கம்பனுக்கு எவ்வகையிலே உதவுகின்றது; விழுதல் தொடங்கி பிராட்டியின் செயலை யெல்லாம் அமைக்க இயலுகின்றது. இவை யெல்லாம் அழுதலின் பரிணாமங்கள் என்று தொனிக்குமாறு, 'அழுதலன்றி மற்று அயலொன்றும் செய்குவதறியாள்' என்று சிகரித்து முடிக்க இயலுகின்றது. 'சோர்தல்' என்னாது 'சோருதல்' என்று நீட்டிச் சொல்லும் சௌகரியமும் கிடைக்கின்றது. வெண்பாவிற் புகழேந்தியின் வண்மை படைத்தவராயினும், இவ் விசித்திரங்களை அமைக்க இயலாதென்றே தோற்றுகின்றது. 'சோருதல்' என்பதை 'சோர்தல்' என்று கூறவேண்டிய நிர்ப்பந்தத்தையும் 'அழுதல்' என்பதை 'கண்ணீர்வார்தல்' என்று விரித்து

எதுகை நோக்கிக் கூறவேண்டிய அவசியத்தையும் நோக்குவோர்க்கு இச்செய்யுளே இந்நூலாசிரியர் எடுத்துக்கொண்ட வேலையிலுள்ள கஷ்டங்களை விளக்கும் நிதர்சனம் ஆக்குகின்றது. "மற்று அயலொன்றும் அறியாள்" என்பதன் நயத்தை அறிந்தவர், "வேறெண்வரும்" என்பதை விரும்பமாட்டார்கள். ஆயினும், கம்பநாட்டாழ்வாரே வெண்பாவிற் பாடினாலும் இதைவிட நன்றாகப்பாட இயலாதுஎன்று நாம் வியக்குமாறு வெண்பா இயற்றுவதிலும் கம்பரின் சொன்னயங்களை யெல்லாம் கூடியவரையில் விடாதுகொண்டு அமைப்பதிலும் முழுத்திறனையும் புலப்படுத்தும் இந்நூல் கம்பராமாயணத்தைப் பாராட்டுவோர் அனைவராலும் பெரிதும் பாராட்டுதற் குரியதே யாகும்.

இதனையறிந்தும் இவ்வாசிரியருக்குக் கம்பர்பாலுள்ள பக்தியையும், அவர் மொழிகளையெல்லாம்பொன்னேபோல்போற்றி தம் பாட்டுளே பொதிந்துவைக்கும் இவரது ஆசையையும் அறிந்தே இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஸ்ரீராமநாதன் செட்டியார் அவர்கள் பொருளுதவினார்கள் என்றும் இவ்வாசிரியருக்கு இன்னும் அவர்கள் பொருளுதவிசெய்து கௌரவித்து வருகிறார்கள் என்றும் அறிந்து, இவ் வாசிரியரிடம்போல் செட்டியாரவர்களிடமும் தமிழ் மக்கள் அனைவரும் இருதக்குதா புத்தி செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

அகஸ்திய தாஸன்.

இராமாயணப் புகழ் (2) தோத்திரத்திரட்டு (3) ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் பதிகம்:— இவை ஸ்ரீ. A. R. கணபதி அய்யர் இயற்றியன. கிடைக்குமிடம் ஆசிரியர், அஸிஸ்டன்ட் இன்கம்டாக்ஸ் ஆபீஸர், மதுரை.

தெய்வபக்தியைப்போன்றே தமிழ்க்கவிதையும் நாம் எதிர்பாராத பல இடங்களிலே விகசிப்பதைக் காண்கிறோம். சிற்சில சன்னிவேசங்களில் பக்தியும் கவிதையும் இன்னும் அதிசயிக்கத் தக்கவாறு ஒருசேர அமைந்து விளங்குகின்றன. அத் தகைய சேராச்சேர்த்தியை இச் சிறு நூல்களிலே காணலாம். அவ்வாறு கண்டவருள் மதுரை அமெரிக்கன் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீ. கார்மேகக் கோனாரும் ஒருவர். அவர் 'இராமாயணத் திருப்புகழி'ன் முகவுரையிலே பின்வருமாறு கூறுவர்: "இந் நூற் பாடல்களை நோக்குமிடத்து, 'ஐயாவர்களது தொழிற்றுறை வேறாகவிருப்பவும், இத்தகைய அழகுறப் பாடும் ஆற்றல் எவ்வகையான் எய்தியதோ' என ஆச்சரியத்தை விளைத்து இது கருவிலுற்ற திருவெனக் கருதச் செய்கின்றது." 'கம்பராமாயணச் செய்யுளின்பத்தில் மூழ்கித் திளைத்ததின் பயனாக எழுந்தது இந்நூல்' என்றும் 'இராம கதையிற் சிறந்த பகுதிகள் ஒவ்வொன்றினுக்கும் ஒவ்வொரு பாடலாக 32 ஆசிரிய விருத்தங்களால் இந்நூலை இயற்றினார்' என்றும் அம் முகவுரையாலேயே அறிகிறோம். ஒவ்வொரு பாடலும் " வனமாலை புனமாலை யதிகாலை யொடுமாலை மனமாலையடவாழ்த்துவாம் " என்று முடிவதால், இச்சிறு நூல் ராமாயண பாராயணமும் ஸ்ரீராமஸ்துதியும் சுலபமாய் ஒருங்கே செய்துமுடிக்க விரும்புவோர்க்குப் பெரிதும் உதவக் கூடியது. 'புவியளவு ராம கதை'யின் சிறந்த பாகங்களை ஆய்ந்தறிந்து அவற்றைப் 'பிடியளவு தமிழ் மொழியிலே' சங்கிரகித்து, தாம் கண்டறிந்த கம்பர் கவிநயங்களையும் தம் பாடல்களிலே புகுத்துள்ள இவர் திறமை போற்றத்தக்கதே! பரதன் சித்திரகூடத்திலே ராமரின் பாதங்களிலே விழுந்து வணங்கியதை இவர்,

தாயைப் பிரிந்த சிறு சேயிற் கலங்கி யிரு தாளிற் பணிந்த பரதன்

என்று அழகுறப் பாடுகிறார்.

சூர்ப்பணகை ஸ்ரீ ராமரின் மனதைக் கவருதற் கெடுத்த எழிலுருவை வருணிப்பாராய்,

தந்தநிரை யொண்டரளம், இந்து முகம்,
நஞ்சுவிழி,
தங்க மலை பொங்கு முலை, மென் தளிரடிகள்ஒளி
துவரி தழும் அமைய மயிலனைய
தனி யுரு எடுத்த மயலாள்

என்பதாகவும், 'கூடப்பிறந்தவளால் இராவணன் பட்டான்' என்பதை

கூடப் பிறந்த பிணி சாடிக் கொலும்போது
கொண்ட முறை கண்டகலுமோ?

என்பதாகவும், அசோகவனிகையிலே பிராட்டி

பெட்புடைய நாதன்வா வைக்கருது மாசைகொடு
பிச்சியுயிர் நச்சி நின்றேன்
கற்புடைய மங்கைகண வற்பிரிய நிற்பளோ
கடையனேனன் அய்யகோ!
கள்வர் சிறையுற்றபின் கொள்வதொரு
பெற்றியோ! கருதுமோ புனிதன் இனிமேல்!

என்று புலம்புவதாகவும், அனுமான் திருவடி தொழுது ராமபிரானிடம்

கண்டனன் கற்புநனி காழ்கொண்ட வடிவினை

என்றும் கூறுவதாகவும், கம்பன் கருத்துக்களை அடியொற்றி யமைத்துப் பாடப் பெற்றன இந் நூலினுள்ள ரஸ பரிதமான சில பாகங்கள்.

தோத்திரத் திரட்டிலே, சில அகத்துறைப் பாடல்களும், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி, சங்கரநயினர் கோயில் கோமதி யம்மன், மதுரை மீனாட்சியம்மன் இவர்கள் மேல் முறையே அந்தாதி வெண்பாப் பதிகமும் ஆசிரிய விருத்தப் பதிகமும் ஆசிரியப்பாவும் உள்ளன.

மற்றோர் சிறு புஸ்தகமானது திருச்சுழியிலே எழுந்தருளியிருந்த மஹான் ஸ்ரீ அச்சுதானந்தசுவாமிகளிடமிருந்து நூலாசிரியர் பெற்ற அருளினைப் பாடிய பதிகத்தையும் அவர் போதித்த வைராக்கியத் துறையின் பெருமையைப் பாடிய பத்துப் பாடல்களையும் கொண்டது. இதிலும் சொன்னயம் பொருணயம் முதலிய நற்குணங்கள் அமைந்துள்ளன. உதாரணமாக, "உதறிப் பெரியோர் புறக்கணிக்கும் உதவாக் குணங்கள் மிகவுள்ளேன், எதனைக் கண்டு என் உளம் வந்தாய், எம்மான்சுழிகைப் பெம்மானே" என்பதையும், "வாரா இன்பம் வருவித்து வலியஆண்ட முனிமகிமை, ஓராயிர நா உற்றாலும் ஒண்ணுதுரைக்க ஒண்ணாதே" என்பதையும் "பிறந்தோர் உறுவது பேசருந் துன்பம்; பிறப்பொழிந்து சிறந்தோர் உறுவது செப்பெரும் இன்பம்" என்பதையும் "விண்ணுள்ள செங்கதிர் மேவித்தனைபோற்றா வீணருக்கும், கண்ணுள்ளராயின், காவாது தன்கதிர் காட்டுதல் போல்" என்பதையும் கூறலாம்.

துகளன்.

---

(1) பொருளாதார நூல்:—முதற் புஸ்தகம் (2) இந்தியக் கிராமப் பொருளாதாரம்பற்றிய கட்டுரைகள் (3) நாணய மாற்று:—இவை மதுரை அமெரிக்கன் கலாசாலைப் போசிரியர் ஸ்ரீ ஜே. எஸ். பொன்னையா, எம்.ஏ., அவர்கள் இயற்றியன: விலை முறையே ரூ. 0-8-0, 1-0-0, 1-8-0.

பொருளாதார சாஸ்திரம் என்பது மேனாட்டுக் கல்வியிலே ஒரு பகுதி; அதன் அடிப்படையான தத்துவங்களை தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு சுலபமான தமிழ் நடையிலே சர்வ சாதாரணமான திருஷ்டாந்தங்களைக் கொண்டு விளக்கி, தமிழிலுள்ள பழமொழிகளையும் இடையிடையே இட்டு ருசிகரமாகச் செய்தது இப்பொருளாதார நூல். இந்திய கிராமங்களின் பொருளாதார நிலையை நிருணயிருக்கும் நீர் வசதிகள், நில வசதிகள், விளை பொருள், நில வரி, ஆடு மாடுகள், வியவசாயச் செலவு, பயிர்த் தொழில் முறைகள், கைத்தொழில், விளைபொருள் வியாபாரம் முதலியவற்றைப் பற்றியும், கிராமங்களிலே கல்வி புகட்டிச் சீர்திருத்தி அமைப்பதைப் பற்றியும் கலைமகள் என்னும் மாதப் பத்திரிகையிலே இந்நூலாசிரியர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, புதுக்கியும் விரித்தும் பெருக்கியும் நூல் வடிவமாகச் செய்து, இந்திய பயிர்த் தொழில் ஆராய்ச்சிக் கழகத்து உபதலைவராயிருந்த திவான் பகதூர் ஸர். T. விஜயராகவாச்சாரியார் எழுதிய ஆங்கில முன்னுரையோடு பதிப்பிக்கப் பெற்றுள்ளது இரண்டாவது நூல்.

பிரயாணம் வியாபாரம் முதலியவற்றிலே ஏற்பட்டுள்ள வசதிகளால், இக்காலத்தில் உலகமுழுவதுமே ஒரு சிறு நாடுபோல் ஆகிவிட்டது. ஆயினும், ஒவ்வொரு நாட்டாரும் வெளி நாடுகளோடு பற்று வரவு செய்யும் பொழுது, பல தந்திரங்களைக் கையாளுகின்றனர். நாணய மாற்று என்பது ஒரு செப்பிடு வித்தைபோல்

பாமர ஜனங்களை மயங்கவைக்கும் ஒரு சாஸ்திரமாகும்; அதன் மூல கோட்பாடுகளையும் சென்ற மகா யுத்தத்தால் ஏற்பட்ட மாறுதல்களையும் இப்பொழுதுள்ள பொருளாதாரக் குழப்பங்களையும் பாமரர்களுக்கும் விளங்கும்படி உரைப்பது மூன்றாவது நூல்.

தற்காலப் பொருளாதார நிலைமையை தமிழ் மக்கள் செவ்வனே அறிந்து கொள்வதால் தமிழ் நாட்டின் செல்வநிலை ஓங்கி, தமிழ் மக்கள் சுகவாழ்க்கை வாழ்வதற்குரிய சாஸ்திரீயமான சீர்திருத்தங்களைக் கண்டறிந்து இயற்றி மேம்பாடுறுவதற்கான ஞானத்தை ருசிகரமான விதத்திலே புகட்டும் இம் மூன்று நூல்களாலும் ஆசிரியர் ஸ்ரீ பொன்னையா அவர்கள் தமிழ் மக்களின் நன்றிக்கு உரியவராகிறார். இவரைப் பின்பற்றி இதர கல்விமான்களும் தாய்மொழியிலே நவீன சாஸ்திர நூல்களை இயற்றுதலையே கல்வியாற் பெற்ற பயன் என்று கொண்டு உபகரிப்பார்களாக.

வே. நா.

மாதக் குறிப்புக்கள்.

சென்ற பங்குனி மாதத்தில் கலா சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் நேர்ந்தன. ஹிந்துப்பூரிலே பங்குனி மாதம் 23, 24, தேதிகளிலே ஆந்திர நாடக கலா பரிஷத்து கூடிற்று. பல பிரமுகர்கள் நாடகக்கலையைப் பற்றி விரிவுரை செய்தார்கள். குச்சிப்பூடி வேம்படி ஸத்ய நாராயணுவும் பெஜவாடா கிருஷ்ணராவ் நாயுடுவும் பரத நாட்டியத்தின் விந்யாசங்களை நடித்து விளக்கினார்கள். நலம் அமிர்தம் என்னும் ஒன்பது வயதுச் சிறுமி நாட்டியக் கச்சேரி நடத்தினாள். அனந்தப்பூர் லலித கலா போஷக ஸமிதியாரால் "விப்ர நாராயணர்" என்ற நாடகமும் ராயலசீமை 'அமெச்சூர்'களால் "கிருஷ்ண தேவராயர்" என்ற நாடகமும் நடிக்கப் பெற்றன.

சென்னையில் கலா விஷயமாய் இரண்டு உபந்யாசங்கள் நடைபெற்றன. ஸ்ரீ. வி. ஆர். சித்ரா அவர்கள் "ஜப்பானில் இந்தியக் கலைகள்" என்பது பற்றி 24-ஆம் தேதியன்று சர்வகலா சாலை பரீக்ஷை மண்டபத்திலே உபந்யசித்து ஒளிப்படங்களால் விஷயத்தை விளங்க வைத்தார். அவர் பேசியதின் சாராம்சம் வருமாறு: "இந்திய கலாஞானம் சீன தேசத்தின் வழியே ஜப்பானுக்குச் சென்றது. அங்குள்ள சன்னிவேசத்திற்கு ஏற்றவாறு அது ஜப்பானியக் கலைகளாகப் பரிணமித்தது. ஆதிகாலத்திலே தொடங்கிய கலைத் தொடர்பு இன்று மட்டும் விச்சேத மின்றி வந்துள்ளது. ஜப்பானிற் காணப்படும் ஆதிச் சித்திரக்கலை அஜாந்தாவிற் காணப்படும் சித்திரக்கலையைப் போன்றுள்ளது. 'காம கூரா' விலுள்ள 'தைபஸ்து' எனப்படும் புத்த விக்ரஹம் "புத்த கயா"விலுள்ள விக்ரஹத்தைப் போன்றது.

"ஜப்பான் பொம்மைகளுக்குப் பேர் போனது. நமது நாட்டிலும் திருப்பதி, பண்ருட்டி கொண்டபல்லி முதலிய இடங்களிற் செய்யப்படும் பொம்மைகள் பிரசித்தம். நவராத்திரியிலே நாம் பொம்மைக் கொலு வைத்து விழா வெடுப்பது போல ஜப்பானிலும் "பொம்மைவிழா" நடைபெறுகிறது. "நோ" நாடகம் என்ற ஜப்பானிய நாடக வகை தமிழ் நாட்டுத் 'தெருக்கூத்'தினையும் வட நாட்டு "ராம்லீலா" வையும் போன்றது. இதன் நடிப்பும் பாரத நாட்டியத்தை அனுசரித்த ஜப்பானிய நாட்டியத்தையும் அபிநயத்தையும் அடிப்படையாகக் கொண்டது. 'ககுராம்' என்று பெயர்பெற்ற மத சம்பந்தமான நாட்டியவகை யொன்றும் பரத நாட்டியத்தைப் போலவே அலௌகிகத்தன்மை வாய்ந்து இன்பம் பயக்கின்றது".

மறுநாள் மாலை 'ரானடே' மண்டபத்திலே ஸ்ரீ. டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரின் பேரால் ஏற்படுத்திய வருஷ உபந்யாசமாக அட்வோகேட் ஸ்ரீ. கே. சந்திரசேகரையரவர்கள் இந்தியக்கலைகளின் சொரூபத்தை அறிதற்கான மார்க்கத்தை விளக்கினார். அவர் பேசியனதின் சாரம் வருமாறு:—

'உலகத் தோற்றங்களையும் நிகழ்ச்சிகளையும் உள்ளபடியே அமைத்துக் காட்டுவதுதான் கலையின் நோக்கமாகும்' என்ற கொள்கை தற்காலத்தில் எங்கும் பரவியுள்ளது. நமது இந்தியக் கலைகளின் நோக்கம் வேறு. அது அத்யாத்ம ஞானத்தாலும் பரம்பரையாக வந்த கலாஞானத்தாலும் அசாதாரண வடிவு பெற்றுள்ளது. உலகானுபவங்களையும் நிகழ்ச்சிகளையும் அப்படியே புகைப்படத்திலே போலச் சித்திரிக்கும் வித்தையை நம் கலைஞர்கள் அறியாதவர்களா? அறிந்தும் அது அருவருக்கத்தக்கதோர் இழிந்த மார்க்கமென்று கருதியதாலேதான் அவ்வழியை அவர்கள் அவலம்பிக்கவில்லை. இந்தியக் கலைஞரின் நோக்கம் இயற்கையிலுள்ள ரூபங்கள் பண்டங்கள் இவற்றினின்றும் ருசிகரமான அம்சங்களைத் தொகுத்து அழகுறச் சித்திரிப்பது அன்று; இயற்கைத் தோற்றங்களில் அந்தர்கதமாயுள்ள அரும்பெருந் தத்துவத்தைத் தியானத்தால் அறிந்து சமாதி நிலை பெற்றுத் தாம் கண்ட உண்மைகளைப் பிறருக்கு விளங்கக்கூடிய வகையிலே அமைப்பதே இந்தியக் கலைஞரின் முக்கிய நோக்கம். இதனை இலக்கிய விமர்சகர் ரஸாவிஷ்காரம் என்பர். இலக்கியத் துறையிலேபோல சிற்பம், சித்திரம், நாட்டியம், சங்கீதம் முதலிய துறைகளைப் பயிலும் கலைவாணர்கள் அனைவருமே நவரஸங்களையும் காண்போர் கேட்போர் மனதிலே எழுமாறு உதவுதலையே தங்கள் காரியமாகக் கொண்டவர்கள். பலகலைகளும் ஒரே பரமார்த்தத்தின் கலைகள்; அந்த பரமார்த்தத்தை அடைவதற்கான மார்க்கங்கள்; ஒரு கலையை மட்டும் அறிவது இயலாது; பலவகைப்பட்ட கலைகளுக்கும் உத்தேசியம் ஒன்றே; ஆதலால் அவை ஒன்றோடொன்று பின்னிக்கிடப்பனவாய் ஒன்றையொன்று போஷிப்பனவாய் ஒன்றை நன்கறிவதற்கு மற்றவை இன்றியமையாதனவாய் உள்ளன. ரஸங்களைப் பயப்பது எப்படியென்பதை ஆராய்ந்து, ஒவ்வொரு கலைக்கும் அனுபவத்தாற் கண்டறிந்த விதிகளை முன்பிருந்த கலா நிபுணர்கள் விதித்திருக்கிறார்கள். இவ்விதிகளையும் பரம்பராப் பிராப்தங்களான அநுபவவிதிகளையும் கொண்டு இயற்றும் கலாசிற்பங்கள் மேற்பார்வைக்கு ஒரே வஸ்துவைப்போலத் தோன்றி பாமரனுக்கு அருவருப்பை உண்டு பண்ணுகின்றன; ஆனால் இச் சிற்பங்களின் ஒற்றுமைப் பாடுகளினுள்ளே அமைந்திருக்கும் தனிப்பட்ட சிறப்புகளே ரஸிகருக்குத் தோன்றி இன்பம் பயக்கும். உதாரணமாக, "எல்லாச் சித்திரங்களிலும் தாமரை, வளைந்த கோடுகள் முதலியவையே மீண்டும் மீண்டும் காண்கிறோம். பாடகர்கள் அதே ராகங்களைச் சற்றும் ஸ்வர மாறுபாடின்றிப் பாடி நமது காதுகளைத் தொளைக்கிறார்கள்" என்று பாமரனுக்குத் தோன்றுகிறது. ஆனாலும், பிறர் இகழ்வார்களே யென்று அவன் "ஆஹா" என்று ரஸிப்பவன்போலப் பாசாங்கு செய்கிறான். நமது சிற்பங்கள் இயற்கைக்கு எவ்வளவோ மாறுபட்டு ஆபாஸமாக இருக்கின்றன என்று தோன்றினாலும், ஊரையொத்து அவைகளை மெச்சிப் பேசுகிறான். மேலெழுந்த ஸாதிருசியத்தை ஊடுருவி அதனுள் அமைந்துள்ள கற்பனா வைசித்திரியம் அவனுக்குப் புலனாவதில்லை. அவையெல்லாம் புலனாதற்கு யாதொரு விதமான கல்வியும் தேவையில்லை. நமது கலைஞர்களிடத்திலே பக்தியும் நமது அறிவீனத்தை அவர்கள் மேல் ஏற்றி இகழாத மனோபாவமுமே தேவை. இவை கொண்டு நமது கலைஞர்களின் அபூர்வ சிருஷ்டிகளை நோக்கினால், அவ்வவற்றின் ரஸங்களையும் விசேஷகுணாதிசயங்களையும் அறிந்து இன்புற இயலும். மேலெழுந்த வாரியாக நோக்கினால், நம்முடைய வாழ்க்கையிலும் அருவருக்கத்தக்க ஸாம்யமே தோன்றும். ஆனால் மாறுபாடுகளுக்கு இடந்தராத வொழுக்க முறையைக் கண்டு சலிப்புறாது, 'இந்த ஸாம்ய நிலையே ஒவ்வொருவரும் தத்தமது இஷ்ட தெய்வத்தை நிர்யணித்துக் கொள்வதற்கு இடந்தருகின்றது' என்பதை அறிந்து இன்புறுவது போலவே, பொது விதிகளையும் நியமங்களையும் அனுஷ்டிக்கும் கலைவாணர்கள் தம்முடைய விசேஷ சக்திகளை தம்முடைய சிற்ப சிருஷ்டிகளின் மூலம் வெளியிடுவதற்கு அவ்விதிகளே சௌகரியம் அளிக்கின்றன என்பதை அறிவார்கள்.

வே. நா.